www.tamilarangam.net

# உயிர்ப்பு

4

ஆடி 1994

- மார்க்சியமும் தேசியப் பிரச்சினையும்
  -அமைப்பியல்வாதம் தரும் புதிய வெளிச்சம்
- தேச விடுதலைப் போராட்டமும் அதன் அரசியலும்
- உங்களிடமிருந்து எங்களுக்கு எங்களிடமிருந்து உங்களுக்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உயிர்ப்பு

## உங்களுடன் நாம்...

எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் இன்று தோன்றியிருக்கும் நெருக்கடிக்கான காரணங்களை சில தனிநபர்களிலும், சில சக்திகளிலும் கண்டறிய பலரும் முயலுகின்றனர். ஆனால் இந்த பின்னடைவுகளுக்கான மெய்யான காரணம் தன்னியல்புவாதத்தில் அடங்கியுள்ளது. யதார்த்தில் நடைபெறும் போராட்டத்திலும் பார்க்க கோட்பாட்டு முயற்சிகள் மிகவும் பின்தங்கிவிடுவதன் விளைவு இதுவாகும். எமது போராட்டத்தில் தோன்றியுள்ள தேக்கநிலையை களையவேண்டும் என்ற அக்கறை உடைய பலரும் இன்றைய நிலையில் இந்த விடயத்தை கருத்தில் கொள்வது அவசியமாகும்.

இன்று வரையிலும் எமது தேசிய விடுதலை போராட்டமானது கோட்பாட்டு ரீதியாக தன்னை நிலைநாட்டிக் கொள்ளவில்லை. பேரினவாதத்தின் சித்தாந்தப் பிடியினுள் தமிழ் முன்னேறிய பிரிவினர் இன்றுவரை சிக்கிக் கொண்டிருப்பதுதான் இவர்களிடையேயுள்ள இன்றைய குழப்பங்களுக்குக் காரணமாக அமைகிறது. ஒரு தேசம் தன்னை விடுவித்துக் கொள்வதாயின் முதலில் அது எதிரியின் சித்தாந்தப் பிடியில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்வது முன்நிபந்தனையாகின்றது. அந்த வகையில் இன்று 'மாற்று' பற்றிச் சிந்திக்கத் தலைப்படுபவர்கள் எமது போராட்டம் தொடர்பான கோட்பாட்டு முயற்சிகளில் கவனத்தைக் குவிப்பது முக்கியமானது.

எந்தவொரு போராட்டமும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவதற்கு அது மிகவும் முன்னேறிய கோட்பாட்டினால் வழிகாட்டப்படுவது முக்கியமானது. அந்த வகையில் மார்க்சியத்தில் ஏற்படும் புதிய வளர்ச்சிகளை எமக்குள் செரித்துக் கொண்டு அந்த புதிய வெளிச்சத்தினை எமது போராட்டம்தொடர்பான பிரச்சனைகளில் பாய்ச்சுவதும் இதன் மூலம் எமது போரட்டம் தொடர்பான புதிய புரிதல்களை எட்டுவதும் இன்றைய தேவையாகிறது. அந்த வகையில் 'மார்க்சியமும் தேசியப்பிரச்சனையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

# தேச விடுதலைப் போராட்டமும் அதன் அரசியலும்

தேவதாஸ்

இனப்பிரச்சினை என்ற ஒன்றே நாட்டில் கிடையாது. இருப்பதெல்லாம் பயங்கர வாதப் பிரச்சினை மட்டுமே" என்கின்றார் சிறிலங்கா அரசுத் தலைவர் விஜேதுங்க. யுத்தத்தை மேலும் தீவிரப்படுத்துவது, 'பயங்கரவாத்தை' பூண்டோடு ஒழிப்பது இதுவே சிறிலங்கா அரசின் ஒரே குறிக்கோளாக உள்ளது. பொதுவாக சிங்கள தேசமும், குறிப்பாக பேரினவாதிகளும் இதனையே வலியுறுத்துகின்றனர். தீவிரமான அரசியல் தலைமையும், ஆற்றல் மிக்க இராணுவத் தலைமையும் இல்லாமைதான் யுத்தத்தில் வெற்றியீட்ட முடியாமைக்கான காரணம் என்ற அபிப்பிராயம் அழுத்தம் பெற்றுள்ளது. சிங்கள தேசத்தை பிரதிநிதித்துவம் செய்த பாராளுமன்ற தெரிவுக்குழுவும் வடக்கு கிழக்கு மாகாணங்களைத் துண்டாடுவது என்பதைத்தான் தேசிய பிரச்சினைக்குத் தீர்வாக முன் வைத்துள்ளது. கடந்த காலங்களில் தமிழ் மக்கள் இறைமை, உரிமை பற்றிப் பேசிய போதெல்லாம் சிங்கள தலைமைகள் நிர்வாக பரவலாக்கல், மாவட்ட, மாகாண சபைகள் பற்றியே பேசிவந்துள்ளன என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. இன்று அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்தி வருகின்ற தமிழ் குழுக்களும் கூட, கூடுதலான நிர்வாக அதிகாரங்களை பெறக்கூடியவகையில் அரசியல்யாப்பை திருத்துவதையும், வடகிழக்கு இணைந்த மாகாண சபையையுமே கோரிவருகின்றன.

இதேவேளை தமிழ்மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்ற குரல்கள் சிங்கள முற்போக்கு சக்திகள் மத்தியிலும் ஒலிக்கத்தான் செய்கின்றன. சிறிலங்கா அரசின் இன்றைய அரசியல் யாப்பிற்கு உட்பட்ட வகையில் கூடிய அதிகார பகிர்வு வழங்கப்பட வேண்டும் என்பது ஒரு சாராரின் முன்மொழிவாகும்; அரசியல்யாப்பை திருத்துவது அல்லது மீளவரைவதன் மூலம் சமஷ்டி முறை (Federal System) வழங்கவேண்டும் என்பது மற்றொரு சாராரின் தீர்வாகும்; மேலான கூட்டரசாங்கம், பரஸ்பர வீட்டோ அதிகாரம், பொருத்தமான விகிதாசார முறை, தனியான சுயாட்சி என்ற அம்சங்கள் அடங்கிய கொன்கேசியேசனலிசம் (Consowationalism) என்ற புதியவகை ஜனநாயக கருத்தாக்க அடிப்படையிலான தீர்வுபற்றியும் சில முற்போக்கு சக்திகள் மத்தியில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பேசப்படுகிறது. உண்மையில் இவ்வாறானவர்களின் நோக்கங்கள் தூய்மையானவையாக இருக்கலாம் என்றாலும், இவர்கள் இன்றுள்ள தேசிய பகைமை நிலையையும், முரண்பாட்டின் கூரிய தன்மையையும் எத்தகைய கோணத்திலிருந்து அணுகுகிறார்கள் என்பதும், தேசியஅரசியலை எவ்வாறு புரிந்து கொண்டுள்ளார்கள் என்பதும் கேள்விக்குரியதாக உள்ளது.

ஒட்டுமொத்தமாக நாம் இப்பிரச்சினையை ஆழமாகப் புரிந்து கொள்ள வேண்டுமாயின், இன்று நடைபெறுகின்ற யுத்தத்தின் தன்மையை முதலில் புரிந்து கொள்ளவேண்டும். யுத்தம் என்பது அரசியலின் தொடர்ச்சியே என்பதால், தேசியப் பிரச்சினைக்கான தீர்வு எதுவும் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் பொதிந்துள்ள அரசியலைப் புரிந்து கொள்வதுடன் இது தொடர்புபடுகிறது. எனவே இப்போதுள்ள பிரதான கேள்வி தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் அரசியல் என்ன? என்பதாகும். இந்த அரசியல் சாராம்சம் பற்றி இதுவரை எந்தளவிற்கு கறாராகப் பேசப்பட்டுள்ளது? இது பற்றிய தெளிவான புரிதல் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட, ஈடுபட்டு வருகின்ற சக்திகளுக்கு எந்தளவில் உள்ளது? என்பவை பரிசீலிக்கப்பட வேண்டியதாக உள்ளது.

இரண்டு தேசங்கள் இங்கு திட்டவட்டமாக நிலவுகின்றன. இவற்றில் சிங்கள தேசம் தனக்கென இறைமைமிக்க ஒரு அரசினைப் பெற்றுள்ளதுடன், இவ்வரசு அதிகாரத்தின் துணை கொண்டு அனைத்து வழிகள் மூலமும் தமிழ் தேசத்தை ஒடுக்கு முறைக்குள்ளாக்கி வருகின்றது. இவ்வொடுக்கு முறைகள் சகிக்க முடியாததாகி விட்ட ஒரு நிலையில் தமிழ் தேசம் தனக்கென ஒரு தனியான ஒரு அரசை, தேச–அரசை அமைத்துக்கொள்ள விழைகிறது. அவ் இலக்கினை அடைய தொடர்ந்தும் போராடி வருகின்றது. தனியரசை அமைத்துக் கொள்ளவென எல்லா தேசங்களுக்கும் உரிய அந்நியப்படுத்த முடியாத உரிமையாகிய சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ்தேசம் போராட்டத்தை தீர்க்கமாக முன்னெடுத்துச் செல்கிறது.

தமிழ் தேசம் பொதுவான வரலாற்றைக் கொண்டுள்ளது என்ற வகையிலும், இவ்வரலாற்றினுள் காணப்பட்ட சொந்த அக மோதல்கள் மற்றும் வேறுபாடுகளை விடவும் கூடுதல் முக்கியத்துவம் வாய்ந்ததாக பொதுவான ஒடுக்கு முறைகளையும், துன்பங்களின் நினைவுகளையும் இத் தேசம் சுமந்துள்ளது. மேலும் தமிழ்சமூகம் தாம் ஒன்றாக வாழ்வதற்குரிய ஆழமான விருப்பைக் கொண்டுள்ளது. அதுமட்டுமல்ல இவர்கள் வருங்காலத்தில் கூட்டாக இணைந்து எதிர்காலத்தில் பல சாதனைகளை நிகழ்த்தும் அடங்கா ஆர்வத்தினையும் கொண்டுள்ளனர். இப்படிப்பட்ட இன்றியமையாத நிபந்தனைகளை தன்னகத்தே கொண்டுள்ள தமிழ்தேசமானது, இவை அனைத்தையும் நிறைவு செய்யும் வகையில் தனக்குரிய தேசஅரசினை ஸ்தாபிக்கும் தீரா ஆர்வத்தினை வெளிப்படுத்துகிறது.

தேசம் என்பது வெறும் சூட்சுமமான கருத்தாக்கம் அல்ல. மாறாக ஸ்தூலமான இருப்பாகும். தேசஅரசு அல்லது அதனை அமைப்பதற்கான போராட்டம் என்பதே தேசத்தின் ஸ்தூலமான வடிவமாகும். தேசம்என்பது அரசு என்பதுடன் பிரிக்கமுடியாத வகையில் நெருக்கமாக பிணைந்திருப்பதாகும். இந்த வகையில் தேசம் என்பது ஓர் அரசியல் வகையினமாகும். (Political Catagory). சுயநிர்ணய உரிமை என்பது முழுமையாகவும் பிரத்தியோகமாகவும் அரசியல் மற்றும் ஜனநாயகத்துறைகளுக்கு உரித்தாகிறது. அதாவது அரசியல் ரீதியில் பிரிந்து சென்று சுதந்திரமான தேசஅரசை ஸ்தாபிப்பது என்பதாகிறது என லெனின் திட்டவட்டமாகவே குறிப்பிட்டிருப்பதையும் இங்கு குறித்துக்கொள்வோம்.

திட்டவட்டமாக தனியொரு தேசமாக உருவாகிவிட்ட தமிழ்மக்கள் தமக்கென அரசு ஒன்றை ஸ்தாபிப்பதென்பது தவிர்க்கமுடியாத இன்றையவரலாற்றுத் தேவையாகி விட்டது. இதுவே இன்றைய யுத்தத்தின் பின்னணியிலுள்ள அரசியலாகும். தமிழ்மக்களது தேசவிடுதலைப் போராட்டத்திலுள்ள இந்த அரசியலை ஒருவர் சரியாக பற்றிப்பிடிக்காதவரையிலும் அவர் தேசியப்பிரச்சினைக்குத் தீர்வினைக் காண்பது மட்டுமல்ல, அதனைப் புரிந்து கொள்வதும் கூட சாத்தியப் படமாட்டாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ் மக்களது தேசிய விடுதலைப் போராட்டத்திலுள்ள இந்த அரசியலை மறுப்பதற்கும், மறைப்பதற்கும் சிங்கள பேரினவாதம் எப்போதுமே கடும் பிரயத்தனப்பட்டு வந்துள்ளது. விடுதலைப் போராட்டத்தை வெறும் பயங்கர வாதப் பிரச்சினையாகவும் அதாவது சட்ட ஒழுங்குப் பிரச்சினையாகவும் அன்றேல் நிர்வாகப்பரவலாக்கல் பற்றிய பிரச்சினையாகவுமே காட்டி வந்துள்ளது. தேசியப்பிரச்சினையானது வெறுமனே கலாச்சார, நிர்வாக, சட்ட ஒழுங்குப் பிரச்சினைகளாக கருதி கையாள முற்படுகையில் அது அரசியல் நீக்கம் (De-Politi sized) செய்யப்படுகிறது என்பதைக் கவனிக்க வேண்டும்.

## காலாச்சார குழுமம் :

தமக்கென பிரத்தியேகமான தனித்துவம் மற்றும் கலாச்சார அடையாளங்களைக் கொண்டதும், அதேவேளை அந்தக் கலாச்சார வேறுபாடுகளின் அடிப்படையில் தமது விழுமியங்களை (Values) உருவாக்கிக் கொள்ளும் அளவிற்கு வளர்ச்சி பெறாததும், இதனால் தமது சமூக, பொருளாதார அரசியல் கோரிக் கைகளுக்கு இந்த கலாச்சார வேறுபாடுகளை அடிப்படையாகக் கொள் ளாததுமான மக்கள் கூட்டமே கலாச்சார குழுமம் ஆகும். இங்கு குறிப்பிட்ட மக்களிடம் காணப்படும் புறநிலையான கலாச்சார அம்சங்கள் என்பவை தனிப்பட்ட அம்சங்களாக கருதப்படுகின்றன

வடக்கு கிழக்கு இணைப்பை வலியுறுத்தும் போதும், கூடிய அதிகாரப் பகிர்வை கோரும் போதும் தமிழ் குழுக்களும் கூட ஒரு அரசியல் வகையினத்தை வெறுமனே காலாச்சார, நிர்வாக வகையினமாக குறுக்கி விடும் பேரினவாதத்தின் முயற்சிகளுக்கு ஏதோ ஒருவிதத்தில் துணை போகத்தான் செய்கின்றன.

அரசியல் வகையினத்திற்கும் ஏனைய காலாச்சார. நிர்வாக வகையினங்களுக்கும் இடையிலான துல்லியமானவேறுபாடுகளைக் குறித்துக் கொள்வது இங்கு முக்கிய மாகிறது. எனவே இப்பிரச்சினையுடன் தொடர்புடைய சில கருத்தாக்கங்களை நாம் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது. மக்கள் திரளானது அதன் வரலாற்றின் வெவ்வேறு வளர்ச்சிக் கட்டங்களில் குறிப்பான வெவ்வேறு சமூகப்பண்புகளைக் கொண்டமைகிறது. அவற்றை பிரதானமாக இவ்வாறு வகைப்படுத்தலாம்.

இரண்டு தேசங்கள் இங்கு திட்டவட்டமாக நிலவுகின்றன. இவற்றில் சிங்கள தேசம் தனக்கென இறைமைமிக்க ஒரு அரசினைப் பெற்றுள்ளதுடன், இவ்வரசு அதிகாரத்தின் துணை கொண்டு அனைத்து வழிகள் மூலமும் தமிழ் தேசத்தை ஒடுக்கு முறைக்குள்ளாக்கி வருகின்றது. இவ்வொடுக்கு முறைகள் சகிக்க முடியாததாகி விட்ட ஒரு நிலையில் தமிழ் தேசம் தனக்கென ஒரு தனியான ஒரு அரசை, தேச-அரசை அமைத்துக் கொள்ள விழைகிறது.

## இனக் குழுமம் :

ஏனைய குழுக்களில் இருந்து தம்மை வேறு படுத்தும் தனித்துவமான கலாச்சார வேறுபாடுகள் குறித்து சுயபிரக்ஞை கொள்வதுடன், இந்த கலச்சார வேறுபாடுகளின் அடிப்படையில் தம்மை பிற குழுக்களை விட உயர்வானதாக அல்லது குறைந்த பட்சம் பிற குழுக்களுக்குச் சமைதையான ஒரு அங்கீகாரத்தை கோரும்நிலையில் அந்த மக்கள் கூட்டம் இனக்குழுமமாக அமையும்.

## தேசம்

இனக்குழுமங்கள் அரசியலில் நுழையும் போது இனத்துவ அடிப்படையில் சமூக,பொருளாதார



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"கலாச்சார குழுமம் என்பது ஒரு கலாச்சார வகையினமாகவும், இனக்குழுமம் என்பது ஒரு நிர்வாக வகையினமாகவும், தேசம் என்பது ஒரு அரசியல் வகையினமாகவும் அமைகின்றன."

கோரிக்கைகளை முன் வைக்கத் தொடங்கும் போது, அவை தேசியவாத அரசியலில் ஈடுபடத் தொடங்குகின்றன. இதன் ஒரு வளர்ச்சி நிலையாக தமக்கென தனியான அரசியல் அதிகார அலகுகளை பெறுவதை நோக்கிச் சிந்திக்கத் தலைப்படுகின்றன. இந்நிலையில் அவை தேசங்களாக பரிணமிக்கின்றன. தேசத்திற்கு பொருத்தமான அரசியல் வடிவம் தேச அரசுதான் என்பதை தேசியவாத இயக்கத்தின் கடந்த இரண்டு நூற்றாண்டு கால வரலாறு திரும்பத் திரும்ப நிரூபித்துள்ளதை இங்கு குறித்துக் கொள்வோம்.

கலாச்சார குழுமம் என்பது ஒரு கலாச்சார வகையினமாகவும், இனக்குழுமம் என்பது ஒரு நிர்வாக வகையினமாகவும், தேசம் என்பது ஒரு அரசியல் வகையினமாகவும் அமைகின்றன. பொதுவில் எந்தத்துறைகளாக இருப்பினும் கூட, குறிப்பிட்ட வகையினங்களை அவற்றிற்கே உரிய மட்டத்தில் வைத்து கையாளும் போதுதான் அந்தந்தத் துறைகளில் எழும் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதும் சாத்தியமாகும். இந்த வகையில் தேசியப் பிரச்சினைக்கு ஆரோக்கியமான தீர்வினைக் காணவிளையும் எவருமே தேசம் என்பதை ஓர் அரசியல் வகையினமாகப் புரிந்து கொண்டு, அதனை அரசு அதிகாரத்துடன் தொடர்புபடுத்திக்கொள்ளும் போதுதான் இப்பிரச்சினைக்கும் தீர்வு காணமுடியும். மாறாக, வெறும் கலாச்சார, நிர்வாகவகையினமாக தேசத்தைக் குறுக்குவது, அல்லது தேசியவிடுதலைப் போராட்டத்தின் அரசியலை புரிந்து கொள்ளத் தவறுவது எவ்வித பயனுள்ள செயற்பாட்டிற்கும் வழிவகுக்காது.

இக் கருத்தாக்கங்களுடன் தமிழ் தேசிய வரலாற்றினை ஒப்பு நோக்குவோமாயின், தமிழ்சமூகம் மிக நீண்ட காலத்திற்கு முன்பே ஓர் இனக்குழுமமாகப் பரிணமித்து விட்டது. சுதந்திரத்திற்கு முந்தியும், சுதந்திரத்தை அடுத்து வந்த உடனடியான காலகட்டத்திலும் அது தேசியவாத அரசியலில் ஈடுபடத் தொடங்கியது. இதன் வளர்ச்சியாக 1970 களில் தனியான அரசுபற்றிப் பேசத்தொடங்கி, இப்போது தனியான அரசை அமைப்பதற்காக போராடிக் கொண்டிருக்கிறது. இன்று தமிழ்மக்கள் திட்டவட்டமாக ஒரு தேசமாகிவிட்டனர். இதற்கு மேல் இச்சமூகத்தின் பிரச்சினைகளை ஒரு அரசுடன் இணைத்தே புரிந்து கொள்ளமுடியும்.

தமிழ் சமூகம் பிராந்திய சுயாட்சி, சமஷ்டி அமைப்பு போன்ற கோரிக்கைகளை முன் வைத்தகாலம் இருந்தது என்பது உண்மைதான். ஒரே அரசுக் கட்டமைப்பினுள் சமத்துவமான உரிமைகளுடனும், தனித்துவமாகவும் வாழமுடியும் என்ற நம்பிக்கை நிலவிய ஒரு கட்டத்தில் சுயாட்சி அமைப்புகள் ஓரளவு சாத்தியமான தீர்வுகளாக இருந்திருக்கக் கூடும். ஆனால் தேசிய பிரச்சினை கூர்மையடைந்து விட்ட இன்றைய நிலைக்கு தனியான தேச–அரசுதான் பொருத்தமானதும் வரலாற்று பூர்வமானதுமான தீர்வாகின்றது.

தமிழ் தேசம் தனியான தேச அரசை ஸ்தாபித்துக் கொள்வது என்பது பரவலாக பேசப்பட்டுவரும் சுயாட்சி என்ற கருத்தினத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். பகுதிச் சட்டவாக்க அதிகாரங்கள், நிர்வாக பரவலாக்கல் உள்ளிட்ட மைய அரசினால் வழங்கப்படுகின்ற சீர்திருத்தவாத சலுகைகளுக்கு மாறாக தமிழ் தேசம் தனது பூரண அரசியல் உரிமையை பிரயோகித்து இறைமை கொண்ட சுதந்திரமான அரசொன்றை நிறுவுவது என்ற விரிவான அர்த்தத்தில் இதனைப்புரிந்து கொள்ளவேண்டும்.

தனியான ஒரு தேசம் என்ற வகையில் தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு. அந்த வகையில் அரசியல் ரீதியில் பிரிந்து சென்று தனியரசு அமைப்பதுதான் இன்றைய வரலாற்றுத் தேவையும் ஆகும். இந்த விதமான தேச–அரசுக் கட்டமைப்பினுள் தமிழ் தேசமானது, சிங்கள தேசம் தனது அரசினுள் அனுபவிப்பது போன்ற அதே முழு இறைமையை அனுபவிப்பதாக இருக்கும். இந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இறைமையை ஒரு போதுமே சுயாட்சி போன்ற அமைப்பினுள் பெறமுடியாது. இறைமை கொண்ட ஒரு தேசம் அனுபவிக்கும் அதே அளவான உரிமைகளை சுயாட்சி அதிகாரத்தை மட்டும் பெற்றுள்ள பிறிதொரு சமூகம் அனுபவிப்பது ஒரு போதும் இயலாதா காரியமாகும்.

ஏற்கனவே ஓர் அரசினைக் கைவரப் பெற்றுள்ள ஒரு தேசத்தால் மிக மோசமாக ஒடுக்கப்பட்டு கடைக் கோடிக்குத் தள்ளப்பட்டுவிட்ட பிறிதொரு தேசம், இனியும் இணைந்து வாழ்வது சகிக்க இயலாது என்ற கட்டத்தில் தான் தனது சுயநிர்ணய உரிமையை பிரயோகிக்கிறது. இந்த வகையில் தமிழ் தேசம் சொந்த தேச–அரசினை நிறுவிக் கொள்வது ஒரு புரட்சிகரமான அம்சமே. இக் கோட்பாடானது வரலாற்றில் எண்ணற்ற தடவைகள் நிரூபிக்கப்பட்டாகி விட்டது. இப்படிப்பினையை தமிழ் தலைவர்கள். அதிலும் போரட்டத்தை தீவிரமாக முன்னெடுத்த குழுக்களும் கூட இதுவரை உறுதியாகப் பற்றிப் பிடிக்காதது துரதிஸ்டமே.

மேலும் தனித்தனி இரண்டு சுதந்திரமான தேசம்–அரசுகளாக நிலவ வேண்டிய யதார்த்தம் இப்போதும் மறுக்கப்படுவதால் மூண்டிருக்கும் பகைமைக்கும், தேசிய முரன்பாடு காரணமாக புரையோடிப் போயுள்ள குரோதங்களுக்கும் முடிவுகட்டுவதான ஓர் அரசியல் தீர்வாகவும் இதனைக் கருதவேண்டும். அந்தந்த தேசம் தமது தரப்பில் உண்மையான ஜனநாயக மக்கள் குடியரசை உருவாக்க வல்ல முழுவாய்ப்பையும் திறந்து விடும் ஒரு புரட்சிகர அரசியல் தீர்வாகவும் இதனை நோக்க வேண்டும்

சிங்கள தேசத்தைப் பொறுத்தவரையில் அது எப்போதும் தமிழ் தேசத்தின் இருப்பையே மறுத்து வருகின்றது. தமிழ் தேசத்திற்குரியதான தனியான பிரதேசம், மொழி, கலாச்சாரம் போன்றவற்றை சிதைத்து தமிழ் மக்களை ஒரு தேசம் என்ற வகையில் இல்லாதொழிக்க தொடர்ந்தும் முயலுகிறது. போராட்டத்தில் பொதிந்துள்ள அரசியலை நீக்கம் செய்வதில் குறியாகவும் உள்ளது. இவையாவும் பேரினவாத ஒடுக்குமுறையின் பின்னணியில் எம்மால் புரிந்து கொள்ளத்தக்கதே. ஆனால் தமிழ் குழுக்களும் கூட பேரினவாதசக்திகளுடன் அவர்களுடைய அர்த்தத்திலேயே (Terms) பேசி சில சலுகைகளைக் கோரிப்பெற முயலுகின்றன. இதனால் இவைகளும் பேரினவாத பாஷையில் பேசி அதன் தாளத்திற்கு ஆடுபவைகளாக ஆகிவிடுகின்றன.

இக்குழுக்கள் தேசிய விடுதலைப் போராட்டத்தில் பொதிந்துள்ள அரசியலை சரியானபடி பற்றிப்பிடித்து அதில் திடமாக ஊன்றி நிற்பவைகளாகத் தெரியவில்லை. அப்படி இக்குழுவினர் தமிழ் தேசியக் கொள்கையில் ஊன்றி நிற்பவர்களாயின் இதுவரையிலுமான அனுபவங்களுக்குப் பின்னரும் இவர்கள் அரசியல் யாப்புத் திருத்தம் பற்றியும், மாகாணங்களின் இணைப்பு பற்றியுமே பேசிக்கொண்டிருக்க மாட்டார்கள். அன்று எந்த ஒடுக்கு முறையாளர்களை எதிர்த்து தீவிரமாக போராடினார்களோ அவர்களையே தஞ்சமடைந்திருக்க மாட்டார்கள். இன்னும் சிலர் கூலிப்படை நிலைப்பாடுகள் வரைக்கும் சென்றிருக்கமாட்டார்கள். தனியான தேச – அரசை அமைக்கும் வரலாற்றுத் தேவை என்ற இந்த அரசியலை உறுதியாக பற்றிப்பிடிக்காத வரையிலும் இவர்களால் தேசியப் பிரச்சினையில் என்றென்றைக்குமே காத்திரமான பங்கை ஆற்றமுடியாது.

உண்மையில் விடுதலைப் போராட்ட அரசியலின் சாராம்சமே இதுதான். ஆனால் தமிழ் முற்போக்கு பிரிவினரில் இன்னுமொரு தரப்பினரோ இன்னமும் ஐக்கிய இலங்கை பற்றியும், இரண்டு தேசங்களும் சமத்துவமாக வாழும் வழிமுறை பற்றியும் பேசிக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் உண்மையில் இதனைத்தான் சாதிக்க விழைகின்றார்கள் எனக் கொண்டால், குறைந்த பட்சம் தாம் கொண்டுள்ள இந்த நிலைப்பாட்டினை சாத்தியமாக்கும் வகையில் காத்திரமாக செயல்பட்டாக வேண்டும். இவர்கள் நம்புகின்ற அரசியல் தீர்வின் கீழ் தமிழ் தேசத்திற்கு முழுமையான சமத்துவம், ஜனநாயகம், சுதந்திரம் என்பவற்றைப் பெற்றுத்தர தமது வழியிலாயினும் இவர்கள் செயல்பட வேண்டும். அப்படிப்பட்ட செயற்பாடுகள் எதிலும் உருப்படியாக ஈடுபடவில்லை என்றால் இது தப்பியோடுதல் (Escapism) என்றுதான் அர்த்தமாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெரும்பாலும் இவர்களை ஒத்த நிலைப்பாடுகளைக் கொண்டவர்களாகக் காணப்படும் சிங்கள இடதுசாரிகள், புத்திஜீவிகளை எடுத்துக் கொண்டால், இவர்களைப் பொறுத்தவரையில் தேசியப் பிரச்சினையில் அக்கறையுடன் தலையிடுகின்ற நல்லெண்ணம் கொண்ட பிரிவினராக உள்ளனர். உண்மையில், இரண்டு தேசங்கள் திட்டவட்டமாக நிலவுவதை இவர்கள் அங்கீகரித்து, அவை தனித்தனியான அரசுகளைக் கொண்டிருப்பதன் மூலமே இன்றைய தேசிய பூசலுக்கு முடிவுகட்ட முடியும் என்ற உண்மையை சிங்கள மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லவேண்டும். மாறாக, ஒரே அரசின் கீழ் இரண்டு தேசங்களும் ஐக்கியப்பட்டு வாழலாம் என இவர்கள் இன்னமும் கருதுவார்களாயின், அதனை நோக்கிய செயற்பாடுகள், இரு தேசங்களும் சமத்துவமாக முழு அதிகாரங்களையும் பகிர்ந்து கொள்வதை உத்தர வாதப்படுத்தும் முன்னெடுப்புகளாக அமைய வேண்டும். தேசிய இனப்பிரச்சினை தீரவேண்டும் என்ற இவர்களின் நோக்கம் இதயசுத்தியானதுதான் என்றால், அரசியல் யாப்பு, தேசியக்கொடி.........போன்ற அனைத்தையும் மாற்றியமைக்க இவர்கள் முனைய வேண்டும். இவை எதுவும் சாத்தியப்படாது என்பது எமது கருத்தாகும். மாறாக, சிங்கள தேசத்தின் முதுகுக்குப் பின்னால் இரகசியமாக இனப்பிரச்சினைத் தீர்வை நாடுவது, பேரினவாத அரசியல்வாதிகளை திருப்தி செய்ய முனைவது எதுவும் வெறும் பாசாங்கு, ஏமாற்றுகள் மட்டுமே. இதுவும் கூட இன்னோர் விதத்தில் பேரினவாதத்திற்கு பணிந்து போகும் நடவடிக்கையே.

இவ்வாறாக இன்றைய யுத்தத்தின் பின்னணியாக உள்ள அரசியலை நாம் புரிந்து கொண்டால், இப்பிரச்சினையானது இயல்பான அரசியல் வழிமுறை எதனாலும் தீர்க்கப்படாதவிடத்து உறுதியான யுத்தம் ஒன்றின் மூலம்தான் தீர்க்கப்பட வேண்டும் என்றாகிறது. யுத்தம் என்பது அரசியலின் தொடர்ச்சி என்பதை இந்த அர்த்தத்தில் புரிந்து கொள்ள வேண்டும்.

ஐக்கியப்பட்ட புரட்சிபற்றியே இன்னமும் பேசிக் கொண்டிருக்கும் தமிழ், சிங்கள இடதுசாரிகளைப் பொறுத்த வரையில் இவர்கள் முதலில் தேசியவாதம் பற்றிய சரியான புரிதலைப்பெற வேண்டும். தேசியவாதம் என்பதே பிற்போக்கானது என்ற கிளிப்பிள்ளைவாதமே இவர்கள் மத்தியில் இப்போதும் காணப்படுவதாக தோன்றுகிறது. தேசியவாதத்தின் பன்முகத்தன்மை, குறிப்பான சமூக, வரலாற்று நிலைமைகளில் தேசியவாதம் வகிக்கக்கூடிய முற்போக்கான பாத்திரம், வரலாற்று வளர்ச்சிக் கட்டத்தில் தேசியவாதத்தின் தவிர்க்க முடியாததன்மை, போன்றவை பற்றிய விரிவான புரிதலை இவர்கள் பெறவேண்டும். தமிழ் தேசம் வரலாற்று ரீதியில் தனியான தேச-அரசை அமைக்க வேண்டியிருப்பது இன்றைய புறநிலை விதி என்ற யதார்த்தத்தை இவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். கோட்பாட்டுப் பற்றாக்குறைகளையும், புறநிலை பற்றிய அப்பாவித் தனமான பார்வைகளையும் களைந்தெறிய வேண்டும். தமிழ் முன்னேறிய பிரிவினரைப் பொறுத்தவரையில் இப்போதும் ஐக்கியப்பட்ட புரட்சிபற்றிப் பேசுவது ஒருவகை தப்பியோடல்தான் என்பதை மீண்டும் அழுத்திக் கூற வேண்டியுள்ளது. புரட்சிகர அரசியலை முன்னெடுப்பதற்கு ஒருவரிடம் நல்லெண்ணம் மாத்திரம் இருந்தால் போதாது கோட்பாட்டு ரீதியான சரியான புரிதலும், புறநிலை யதார்த்தம் பற்றிய கூர்மையான பார்வையும் அவசியமாகும். இவை இல்லாதபோது அரசியல் ரீதியில் இழைக்கப்போகும் தவறுகளில் இருந்து நல்லெண்ணங்கள் எதுவுமே இவர்களைக் காப்பாற்றி விட மாட்டாது.

## போராட்டமும் தலைமையும் பற்றிய பிரச்சனை:

இன்றைய போராட்டத்தில் பல மோசமான குறைபாடுகள் காணப்படுவதைக் காரணமாகக் கொண்டு சிலர் முழுப் போராட்டமுமே தவறானது என்ற முறையில் நிராகரிக்க முனைவதைக் காண்கிறோம். இது அடிப்படையிலேயே தவறான பார்வையாகும். போராட்டம்-தலைமை ஆகியவற்றிற்கிடையிலான உறவு பற்றிய பிரச்சினையை தவிர்க்க முடியாது இது எழுப்புகிறது. நெருங்கி அவதானித்தால் போராட்டம்-தலைமை என்பவற்றிற் கிடையிலான உறவு என்பது முழுமை-பகுதிக் கிடையிலான உறவே என்பது தெளிவாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போராட்டம் முழுத்தேசத்தையும் உள்ளடக்கிய ஒன்று. அது தேசத்தின் வரலாற்றுப் போக்கையே முழுமையான உள்ளடக்கமாகக் கொண்ட ஒரு நிகழ்வுப் போக்காகும். தலைமை என்பது அவ்வாறான போராட்டத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் முதன்மையான, தலைமை தாங்கும் பாத்திரத்தை ஆற்றுகின்ற ஒரு குறிப்பிட்ட பிரிவினர் தொடர்பானதாகும்.

விடுதலைப் போராட்டமானது ஒரு தேசத்தின் முழு வரலாற்றுப் போக்கினால் உருவாக்கப்பட்டதும், அதன் பொதுவான வரலாற்று விதியினால், அதன் அரசியல் அம்சத்தினால் நிர்ணயிக்கப்படுகின்றதுமான ஒன்றாகும். இப் போராட்டத்திற்கு உட்பட்டு அமையும் தலைமை என்பதோ குறிப்பிட்ட சமூகத்தில் நடைபெறும் வளர்ச்சியில் அச்சமூக இயக்கத்தில் காணப்படும் குறிப்பான நிலைமைகளுடன் தொடர்புடையாதாகும்; அடிக்கடி மாறிச் செல்வதாகும். குறித்த போராட்ட வளர்ச்சிப் போக்கில், அவ்வளர்ச்சியின் வேறுபட்ட நிலைமைகளில் பலதரப்பட்ட சக்திகளும் போரட்ட அரங்கிற்கு மாறி மாறி வந்து தலைமையேற்கின்றன. போராட்டத்தின் தொடர்ந்த வளர்ச்சிப்போக்கில் இத்தலைமைகள் காலாவதியாக இவை அரங்கிலிருந்து வெளியேற்றப்படுகின்றன. எனவே எந்தவொரு போராட்டத்தையும் மதிப்பிடுகையில் போராட்டத்திற்கும் அதன் தலைமைக்கும் இடையிலான வேறுபாடுகளை இனங்காண்பது மட்டுமல்ல, இவற்றுக்கு இடையிலான உறவையும் ஓர் இயக்கப் போக்கில் வைத்துப் புரிந்து கொள்ளவும் வேண்டும்.

இப்புரிதலுக்கு அடிப்படையாக, முழுமை-பகுதி என்பவற்றிற்கிடையிலான இயங்கியல் உறவை முதலில் தெளிவாக்கிக் கொள்வோம். முழுமை என்பது ஒன்றுக்கொன்று வேறுபட்ட பல பகுதிக்கூறுகளின் உறவில் உருவாவதாகும். குறித்த ஒரு பகுதி அம்சமானது ஒரு கட்டத்தில் முன்னிலைப்பாத்திரத்தை வகிப்பதானது பல்வேறு சமுக வரலாற்றுக் காரணிகளுடன் தொடர்புடையதாகும். மாறாக பகுதியை-அது தலைமை ஸ்தானத்தில் இருப்பினும் கூட -முழுமையின்-முழுப் போரட்டத்தின்-சாரமாக பார்ப்பது, பகுதியின் பண்புகளை அப்படியே முழுமையில் ஏற்றி வைப்பது தவறானதாகும். அதாவது விடுதலைப் புலிகளின் குறைபாடுகளை அப்படியே முழுப்போராட்டத்தின் மீதும் ஏற்றுவது, பகுதி-முழுமை என்பவற்றிற் கிடையிலான இயங்கியல் உறவை புரிந்து கொள்ள தவறுவதாக ஆகிவிடுகிறது.

முழுப்போராட்டமும் குறிப்பிட்ட தேசத்தின் வரலாற்று விதியுடனும், அதன் அரசியலுடனும் இணைத்தே புரிந்து கொள்ளப்பட வேண்டியதாகையால், தேசிய விடுதலைப் போராட்டத்தை அதனை தலைமை தாங்கும் சக்தியாகிய விடுதலைப் புலிகளைக் கொண்டல்லாமல் இதில் பொதிந்துள்ள அரசியல் அம்சத்தை கொண்டேதான் புரிந்து கொள்ள வேண்டும். இங்கு போராட்டத்தின் பகுதியாக அமைகின்ற தலைமையின் தவறானது ஒரு வகையில் தன் பங்கிற்கு ஒட்டு மொத்தப் போராட்டத்தையும் ஓரளவிற்கு கறைப்படுத்தவே செய்யும் என்றாலும் கூட போராட்டத்தின் நியாயபூர்வமான தன்மையை இறுதியில் நிர்ணயிப்பது அதிலுள்ள அரசியல் அம்சமே ஆகும்.

தமிழ் கொங்கிரஸ் தொடக்கம் வி . புலிகள் வரை பல தலைமைகளை தமிழ் மக்கள் தமது அரசியல் வரலாற்றில் கண்டுள்ளனர். பொருத்தமற்ற தலைமை நிராகரிக்கப்பட்டு புதிய தலைமை அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவ்வரலாற்றுப் போக்கிற்கு புலிகள் மட்டும் விதிவிலக்கல்ல. எனினும் மக்கள் புலிகளை நிராகரிப்பது தன்னியல்பாக நடந்து முடியாது. இங்கு புதிதாக தோன்றும் வரலாற்று நிலமைகளுக்கு பொருத்தமான புதிய போராட்டசக்திகள் அரங்கிற்கு வந்த பின்னரே பழைய சக்தியை மக்கள் தூக்கி எறிவர். இந்த விதமான 'நிலை மறுப்பு' என்பது பொதுவில் சமூகத்தில் நடைபெறும் அனைத்து மாற்றங்களையும் தழுவிய பொதுவிதியாகும். சமூகத்தின் வரலாற்றுத் தேவையை இன்னும் சிறப்பாக நிறைவு செய்யவல்ல பிறிதொரு சக்தியினர் வருகையுடன் தொடர்புடையதாகவே மக்கள் புலிகளை நிராகரிப்பதும் அமைகிறது. அத்தகைய புரட்சிகர மாற்றம் கூட தன்னியல்பாக தோன்றிவிடாது. மாறாக புரட்சியாளர்கள் முனைந்து இம்மாற்றினைக் கட்டமைக்க வேண்டும்.

தேசவிடுதலை என்பது தமிழ் மக்களின் வரலாற்றுத்தேவை என்றாகிவிட்டது. எனவே அதனை நிறைவு செய்யும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வகையில் போராட்டத்தை முன்னெடுக்கும் சக்திகளை தமிழ் மக்கள் ஆதரிக்கத்தயாராக உள்ளனர். கடந்த காலத்தில் புலிகளை மட்டுமல்ல, ஏனைய பல்வேறுபட்ட விடுதலை அமைப்புகளையும் கூட ஆதரித்தனர். இவை குறித்து மிகுந்த எதிர்பார்ப்புகளையும் கொண்டிருந்தனர். இந்நிலையில் தேசிய உரிமைகளைக் கோரும் தமிழ் மக்களுக்கு இன்று கிடைப்பதோ 'சுப்பர்சோனிக்' விமானக் குண்டுவீச்சுகளும், கடலேரிப் படுகொலைகளும் தான். பல குறைபாடுகளுடன் கூடத்தான் என்றாலும்– தேசவிடுதலையை ஓரளவிற்கு முன்னெடுக்கும் ஒரேசக்தியாக இருந்து, தமிழ் தேசத்தின் வரலாற்றுத் தேவையை புலிகள் ஏதோ ஒருவகையில் நிறைவு செய்ய முயலுவதாலுமே மக்கள் புலிகளின் மோசமான குறைபாடுகளையும் மீறி இன்னமும் அவர்களை ஆதரிக்கத் தலைப்பட்டுள்ளனர். இந்த ஆதரிப்பை மக்களின் கண்மூடித்தனமான வழிபாடாக நாம் கருதத் தேவையில்லை. ஏனெனில் எல்லாவற்றையும் தாண்டி தேசியவிடுதலை என்ற அடிப்படை அம்சம் மக்களுக்கு காத்திரமானதாக உள்ளது.

போராட்ட இலக்கானது வரலாற்றுத் தேவையை நிறைவு செய்ய வேண்டியதாக உள்ளது. ஆனால் அதனை தலைமை தாங்கி முன்னெடுக்கும் புலிகளோ மிகவும் பிற்போக்கான அமைப்பாக உள்ளனர். இந்நிலையில் பிற்போக்குத் தலைமையை தூக்கி எறிவது பற்றிய பிரச்சினை எழுகிறது. அவ்வாறாயின் போராட்டம் என்ற முழுமையை நிராகரித்துவிட்டு அதன் பகுதியாகிய தலைமையை தூக்கிஎறிய முடியுமா என்ற கேள்வியும் கூடவே எழுகின்றது.

அரசியல் வளர்ச்சிப் போக்கில் குறிப்பிட்ட ஒரு கட்டத்திற்கு

தமிழ் கொங்கிரஸ் தொடக்கம் வி . புலிகள் வரை பல தலைமைகளை தமிழ் மக்கள் தமது அரசியல் வரலாற்றில் கண்டுள்ளனர். பொருத்தமற்ற தலைமை நிராகரிக்கப்பட்டு புதிய தலைமை அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவ்வரலாற்றுப் போக்கிற்கு புலிகள் மட்டும் விதிவிலக்கல்ல.

பொருத்தமற்றதாக அமைகின்ற தலைமையை தூக்கி எறியும் சரியான வழிமுறையை தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் துல்லியமாக காணமுடியும். கொம்யூனிஸ்ட் கட்சிகள், தமிழ் மக்கள் தனியான தேசமாக உருப்பெற்று வருவதை இனங்காணத்தவறியும்; அவர்களது தேசியத்தை அங்கீகரிக்க மறுத்தும் தமிழ்மக்களின் தேசிய அபிலாஷைகளையும், அவர்களது போராட்டத்தையும் கொச்சைப்படுத்திக் கொண்டும் முதலாளித்துவ தமிழ்தேசிய தலைமையை தூக்கி எறிய முயன்ற நிலையில், இக்கட்சிகள் தமிழ்மக்களால் முற்றும் முழுதாக நிராகரிக்கப்பட்டன. ஒடுக்கு முறைகளை அனுபவித்த தமிழ் மக்களின் வரலாற்றுத் தேவையாக தேசியவாதம் அமைவதால், தேசியவாத அரசியலை உயர்த்திப் பிடித்த தமிழரசுக் கட்சி தமிழ் கொங்கிரசை அரங்கிலிருந்து அகற்றியது. ஈழக் கோரிக்கையை அரசிடம் பணயம் வைத்துப் பேரம் பேசிய விடுதலைக் கூட்டணி இளைஞர் அமைப்புகள், போராட்டக் குழுக்களால் இடம் பெயர்க்கப்பட்டது. இவ்வாறாக புதிய தலைமை ஒவ்வொன்றுமே தேசிய அரசியலை மேலும் உயர்த்திப் பிடித்ததன் மூலமே ஏற்கனவே இருந்துவரும் பிற்போக்குத் தலைமையை அரசியல் அரங்கை விட்டும் அகற்ற முடிந்தது. அவ்வாறாயின் விடுதலைப்புலிகளையும் போராட்டத்திலிருந்து களைய எடுக்கப்படும் எத்தகைய முயற்சிகளும் தேசிய விடுதலையின் மீது உறுதியாக ஊன்றி நிற்காமல் சாத்தியப்படாது என்பதையே எம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.

இன்று விடுதலைப் போராட்டத்தை கைகழுவி விட்டு நிற்கும் பல தமிழ் குழுக்கள் விடுதலைப் புலிகளை தூக்கி எறிய மேற்கொண்ட முயற்சிகள் எதுவுமே வெற்றியளித்ததாக இல்லை. இந்திய அரசையோ, சிறீலங்கா அரசையோ சார்ந்து நின்று செயல்பட்ட இச் சக்திகள் தமிழ் மக்களின் கருத்தில் தேசத் துரோகிகளாகவும் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்தவர்களாகவுமே ஆகினர். இவர்களின் செயல்பாடுகள் இன்று ஒட்டுமொத்தப் போரட்ட இலக்கையே சிதைப்பதாக உள்ளது. இன்று வரையிலும் போராட்டத்திற்கும் தலைமைக்கும் இடையிலான உறவை முழுமையும் பகுதியுமாக இவர்கள் புரிந்து கொள்ளவே இல்லை. முழுமையாகிய தேசிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விடுதலை என்பது தமிழ் மக்களின் வரலாற்றுத்தேவையாக உள்ளது. எனவே பகுதியாக அமைகின்ற புலிகளை நிராகரிப்பதற்கு மேற் கொள்ளப்படும் எந்தவொரு முயற்சியும் இந்த முழுமையை காத்துக்கொண்டே செய்யப்பட வேண்டும். மாறாக பகுதி–முழுமை என்ற வேறுபாடுகளைக் கவனிக்காமல், பகுதியை களைவதற்காக முழுமையையே நிராகரிக்க முனைவது என்பது மக்கள் பகுதி–முழுமை என்ற வேறுபாடு தெரியாமல் முழுமையை காக்கும் நோக்கில் பகுதியையும் சேர்த்து காப்பதாகவே முடியும். பகுதியோடு சேர்த்து முழுமையையும் நிராகரிப்பது என்பது குழந்தையை குளிப்பாட்டிய அசுத்த நீரை வெளியே ஊற்ற முயன்று குழந்தையையும் சேர்த்து ஊற்றிவிட்டகதைக்கு ஒப்பானதாகும்.

இவர்களைத் தவிர, போராட்டம்–தலைமை பற்றிய புரிதலில் குறைபாடுள்ள மற்றொரு தரப்பினரையும் இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது. தமிழ் தரப்பில் செயற்படும் மனித உரிமையாளர்களே இவர்களாகும். விடுதலைப் புலிகளினதும், ஏனைய தமிழ் குழுக்களினதும் அராஜகங்கள் மற்றும் அடாவடித் தனங்களின் விளைவாக விரக்தியும், சோர்வும் அடைந்துவிட்ட இவர்கள் ஒட்டு மொத்தமாக ஈழவிடுதலைப் போராட்டமே தவறானது என்ற முடிவுக்குவந்து விட்டவர்களாகும். அரசையும், விடுதலை அமைப்புகளையும் ஒரேதட்டில் வைத்து அம்பலப்படுத்தி தமிழ்மக்களை காப்பாற்றி விடலாம் என நம்புகிறார்கள். மக்கள் மீதான இவர்களின் கரிசனை இதயசுத்தியானதுதான். எனினும் கட்டற்ற விமர்சனங்களும், போராட்டத்தில் இவர்கள் காட்டும் நம்பிக்கையீனமும் விடுதலை இலக்கை ஏதோஒருவகையில் பலவீனப்படுத்தவே செய்கிறது. போராட்டத்தின் நியாய பூர்வதன்மையை சர்ச்சைக்குள்ளாக்கும் இவர்கள் தவிர்க்க முடியாமல் பேரினவாதம் இதோ மறைந்து விட்டதாகவும், ஐக்கியப்பட்ட புரட்சி பற்றியும் பேசவேண்டியுள்ளனர். தேசிய விடுதலையில் நம்பிக்கையீனத்தை பரப்பும் இவர்களின் முயற்சிகள், ஒரு வகையில் கோட்பாட்டு ரீதியான தப்பியோடல் எனவும் நினைக்கத் தோன்றுகிறது. இவர்கள் அரசினாலும் அதன் 'தோழமை' சக்திகளாலும் அடிக்கடி பயன்படுத்தவும் படுகின்றனர்.

மனிதாபிமான கண்ணோட்டங்கள், ஊசலாட்டங்கள், தலைமை மீதான நம்பிக்கையீனம் போன்ற காரணங்களால் முழுப்போராட்டத்தையும் கைவிட முயலும், தமிழ் முற்போக்குப் பிரிவினரின் குழப்பங்களை களையும் விதத்தில், இங்கும் தேசியவாதம் தொடர்பான விரிவான கோட்பாட்டுப் புரிதலும், பகுதி–முழுமை பற்றிய 'இயங்கியல் அணுகுமுறையும் அவசியமாகின்றது.

இதேவேளை புலிகளின் தலைமை தூக்கியெறிய வேண்டும் எனக் கருதுவோரும் தேசியவிடுதலை வரலாற்றுத் தேவையாகிவிட்ட நிலையில், அதில் புலிகளைவிடவும் தெளிவாக, தீவிரமாக ஊன்றி நிற்க வேண்டும். தேசியத்தை கைவிட்டு புலிகளை நிந்திப்பதன் மூலமோ, அல்லது எதிரிகளின் கூலிப்படைகளாக மாறுவதன் மூலமோ தமிழ் மக்களின் ஆதரவை தம்பக்கம் வென்றெடுத்து புலிகளை அரங்கிலிருந்து அகற்றிவிடலாம் எனக் கருதுவது வெறும் கனவே.

தமிழ்மக்களைப் பொறுத்தவரையில் அவர்களின் பெரும்பாலான நலன்களுக்கு விரோதமாக செயற்பட்டுவரும் புலிகளின் தலைமை கடந்தகால தலைமைகளைப் போல தூக்கி எறியப்பட வேண்டியதே என்பதை வெகுவிரைவில் உணர்ந்து கொள்ளும் போதும், தமது கூட்டு நலன்களை அவர்கள் தெளிவாக இனங்காணும் போதும், ஒன்றுதிரண்டு அதற்கேற்ற போராட்ட வடிவங்களை முன்னெடுப்பர். ஆனால், மக்கள் புலிகளை நிராகரிக்கும் நோக்கில் அவ்வாறாக கிளர்ந்தெழ வேண்டுமாயின், சரியான புரட்சிகர மாற்று சக்தியானது போராட்ட அரங்கில் தோன்றி பலம்பெற்று வருவது என்பது முன்னிபந்தனையாகிறது. இப்படிப்பட்ட தமது பலவீன நிலையை புலிகளும் நன்கு அறிந்தே உள்ளனர். எனவேதான் பிறிதொரு அரசியல்

**அரசியல் வளர்ச்சிப் போக்கில் குறிப்பிட்ட ஒரு கட்டத்திற்கு பொருத்தமற்றதாக அமைகின்ற தலைமையை தூக்கி எறியும் சரியான வழிமுறையை தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் துல்லியமாக காணமுடியும்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சக்தியை போராட்ட அரங்கில் செயற்பட அனுமதிப்பது என்பது அவர்களைப் பொறுத்த வரையில் அரசியல் தற்கொலைக் கொப்பாகவே படுகின்றது. இதுவே ஏனைய அமைப்புகளை அழித் தொழிக் குமாறு அவர்களை நிர்ப்பந் திக்கிறது.

தவறான தலைமையை இவ்வாறாக இனங்காணும் மக்களின் முன்னால் புரட்சிகர மாற்றமைப்பு ஒன்று அவர்களின் தெரிவுக்காக விடப்படும் போதே மேற்படிதவறான தலைமையானது தூக்கியெறியப்படுவதும் சாத்தியப்படும். பிற்போக்கான தலைமையை விரட்டியடிப்பதில் உள்ள தீர்க்கமான அம்சம் இதுவே. இவையனைத் திற்கும் முன் நிபந்தனையாக, மாற்றுத்தலைமை வழங்க முன்வரும் எந்தவொரு சக்தியும் மக்களின் வரலாற்றுத் தேவையினை புரிந்துகொண்டு அதில் வலுவாக ஊன்றி நிற்பது அவசியமாகிறது.

> இன்று விடுதலைப் போராட்டத்தை கைகழுவி விட்டு நிற்கும் பல தமிழ் குழுக்கள் விடுதலைப் புலிகளை தூக்கி எறிய மேற்கொண்ட முயற்சிகள் எதுவுமே வெற்றியளித்ததாக இல்லை. இந்திய அரசையோ, சிறீலங்கா அரசையோ சார்ந்து நின்று செயல்பட்ட இச் சக்திகள் தமிழ் மக்களின் கருத்தில் தேசத் துரோகிகளாகவும் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்தவர்களாகவுமே ஆகினர்.

சரி, புரட்சிகர தலைமையானது விடுதலைப் போராட்டத்தில் ஊன்றி நின்றுவிட்டால் மட்டும் உடனடியாக வெற்றி கிடைத்துவிடும் என எதிர் பார்க்கலாமா? தற்போது இராணுவீதியில் பலமிக்கவர்களாக உள்ள புலிகளின் பிற்போக்குத் தலைமையை தூக்கி எறிய ஓரளவு கணிசமான காலம் எடுக்கவே செய்யும். புலிகள் இவ்வாறாக பலமானநிலையில் இருப்பினும் கூட இவர்கள் அடிப்படையில் மக்களின் நலன்களுக்கு விரோதமானவர்களே என்றவகையில் காகிதப்புலிகளே. வரலாற்றில் என்றோ மக்களால் தோற்கடிக்கப்படவே விதிக்கப்பட்டவர்களாகும். ஆகையால், புரட்சியாளர்கள் முதலில் தம்மிலும், பிரதானமாக மக்கள் சக்தியிலும்நம்பிக்கை வைக்க வேண்டும். புரட்சிகர மாற்று அமைப்பைக் கட்ட கடுமையாகவும், விடாப்பிடியாகவும் உழைக்க வேண்டும். மாறாக, குறுகிய வெற்றியை பெற சிறீலங்கா அரசுடன் அல்லது இந்திய அரசு போன்ற ஆதிக்க சக்தியுடன் கூட்டமைப்பது; தேசிய விடுதலையை கைவிடு வது; அல்லது புலிகளின் ஆயுத பலத்தையும் அடுத்தடுத்த வெற்றி களையும் கண்டு பிரமித்து நிற்பது, தளர்ச்சியடைவது எதுவுமே ஒருவரின் அரசியல் கையாலாகாத் தனத்தையே வெளிபடுத்துகின்றது

## இலக்கும் போராட்ட வழிமுறைகளும் பற்றி

தேசியவிடுதலை என்பது தமிழ்மக்களது வரலாற்றுத் தேவையாக உள்ளது என்பதும், இதனை அடையும் போராட்டத்தில் புலிகள் ஏனைய அமைப்புகளைவிடவும் ஒப்பீட்டளவில் உறுதியாக உள்ளனர் என்பதும் உண்மையானால், இந்த உண்மையானது தன்னளவில் புலிகளின் அனைத்து நடவடிக்கைகளையும்நியாயப்படுத்தி விடுகின்றதா? அதாவது புலிகளின் போராட்ட இலக்கு சரியாக இருப்பதானது அவர்களது வழி முறைகள் அனைத்தையும் நியாயப்படுத்திவிடப் போதுமானதா? இந்தக் கேள்விகள் இலக்கு – வழிமுறை என்பவற்றிற்கிடையான உறவு பற்றி பிரச்சினையை எழுப்புகிறது.

முதலில் தேசியவிடுதலை என்றால் என்னவென்பதைக் குறித்துக் கொள்வோம். தேசியவிடுதலை என்பது ஒரு தேசத்தின் விடுதலை என்று அர்த்தப்படும். தேசத்தின் விடுதலை என்பது குறிப்பிட்ட தேசமாக அமையும் பரந்துபட்ட மக்களுக்கு சுதந்திரம், ஜனநாயகம், சமத்துவம் என்பவற்றைக் கொண்டு வருவதாக அர்த்தப்படும். சிங்கள பேரினவாத அரசு தமிழ்மக்களுக்கு இவற்றை மறுத்ததன் விளைவாகவே இப் போராட்டமானது உருப்பெற்றது. சுதந்திரம், ஜனநாயகம், சமத்துவம் என்பவை பரந்துபட்டமக்களுக்கு அர்த்தமுள்ள வகையில் கிடைப்பதுதான் விடுதலையை மக்கள் பெற்றுள்ளார்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்பதற்கான அறிகுறியாகும். எனவே இன்று வரையிலான போராட்டம் எந்தளவிற்கு மக்களிற்கு சுதந்திரம், ஜனநாயகம், சமத்துவம் என்பவற்றைப் பெற்றுத்தந்துள்ளது என்ற உரைகல்லில் உரசினால் இப்போராட்டத்தின் 'வெற்றிகள்' பளிச்செனத் தெரியவரும்.

ஓர் இலக்கு எவ்வளவுதான் புனிதமானதாக, உயர்வானதாக இருப்பினும்கூட, அந்த இலக்கானது போராட்ட வழிமுறையினூடாகத்தான் அடையப்படுகிறது. மக்கள் தமது நீண்ட கால போராட்டத்தினூடாக சிறிது சிறிதாக அவ்உயர்ந்த இலக்கை நோக்கி முன்னேறுகின்றார்கள். போராட்டத்தில் அடையும் முன்னேற்றத்தின் அளவிற்கேற்ப அவர்கள் இலக்கை நெருங்கி வருகின்றார்கள் என்று அர்த்தம். அப்படியானால் போராட்டத்தில் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் இலக்கின் சிறு சிறு பகுதிகளை படிப்படியாக கைவரச் செய்வதாக இருக்க வேண்டும். போராட்ட வழிமுறையானது இலக்கின் பண்புகளை தன்னகத்தே கொண்டிருக்கும் போது மட்டுமே அப்போராட்டத்தின் வெற்றியானது குறித்த இலக்கு கைவரப் பெறுவதை உத்தரவாதப்படுத்தும். அவ்வாறன்றி இலக்குகளுக்கு நேரெதிர் வழிமுறைகளும் கூட குறித்த இலக்குகளை அடைய உதவும் என சாதிப்பது மக்களை ஏய்க்கும் அப்பட்டமான கபடத்தனமே. மாறாக மக்கள், போராட்ட வழிமுறைகளினூடாக தமக்கு கைவரப் பெறுவதைக் கொண்டுதான் போராட்ட இலக்கு பற்றிய புரிதலையே பெறுவார்கள். மேலும் போராட்ட வழிமுறைகளின் ஒவ்வொரு அடியும் இலக்கை பிரதிபலிக்கும் வகையில் அமையும் போதுமட்டுமே, அவ்வழிமுறைகள் நியாயமானவைகளாக அமைவதுடன் உயர்ந்த இலக்கினை சென்றடைவதையும் அவை உத்தரவாதப்படுத்தும். எனவே புலிகளை மதிப்பிடுவது என்று வரும்போது, அவர்கள் தமிழ் மக்களின் வரலாற்றுத் தேவையான தேசிய விடுதலைக்காகவே போராடுகின்றார்கள். என்ற இலக்கை மாத்திரம் வைத்து அவர்களை மதிப்பிடாமல் புலிகளின் இதுவரையிலுமான வழிமுறைகளானது தேசத்தின் விடுதலை என்ற அர்த்தத்தில் எவற்றை சாதித்துள்ளன? என்ற கேள்வியை ஸ்தூலமாக எழுப்பி பரிசீலிக்க வேண்டியதும் அவசியமாகிறது.

எமது போராட்டத்தில் தோன்றிய விடுதலை அமைப்புகள் அனைத்திடமும் ஜனநாயக மறுப்பும், அராஜகமும் பொதுவாக காணப்படவே செய்தன. ஆனால்இவை அனைத்தையும் மிஞ்சும் வகையில் மாற்று அமைப்புக் களையே பூண்டோடு ஒழிக்கும் கைங்கரியத்தை புலிகளே தொடக்கி வைத்தனர். அன்றைய நிலையில் இவர்களால் கொல்லப்பட்ட எதிரிப் படைகளை விடவும் கூடிய எண்ணிக்கையில் மாற்று அமைப்பு போராளிகளை புலிகள் வேட்டையாடியிருந்தனர். ஏனைய அமைப்புகள் செயற்படும் உரிமையை மட்டுமன்றி உட் கட்சி ஜனநாயகம், மக்களின் ஜனநாயக உரிமைகள் போன்றவற்றை அறவே ஒழித்துக் கட்டியவர்களில் முதன்மையானவர்கள் புலிகளே! வட கிழக்கு முஸ்லிம் மக்கள் மீது இவர்கள் இழைத்த கொடுமையானது, தமிழீழ விடுதலைப் போராட்டத்தையே இழிவுபடுத்தியது. முஸ்லீம்களை இனச்சுத்திகரிப்பு செய்த புலிகளின்வழி முறையானது போராட்ட இலக்கையே சந்தேகத்துக் உள்ளாக்கியது. விடுதலைப்போராட்டத்தை சரியாக இனங் கண்டு அதனை ஆதரித்து வந்த ஏனைய சமூகங்களைச் சேர்ந்த ஜனநாயக சக்திகளும், மற்றும் சர்வதேச ஜனநாயக சக்திகள் பலவும் போராட்ட நோக்கம் குறித்து சந்தேகிக்கும் அளவிற்கு போராட்டத்திற்கு கேடு விளைவித்தவர்களும் புலிகளே!

> ஓர் இலக்கு எவ்வளவுதான் புனிதமானதாக, உயர் வானதாக இருப்பினும்கூட, அந்த இலக்கானது போராட்ட வழி முறையினூடாகத்தான் அடையப் படுகிறது. மக்கள் தமது நீண்ட கால போராட்த் தினூடாக சிறிது சிறிதாக அவ்உயர்ந்த இலக்கை நோக்கி முன்னேறு கின்றார்கள்.

விடுதலைப் புலிகள் இராணுவ வலிமை மிக்கவர்கள் தான் என்பதும், போர்முறை உத்திகளில் வளர்ச்சி பெற்று ள்ளார்கள் என்பதும் உண்மையே. ஆனால் புலிகளால் அரசினுடைய ஒவ்வொரு இராணுவ முகாமும் தாக்கப்பட்டு வெற்றி கொள்ளப்படுகின்ற





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆர்ப்பரிப்புகளுக்கும் பின்னால் இவர்களின் வதை முகாம்களும் ஒவ்வொன்றாக அதிகரித்துச் செல்கின்றது. கொடிய சித்திரவதைகள் அங்கு பரீட்சிக்கப்படுகின்றன. மாற்று அமைப்பினர், மாற்று அரசியல் கருத்துடையோர் மட்டுமல்ல சாதாரண அறிவுஜீவிகள், இலக்கியவாதிகள், மனித உரிமையாளர்கள், சமூக சேவையாளர்கள், மாணவர்கள், சாதாரண பொதுமக்களும் கூட இந்த வதைமுகாம்களில் நிரப்பப் படுகின்றனர். அரசியல் கைதிகள் கொலை செய்யப்பட்டு இரகசியமாகவே புதைக் கப்பட்டு விடுகின்றனர். இத்தகைய பின்னணியில் புலிகளின் இராணுவ வெற்றிகளை எவ்விதத்திலும் தமிழ்தேசத்தின் வெற்றியாக கருதமுடியுமா?

சிறிலங்கா அரசு தமிழ்மக்களின் அனைத்து உரிமைகளையும் பறித்துக் கொண்டதன் விளைவு இத்தேசிய விடுதலைப் போராட்டம் எனக் கொண்டால், புலிகளின் இன்றுவரையிலான வெற்றிகள் இந்த உரிமைகளை எந்தளவிற்கு மீட்டுத்தந்துள்ளன? இதுவரையிலும் சிறிலங்கா அரசின் மனித உரிமை மீறல்களை எடுத்துக்காட்டியதன் மூலமே சர்வதேச அளவில் விடுதலைப்போராட்டத்திற்கான ஆதரவு திரட்டப்பட்டது எனின், இந்த ஆதரவை புலிகளின் மோசமான மனித உரிமை மீறல்கள் படிப்படியே அழித்து வருகின்றன.

போர்க் கொடுமையால் நசுங்குண்டு கிடக்கும் தமிழ் மக்களின் மீது தாங்க முடியா வரிச்சுமையேற்றிஅவர் களை கசக்கிப்பிழியும் புலிகள் மக்களின் நலன்களைவிட தமது அமைப்பு நலன்களையே எப்போதும் முதன்மைப் படுத்துகின்றனர். மக்களின் ஜனநாயக உரிமைகளின் மீது புலிகளின் துப்பாக்கிகள் எப்போதும் குறிவைத்த படியேயுள்ளன. போர்க்கொடுமையும் புலிகளின் கொடுமையுமாக மக்கள் இரட்டை ஒடுக்கு முறைக் குள்ளாக்கப்பட்டுள்ளனர். இவ்வாறாக தமிழ்மக்களை ஆட்டிப்படைக்கும் புலிகள்; மறுபுறம் அவர்களை பற்றிய அரசின் பிரச்சாரங்களை நிரூபிப்பது போலவே தாமும் நடந்து கொள்கின்றனர். ஒருவித 'கொக்கோ கோலா' கலாச்சாரத்தையே புலிகளின் தலைமை பின்பற்றிவருகின்றது; போலி ஆடம்பரங்களும் வீண் விரயமும் அவர்களின் ஒவ்வொரு செயற்பாட்டிலும் வெளிப்படுகின்றது. மக்களின் பொதுப்பணத்தை இவ்வாறு விரையமாக்குவது—அதுவும் யுத்தகாலத்தில்—மிகக்கொடிய குற்றமாகும். சாதாரண பொருளாதார விடயங்களில் மட்டுமல்ல, இராணுவ நடவடிக்கைகளின் போது வெடிமருந்துப் பயன்பாட்டிலும், போராளிகளின் உயிர் இழப்பிலும் கூட இதே ஊதாரித்தனமே வெளிப்படுகிறது. நீண்ட காலமாகவே ஒடுக்கப்பட்டு துன்புறுகின்ற ஒரு வறிய, சிறிய தேசத்தின் வளங்கள் இவ்வாறான ஊதாரித் தனங்களுக்கு அதிக காலம் தாக்குப்பிடிக்கமாட்டாது. வளங்கள் இவ்வாறு வீணடிக்கப்படுவது விடுதலைப் போராட்டத்தை விரைவில் நேரடியாக பாதிக்கவே செய்யும் புலிகள் ஒரு நாள் அழிந்து விடலாம், அல்லது போராட்டத்தை துறந்து ஓடிப்போய்விடலாம். ஆனால் தமிழ் தேசத்தைப் பொறுத்தவரையில் அது தனது எதிர்காலம் முழுவதையும் இவ்விடுதலைப் போராட்டத்திலேயே பணயம் வைத்துள்ளது. இதனால் புலிகள் வளங்களை இவ்வாறு விரையமாக்குவதைத் தட்டிக் கேட்க ஒவ்வொரு தமிழ் பிரஜைக்கும் உள்ள உரிமை மறுக்க முடியாததாகும்.

விடுதலை புலிகள் தமது பலதரப்பட்ட அராஜக நடவடிக்கைகளையும் 'போர்க்காலத்தின் தவிர்க்க முடியா நெருக்கடிகள்' எனக் கூறி நியாயப்படுத்திவிட முயலுகின்றார்கள். ஒரு வாதத்திற்கு அப்படியே வைத்துக் கொண்டாலும், தம்மால் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில், தாமும் ஒரு அரசாகவே செயல்பட்டு வருவதாக மார் தட்டும் பிரதேசங்களில் எந்தவித முற்போக்கான, புரட்சிகரமான மாற்றங்களை சமூகத்தில் ஏற்படுத்தி யுள்ளார்கள்? என்ற கேள்வியை எழுப்புவோம். தமிழ்சமூகத்தில் காலங்காலமாக புரையோடிப் போயுள்ள, தமிழ் தேசத்தின் ஒற்றுமைக்கும் ஆரோக்கியத்திற்கும் பங்கம் விளைவித்து வருகின்ற சாதிய ஒடுக்குமுறை, பெண்ணடிமைத்தனம், பிரதேச வேறுபாடுகள், பொருளாதார சுரண்டல் போன்றவற்றில் எவற்றையாவது ஒழிக்க முயன்றார்களா? வெறுமனே பெயரளவிலான கண்துடைப்பு நடவடிக்கைகளைத் தவிர (கடைகளுக்கு தமிழில் பெயர்பலகை போடுவது, சாதியை குறிப்பிட்டு அழைப்பதை தடைசெய்வது) வேறு எந்த அடிப்படையான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விடயங்களையும் புலிகள் தொட்டுப் பார்த்ததில்லை. இப் பிற்போக்குத் தனங்களையெல்லாம் புலிகள் தாமே சென்று ஒழிக்க வேண்டும் என்பதில்லை. மக்களின் சொந்த முன் முயற்சிகளை தடுத்து நிறுத்தாமல் விட்டாலே போதும் அவர்கள் தன்னியல்பாகவே எழுந்து சமூக ஒடுக்கு முறைகள் பலவற்றையும் எதிர்த்துப் போராடத் தலைப்பட்டிருப்பர். மாறாக, புலிகள் மக்களின் முன் முயற்சிகளை தடுத்து, நசுக்கிவிடும் வேலையைத்தான் இதுவரையில் செய்து வந்துள்ளனர். இவ்வாறாக தமது இயலாமையை பலதடவைகள் நிரூபித்துள்ள புலிகள் நடப்பிலுள்ள சமூக அமைப்பை அப்படியே காக்கும் பணியைத்தான் ஆற்றி வருகின்றார்கள். சீதனத்தை ஒழிக்கும் முயற்சிகளைவிட அதிலிருந்து கறக்கும் பெருமளவு வரிப்பணத்தில்தான் அவர்கள் குறியாகவுள்ளனர். தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிதாமேஎன உரிமைபாராட்டும் புலிகள் உண்மையில் நடப்பு சமூக அமைப்பின் ஒடுக்குமுறைகளை அப்படியேகாத்து வருபவர்களாக செயற்படுவதால், தமிழ் தேசத்தின் பிற்போக்கு சக்திகளைத்தான் அவர்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றார்கள். இங்குதான் புலிகளின் உண்மையான வர்க்கநலன்கள் எவை என்ற கேள்வி அழுத்தம் பெறுகிறது. உண்மை யான மக்கள் விடுதலை என்பதும் புலிகளின் நலன்களும் ஒன்றுக்கொன்று முரணானவை என்பது இங்கு வெளிச்சத்திற்கு வருகிறது.

இந்த விதமாக பலவழிகளிலும் பிற்போக்குக் குணா ம்சத்தைக் கொண்டிருக்கும் புலிகளின் தவறான போராட்ட வழிமுறையானது தமிழ் மக்களுக்கும், ஏனைய சமூகங்களுக்கும் பாரிய அச்சுறுத்தலாகவே இருந்து வந்துள்ளது. இவர்களின் மோசமான வழிமுறைகள் நேரடியாக போராட்டத்தில் ஏற்படுத்திய விழுக்காடுகள் ஏராளம்.

பிரதானமாக, தமிழ்மக்களில் கணிசமான பகுதியினர் போராட்டத்திலிருந்து அந்நியப்பட்டுப் போயுள்ளனர். இந்த ஒதுக்கத்தினை ஈழத்தில் மட்டுமல்ல புலம் பெயர்ந்துள்ள தமிழ் மக்கள் மத்தியிலும் தெளிவாக காணமுடிகிறது. 80களில் போராட்ட அலை ஓங்கியிருந்த காலத்தை எடுத்தால், உலகின் எந்தவொரு மூலை முடுக்கிலும் தமிழ்மக்கள் மத்தியில் காணப்பட்ட விடுதலை எழுச்சியும் துடிப்பும் இன்று மங்கி, மறைந்து போயுள்ளன. புலம் பெயர்ந்தோர் அந்நாடுகளில் மேற்கொண்ட அரசியல் ஆர்ப்பாட்டங்கள், சர்வதேச அனுதாபத்தைப் பெறும் பிரச்சாரங்கள், போராட்ட நிதி சேகரிப்புக்கள் யாவும் இப்போது கடந்த கால விவகாரங்களாகிவிட்டன. அரச ஒடுக்கு முறையானது முன்னிலும் மோசமாக, நேரடியாகக் குரல்வளையை நெறிக்கும் ஈழத்திலும் கூட இதுவே நிலைமையாகும். போராட்டத்தில் மக்கள் அன்று வெளிப்படுத்திய ஆர்வமும், காட்டிய உயிர்த்துடிப்பும் பரபரப்பும் இன்று எங்கோ சென்றுவிட்ட நிலையில், மக்கள்மத்தியில் போராட்டத்தின்பால் ஒரு பரவலான அக்கறையின்மையே நிலவுகிறது.

தேசியவிடுதலையை வென்றெடுப்பதும், பெற்றவற்றைப் பேணிப் பாதுகாப்பதும், பரந்துபட்ட மக்களின் உடல், உள, பொருளாதார, அறிவுத்துறை வளங்கள் மற்றும் ஆற்றல்களை திரட்டி, அவற்றை சரியான இலக்கு நோக்கிப்பாச்சினால் மட்டுமே சாத்தியப்படுவதாகும். எனவே பரந்துபட்ட மக்களின் செயலூக்கமான பங்களிப்பு இதற்கு அவசியமாகிறது. மக்கள் இந்தப்போராட்டத்தினூடாக தமது நலன்கள் பல கைவரப்பெறுவதை உணர்ந்து கொள்வதும், அவர்கள் பங்கு கொள்ளும் விதத்திலான விரிவான ஜனநாயகம் போராட்டத்தில் இடம் பெறுவதும் இதற்கு முன்னிபந்தனையாகிறது.

ஆனால் புலிகள் இந்த முன்னிபந்தனையை ஒரு போதுமே நிறைவேற்றியதோ நிறைவேற்றப் போவதோ இல்லை. பாசிசக் குணாம்சத்தில் இறுகிக்கிடக்கும் அவர்கள் விரும்பினாலும் கூட அது முடியாத ஒன்றாகிவிட்டது. இதனால் புலிகளின் தலைமையானது அரசியல் அர்த்தத்திலும், சமூக அர்த்தத்திலும் படு அபாயகரமானதே என்ற உணர்வு தான் தமிழ் மக்களில் கணிசமான பிரிவினரை போராட்டத்தை விட்டும், அந்நியப்படுத்தக் காரணமாகியது. மக்கள் அந்நியப்பட்டமைக்கும் புலிகளின் வழிமுறைகளுக்கும் இடையிலான உறவு இதுவே. 'மக்கள்யுத்தம்' ஒன்றை நடாத்துவதாக கூறும் புலிகளுடைய வழிமுறைகள் மேலும் மேலும் மக்களை போராட்டத்தை விட்டும் தள்ளித்தான் போகவைக்கின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆயுத மற்றும் அரசியல் போராட்டங்களில் நேரடியாகவே ஈடுபட்ட ஏராளமான சக்திகள் அந்நியப்பட்டும், அருகியும் போய்விட்டமையினால் இன்று புலிகளின் பாரிய ஆட்சேர்ப்புத்தளமாக சிறுவர் சிறுமியர்களே அமைய வேண்டிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்த இளம் பராயத்தவரை அணிதிரட்டுவதில் பேரார்வம் காட்டும் புலிகளின் போக்கானது போராட்ட அறம் (Ethics) மற்றும் சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட படை நடைமுறைகள் குறித்து பல்வேறு கேள்விகளை எழுப்பும்படி எம்மை நிர்ப்பந்திக்கிறது.

மிகவும் இளவயதுடைய இச்சிறார்களிடம் பாரிய ஆயுதங்களையும் ஆபத்தான வெடி மருந்துகளையும் வழங்குவது முறைதானா? அனுபவ முதிர்ச்சியும், சமயோசிதமாக தீர்மானம் எடுக்கும் பக்குவமும் குறைந்த இவர்களை தீர்மானகரமான பாரிய தாக்குதல்களில் ஈடுபடுத்துவது நியாயமாகுமா? அறிவு, அனுபவ முதிர்ச்சியுடையோர் தாம் சுமக்கவேண்டிய வரலாற்றுப் பொறுப்பினை இச்சிறார்களின் தோள்களில் சுமத்தி விடுவது முறையா? கல்விக்கும் பராமரிப்புக்குமாக எம்மில் தங்கியிருக்க வேண்டியவர்கள் பீரங்கிகளுக்குத் தீனியாவதை ஒரு ஆரோக்கியமான சமூகம் அனுமதிக்கத்தான் முடியுமா? புலிகளின் இத்தகைய நடைமுறைகள், அரசியல் ரீதியில் மட்டுமல்ல தார்மீக ரீதியிலும்கூட அங்கீகரிக்க முடியாதவையாகும். இராணுவத்துறையில் இவ்வாறென்றால் அரசியல் தளத்தில் போராட்ட சக்திகளை அணிதிரட்டுவது என்பது புலிகளின் அர்த்தத்தில் வேண்டாத சங்கதி. எண்ணற்ற அரசியல் போராட்ட சக்திகள் அந்நியப்பட்டு சிதறிக்கிடப்பது இவர்களுக்கு ஒரு பொருட்டே அல்ல.

தமிழ் மக்களில் பெரும்பாலானோர் போராட்டத்துடன் உணர்வுபூர்வமாக ஒன்றிப் போக முடியாத நிலையில், புலிகள் தாம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கான ஆதரவை, புறநெருக்கடிகளை தொடர்ந்தும் தக்க வைப்பதன் மூலமாக மட்டுமே பெறவேண்டியுள்ளனர். இன்று வரையிலும் இப்புறக் காரணிகளின் நெருக்குதல்களை கொண்டுதான் தேசிய விடுதலையை கூட புலிகளால் நியாயப்படுத்த முடிகிறது. எனவே தமிழ் மக்கள் இன்று இவர்களுக்கு வழங்கும் ஆதரவு ஒரு வகையில் நிபந்தனையுடன் கூடிய செயல்பூர்வமற்ற (Passive) ஆதரவாகவே உள்ளதைக் காணலாம் போராட்ட இலக்கை எய்துவது ; அதனை பாதுகாப்பது ; அதன் நிமித்தம் தம் உள்ளாற்றல் அனைத்தையும் திரட்டிப் பயன்படுத்துவது போன்ற பற்றுணர்வின் அடிப்படையில் மக்களின் ஆதரவு வெளிப்படவில்லை. மாறாக தமது எதிர்காலம் குறித்த அச்சத்திலிருந்து விடுபடவும், தமது தற்காப்பிற்காகவும் என தவிர்க்க முடியாது நம்பியிருக்க வேண்டிய ஒரு சக்தியாகவே மக்கள் பெரும்பாலும் புலிகளை ஆதரிக்க வேண்டியுள்ளனர்.

........"மக்களுக்கும் எதிரிக்கும் இடையே பிளவுகளை ஏற்படுத்தி மக்களை போராட்டத்தை நோக்கித்தள்ளும் எதிரியின் நடவடிக்கைகளில் மாத்திரம் தங்கியிருப்பதானது (எதிரி இது போன்ற குற்றங்களை அடிக்கடி மேற்கொள்வான் என்பது உண்மைதான்) ஒருவர் தனது சொந்தத் தோல்வியை தானே வரவழைத்துக் கொள்வதாகிறது........"

சர்வதேச அளவிலும் கூட, புலிகள் விடுதலைப் போராட்டத்தின் இலக்கை இலகுவாக நியாயப்படுத்த முடிகிறதே ஒழிய தமது வழிமுறைகளை அல்ல. ஒருபோதுமே அவர்களால் நியாயப்படுத்தவும் முடியாது. முடியும் என கருதுவது அவர்களின் அறியாமையாகும். இவ்வாறாக சர்வதேச அரங்கிலும் எமது போராட்டத்தை கொச்சைப்படுத்திய முழுப்பொறுப்பையும்கூட புலிகளே ஏற்க வேண்டும்.

மேலும், ஒரு குறிப்பிட்ட வடிவிலான ஒடுக்கு முறைகளுக்குப் பதிலாக மற்றொரு வகை ஒடுக்கு முறைகளைக் கொண்டுவருவதானது உண்மையான விடுதலையும் மேலானவாழ்வும் கிடைக்கும் என்றமக்களின் நம்பிக்கையை அடித்து விழுத்தி விடுகிறது. இப்போது புதிய எஜமானர்களாக தோற்றமளிக்கும் விடுதலைப் புலிகளும் நிச்சயமாக ஒருவகை புதிய ஒடுக்கு முறையாளர்களே என மக்கள் நம்பும் நிலையில், மக்களின் உள்ளார்ந்த ஆற்றல்களையும் வளங்களையும் (பௌதீக, ஆன்மீக வகைப்பட்ட) நிச்சயம் போராட்டத்துடன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நெருக்கமாக இணைக்க முடியாது. மெய்யாகவே மக்களுக்கு புதிய நம்பிக்கை ஊட்டப்பட்டால் ஒழிய, அவர் களின் ஈடுபாட்டையும் அர்ப்பணிப்பையும் மீண்டும் தூண்டவே முடியாது. இன்றுள்ள தேக்க நிலைக்கான பிரதான காரணிகளில் மேற் கூறியதும் ஒன்றாகும்.

அடுத்த அம்சம் மக்கள் இன்று புலிகளால் பயப்பிராந் திக்குள்ளாக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளமையாகும். தொடர் ந்தும் பயப்பிராந்திக்குள்ளேயே மக்களை இருத்தி வைத்துக் கொண்டு, அதே நேரம் இதே மக்கள் திரளை வீறு கொண்டெழு! விரைந்து முன்னேறு! உயிர்த் துடிப்புடனும் ஆர்வத்துடனும் போராடு! என உணர்ச்சி ததும்ப பேசி வருவது புலிகளின் அறியாமையே. இப்போதும் கூட மக்களை தொடர்ந்து அச்சுறுத்தி அடிபணிய வைக்கவும், வலிந்து போர்க் கேடயங் களாக்கவும் அவர்களை இப்படியே வைத்திருக்க வேண் டும் என்பதில் தான் புலிகளின் சுத்த இராணுவ மனோபாவம் குறியாக உள்ளது.

போராட்ட இலக்கான தேசிய விடுதலை என்பது வரலாற்று தேவை என்பதால் எத்தகைய மோசமான வழிமுறை களினூடாகவும் அதனை முதலில் அடைந்து விடுவது, பின்னர் அதனை எவ்வாறோ நியாயப்படுத்திக் கொள்வது என்று புலிகள் நம்புகின்றார்கள். எனவே எந்தக் கொடூரமான வழிமுறைகளையும் மேற்கொள்ள அவர்கள் தயங்குவதே இல்லை.

புரட்சிகரமான ஓர் இலக்கினை அடைய எடுக்கும் காலம் மிக நீண்டதாகவும் இருக்கலாம். என்றாலும் அதனை அடையப் பிரயோகிக்கும் வழிமுறையும் இலக்கின் உன்னத தன்மைக்கு இசைவுடையதாக இருக்க வேண்டும். தவறான வழிமுறைகளை பின்பற்றி அடையப்படும் வெற்றியும் கூட சரியான அர்த்தத்தில் மக்களுக்கு ஜனநாயகம், சமத்துவம், சுதந்திரம் என்பவற்றை வழங்காததுடன், அவ்வெற்றி நிலைக்கவும் மாட்டாது. என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

இலக்கிற்கும் வழிமுறைக்கும் இடையே கண்டிப்பாக இருக்க வேண்டிய முரணற்றதன்மையையும் அதன் பிரிக்க முடியாத உறவையும் புரிந்து கொண்டு அதற்கேற்ப புலிகள் ஒருபோதும் தம்மை மாற்றிக் கொள்ளப் போவதில்லை. இந்நிலையில் தேசிய விடுதலையை அதன் உண்மையான அர்த்தத்தில் அடைய வேண்டுமாயின் போராட்டத்தலைமை மாற்றப்பட்டாக வேண்டியுள்ளது. இப் போராட்டம் புரட்சிகரமான மக்கள் போராட்டமாக வேண்டியுள்ளது. புரட்சிகர சக்திகள், புலிகளின் தலை மையை தூக்கியெறிவதற்கு முன் நிபந்தனையான மாற்றுத் தலைமையை கட்டியாக வேண்டியுள்ளது. போராட்டத்தை இன்னும் உயர்ந்த கட்டத்திற்கு வளர்த்துச் செல்லும் வகையில் தலைமையை தாமே சுவீகரித்து மக்களுக்கு உண்மையான முன்னணிப் படையாக திகழ வேண்டும். இவற்றை சாதிக்க வேண்டுமாயின் புரட்சிகர சக்திகள் தேசியவிடுதலையும், தேச–அரசொன்றை நிறுவுவதையும் தமது உடனடி வரலாற்றுப் பணியாகக் கொண்டு அந்த இலக்கு நோக்கி, சரியான வழிமுறை களினூடாக முனைப்பாக செயல்பட வேண்டும்.

விடுதலைப்புலிகள் இன்று எவ்வளவு தான் தீவிரமாக தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்தாலும், அவர்கள் அடிப்படையில் பரந்து பட்ட மக்கள் நலன்களுக்கு விரோதமானவர்களே! தமிழ் தேசத்தின் மத்தியில் மிகச் சிறுபகுதியினராக அமைந்துள்ள பிற்போக்கு சக்திகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கொடு நெறியாளர்களாகவே உள்ளனர். இதனால் இவர்களும் வரலாற்று அரங்கிலிருந்து அகற்றப்படுவதற்கே விதிக்கப் பட்டவர்களாகும். இதற்கான அறிகுறிகள் இப்போதே வெளிப்படத் தொடங்கியுள்ளன. இதற்கு மேல் இவர்கள் பெறும் எவ்வளவு பெரிய இராணுவ வெற்றிகளும் இவர்களை அழிவிலிருந்து காப்பாற்றி விடமாட்டாது. புலிகள் வரலாற்று அரங்கிலிருந்து அகற்றப்படுவது காலம் தாழ்த்திப் போவது ஒரே ஒரு காரணத்தை மட்டுமே சார்ந்திருக்கும். அது தமிழ் தேசத்தின் புரட்சிகர முற்போக்கு சக்திகள் செயற்படாமை என்பதாகும். தேசிய வாதமானது கோட்பாட்டு ரீதியில் புரிந்து கொள்ளப்படுவதும், நடப்பு அரசியலில் செயலூக்கமான பங்களிப்பும், எவ்வளவு தூரம் தள்ளிப் போகின்றதோ அவ்வளவிற்கு புலிகளை வரலாற்று அரங்கிலிருந்து அகற்றுவதும் தள்ளிப் போகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உங்களிடமிருந்து எமக்கு

உயிர்ப்பில் வெளியாகி யிருந்த "மார்க்ஸிசத்திற்கும் பெண்நிலைவாதத்திற்கும் இடையிலான மகிழ்ச்சியற்ற திருமணம்" (கெமிட்டி-கார்ட்மன்) வாசிக்கின்றேன். முதலில் எதுவுமே பிடிபடாமல் ஒடி ஒளிந்து கொண்டது. இப்போதோ....... உண்மையாகவே உணர்ந்து கொண்டேன் திரும்பத் திரும்ப வாசிக்க பிடிபடாதன எல்லாம் தெட்டத் தெளிவாகிவிட்டன. மார்க்ஸியத்தினூடாக பெண்ணிலைவாதத்தை முன்னெடுக்கும் நோக்கில் இருக்கின்ற இருவழிக் குறைபாட்டைக் கட்டுரையாளர் விவ ரிக்கின்றார். "மார்க்ஸ், எங்கெல்ஸ் தொடங்கி எலிஷரட்ஸ்கி, டலாகொஸ்டா வரை மார்க்சியத்தினூடு எவ்வாறு பெண்கள் பற்றிய பிரச்சனைகளை அணுகினார்கள் என்பதும் அவற்றிலிருந்த குறைபாடுகள் பற்றியும் கட்டுரையாளர் குறிப்பிட்டிருக்கிறார். "பல மார்க்ஸியவாதிகள் பெண்நிலைவாதமானது வர்க்க முரண்பாட்டை விடவும் முக்கியமற்றதெனவும் அதன் மோசமானநிலையில் தொழிலாளர் வர்க்கத்தை பிளவுபடுத்துவது எனவும் வாதிடுவர்." என்கின்ற கட்டுரையாசிரியரின் கூற்றிற்கு 'சமர்' பத்திரிகை நிறுவனத்தோரையே என் மனகண் முன் நிறுத்தியது. "நாம் வர்க்க முரண்பாட்டிற்காக குரல் கொடுக்கிறோம். அகல்யா போன்றோரோ அதனுள் ஒரு பிரிவினருக்காகக் குரல் கொடுப்பவர்கள்" என்ற சமரின் கூற்று இதற்கு நல்ல உதாரணம்தான்......

கவிதா, ஈழம்.

---

..........துரதிர்ஷ்டவசமாக உயி-ஐ ஒரு தடவைதான் வாசித்துள்ளேன் 2, 3 தடவை நிதானமாக வாசிக்க வேண்டியுமிருக்கிறது. அதற்கிடையில் சிலவரிகள் ..........இலங்கையில் தேசங்களின் உருவாக்கம் என்ற கட்டுரையிலிருந்து பற்பல விடயங்களை என்னால் அறிந்து கொள்ளக் கூடியதாயிருந்தது. துண்டுதுண்டாக முன்பே தெரிந்த விடயங்களை எல்லாம் இக்கட்டுரையை வாசித்த போது முழுமையாக ஒன்றிணைத்துப் பார்க்கக் கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. மலையக (தமிழ்) மக்களின் மீது பிரயோகிக்கப்பட்ட இத்தனை அழுத்தங்களுக்குரிய காரணங்கள்........ மற்றும் சிங்கள அரசு செயற்படுத்தும் ஒவ்வொரு அம்சங்களிலிருந்தும் தமிழர்கள் அல்லது முஸ்லீம்கள் எங்ஙனமாக வேற்றுமைப்படுத்தப்பட்டனர்...... என்பன போன்றவற்றை, அந்தந்தப்பின்னணியோடு ஓரளவு விளங்கிக் கொள்ளக் கூடியதாயிருந்தது. இதனூடாக சிங்கள அரசியல் கட்சிகளின் ஒவ்வொரு நடவடிக்கைகளையும் அதற்கமைய மாறுபட்ட தமிழ் அரசியலில் கட்சிகளின் மாற்றங்களையும் இத்தகைய வரலாற்றுப் பின்னணியில் தெரிந்து புரிந்து கொள்ளக் கூடியதாயிருந்தது. ஆனால் கட்டுரையில் ஏன் தமிழ் அரசியல் கட்சிகளின் ஒற்றுமையீனத்தை, குழறுபடிகளை, தில்லுமுல்லுகளை எழுதவில்லையோ தெரியவில்லை. (இந்தகட்டுரையின் நோக்கம் அதை அம்பலப்படுத்துவதானது அல்ல இருப்பினும்) சிங்கள அரசியல் கட்சிகளின் இத்தகைய போக்கிற்கு தமிழர் அரசியல் கட்சிகளின் அல்லது அரசியல் வாதிகளின் ஒற்றுமையீனமும் பதவிமோகமும் கூட ஒரு வகையில் காரணம் எனலாம் போலத் தோன்றுகிறது. அஃது தமிழர் அரசியல் கட்சிகளின் பலவீனங்களே சிங்கள அரசியல்வாதிகளிற்குப் பலமாக அமைந்துள்ளது என எண்ணத் தோன்றுகிறது. உதாரணமாக மலையக மக்கள் வாக்குரிமைகள் பறிக்கப்பட்டபோது தமிழர் அரசியல் வாதிகள் அதற்கெதிராகக் குரல் கொடுத்தனர். ஆனால் G.G. பொன்னம்பலம் போன்றோர் அதற்கு ஆதரவாகப் பாராளுமன்றத்தில் பேசினார் என நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இவ்வாறாகப் பல விடயங்கள் நடந்திருக்கின்றன. ஆகவே தமிழர்களினது அரசியல் தலைமைகள் எவ்வளவு தூரம் தங்கள் அரசியல் இலாபங்கள் கருதி மக்களையும் தமது மொழிப்பிரச்சனையையும் பயன்படுத்தி உள்ளனர் என்பது பற்றி கேள்வி எழுப்பப்படவேண்டும். கடந்தகால தமிழ் அரசியல்வாதிகள் தமிழர் பிரச்சனைக்குத் தம்மால் இயன்றளவு குரல் கொடுத்தார்கள், எதிர்ப்புப் போராட்டங்கள் செய்தார்கள் என்பதென்னவோ உண்மைதான். இருப்பினும் அவர்கள் நேர்மையாக, உணர்வு பூர்வமாக இந்தப் பிரச்சனையை முன்னெடுத்தார்களா என்பதும் கேள்விக்குறிதான். இவர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## உங்களிடமிருந்து எமக்கு

அரசாங்கத்தை, அதன் போக்கை எதிர்ப்பவர்களாகவும், அதேவேளை முற்றாக அரசாங்கத்தினூடான தனிப்பட்ட உறவுகளைப் பேணுபவர்களாகவுமே காணப்பட்டுள்ளனர். அதாவது 'பாலுக்கு காவல் பூனைக்கு தோழன்' என்ற நிலைமையே காணப்பட்டது. இதன்படியே தமது ஆதரவாளர்களையும் வளர்க்கும் நிலைப்பாடே காணப்பட்டது. இவர்களின் சத்தியாக்கிரகப் போராட்டங்களை நான் கொச்சைப்படுத்த வரவில்லை. ஆனால் இவை கூடியளவு வாக்கு வேட்டையை இலக்காகக் கொண்டதாகவும் அமைந்திருந்தது என்றால் மிகையில்லை. இவர்கள் கூடியளவு தூரம், பிரச்சனைகளைத் தீர்ப்பதைவிட பிரச்சனைகள் இருந்து கொண்டிருப்பதையே விரும்பினார்கள். அதாவது தற்போதைய, நிகழ்கால நிலமை போல மக்களை எப்போதும் பரபரப்பான நிலையிலேயே வைத்திருக்க விரும்பினார்கள். எனவே நீங்கள் இலங்கையில் இரண்டு தேசங்கள் எவ்வாறு தோன்றின அதை ஊக்குவித்த (நேரடியாகவோ–மறைமுகமாகவோ) காரணிகள் இவ்வாறு தோன்றுவதற்குரிய தவிர்க்க முடியாததேவை என்பன பற்றிய வெளிப்படுத்தலை கட்டுரையினூடாக மேற்கொண்டீர்கள். அதேவேளை 'தமிழர் பிரச்சனையும் அரசியல் தலைமைகளின் பங்கும்' என்ற ரீதியில் தமிழரின் கடந்தகால வரலாற்றை மார்க்ஸியக் கண்ணோட்டத்துடன் விமர்சிக்க வேண்டும். 'தமிழர் பிரச்சனைகள்– அரசியல்கட்சிகள்' எனக் காணப்பட்ட உறவு பின்னர் 'தமிழர் பிரச்சனைகள் – அரசியல் குழுக்கள்' எனக் காணப்பட்டது. இந்த ரீதியில் போராட்டக் குழுக்கள் எந்தளவு தூரம் நேர்மையாக மக்கள் பிரச்சனைகளை முன்னெடுத்தன அல்லது மக்களை எந்தளவு தூரம் விழிப்புணர்வடையச் செய்தன.......... இன்னோரன்ன வரலாற்றுத்தகவல்கள் என்னைப் போன்றவர்களிற்கும் தமிழீழப்போராட்ட வரலாற்றில் தமிழ்க்குழுக்களின் பங்கினை பல்வேறு வகையில் திரிபுபடுத்திப் பார்ப்பவர்களிற்கும் அல்லது அது சார்பாக சரியாக தவறாக விளங்கிக் கொண்டவர்களுக்கும் சரியான நிலைப்பாடெடுக்க உதவும். எனவே இந்தவகையான வரலாற்றைச் சரியான வகையில் தருவதில் உங்களின் பங்கு மிகவும் தேவைப்படுகிறது.......

சுந்தரி, ஈழம்

உயிர்ப்பு ஆசிரியர் குழுவிற்க்கு!

உயிர்ப்பு இதழ்களிற்கிடையில் ஏன் இந்த நீண்ட கால இடைவெளி. அதுமட்டுமா கிரமமாகவும் வெளிவருதில்லையே! இடைவெளி அதிகமாகும் போது உயிர்ப்பு நின்றுவிட்டதோ என்று ஒவ்வொரு தடவையும் அஞ்சவேண்டியுள்ளது. இதுபோன்ற சஞ்சிகையை வெளிக்கொண்டு வருவதற்கு மிகவும் கடின உழைப்பு தேவைப்படும் என்பது உண்மை தான் என்றாலும் ஓரளவிற்காயினும் இடைவெளியை குறைத்து, சிரமமாக வெளியிடுவீர்ளா?

எதிர்பார்ப்புடன்....

கமலன், கார்த்திகேயன்

அன்புடன்,

'உயிர்ப்பு' ஆசிரியர் குழுவிற்கு வாழ்த்துக்கள்,

..... எனது பேராசிரிய நண்பர்கள் வாயிலாக உயிர்ப்பு–2 இதழ்படிக்கும் வாய்ப்புகிடைத்தது. இலங்கை தமிழர்களின் போராட்ட வழிதொடர்பாக ஒரு சிறந்தவழிப்பரிசீலனையை முற்போக்கு திசை வழித்தேடலை உயிர்ப்பு கட்டுரைகள் வெளிப்படுத்தின. 'தேசியசக்தி ஏகலைவன்' பெயரிடப்பட்ட கட்டுரை குறித்து நம்மை 5மணிநேரம் வரை விவாதிக்கத் தூண்டியது. அதன் தாக்கம் உயிர்ப்பின் சிறப்பை காட்டும். இங்குள்ள முற்போக்கு எழுத்தாளர்களால் கூட அவ்வளவு துல்லியமாக பார்க்க முடியாத தேசியபிரச்சினைக்குள் உள்ள வர்க்க பகுப்பாய்வை 'உயிர்ப்பு' முன்வைத்துள்ளது. நீங்கள் தேசியவிடுதலை போராட்ட சூழலில் வாழ்ந்து ஊன்றி நின்று பிரச்சி னைகளை அவாதானித்து கிரகித்து முன்வைக்கின்றீர்கள். நமக்கு அதுபோன்ற சூழலும் துல்லியமாக இல்லை. கூடவே வேறுபலவும் தமது பார்வையை எல்லைப்படுத்துகின்றது ......சமூக ஆக்கத்தில் நாட்டம் கொண்ட நண்பர்கள் சேர்ந்து படிப்பகம் ஒன்றை நடத்துகின்றோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிந்தனையை தூண்டுதல், தூண்டப்பட்டவர்களை வழிநடாத்தும் பணிகளும் செய்கின்றோம். உங்கள் அனுபவம் அதன் மீதானதும், தத்துவார்த்த புரிதல் மீதானதும் முன்னோக்கிய கருத்துகள் எமக்கு மிகவும் அவசியம். தேசியப் போராட்டத்தில் தொழிலாள வர்க்கப்பாதையை நாம் தெரிவு செய்து ஈடுபடுவதால் மிக மிககாத்திரமான பங்கை உயிர்ப்பு கட்டுரைகள் மூலம் அறிகின்றோம்.......... .

---

சகோதரன் வரதராசன், இந்தியா.

---

அன்புடையீர்,

உயிர்ப்பு–3குறித்து....பெண்ணிலைவாதம் குறித்த மொழிபெயர்ப்புக் கட்டுரையில் நாம் கற்றுக் கொள்ளவே நிறைய இருந்தது. தேசியவாதம் குறித்த விவாத த்திற்கான ஒரு முன்னுரை கட்டுரையும் ஏற்கனவே வெளிவந்திருந்த தேசியவாதம் பற்றிய கட்டுரைகளின் தொகுப்பாக விவாதத்திற்காகவே வெளிவந்திருந்தது.

'இலங்கையில் தேசங்களின் உருவாக்கம்' கட்டுரை தொடர்பாக........ தேசியம், தேசியவாதம் என்றாலே ஏதோபிற்போக்குத்தனமானது என்று கருதும் மார்க்சியர்களிடையே தேசியவாதத்தை மிகவும் எளிமையாகவிளக்க முனைந்த கட்டுரை, குறிப்பாக ஐக்கிய இலங்கையை கோருபவர்களுக்கு எதிராக தமிழ் தேசத்தை தேசியத்தை தூக்கி நிறுத்தும் பிரயத் தனத்தில்மிகவும் எளிமையாக விளங்கமுனைந்து தமிழ் தேசியத்தின் விடுதலைப் போருக்கான நியாயத் தன்மையை நிலை நிறுத்துவதற்குப் பதிலாக தமிழ் இனவெறிக்குள் இழுத்துச் சென்று விடுவதாக அக்கட்டுரை அமைந்து விட்டது போலுள்ளது. ...இக்கட்டுரையில், இரண்டாம் உலகப் போரின் போதும் சர்வதேசவாதியான ஸ்டாலின் கூட பழம்பெருமை பேசித்தான் ஆக வேண்டியிருக்கிறது (பக்கம் –27) என்ற கருத்தோடு எம்மால் உடன்பட முடியவில்லை. முதலில் ஸ்டாலின் சர்வதேசியவாதியா என்பதே சர்ச்சைக்குரியது. ஏனெனில் லெனினே ஸ்டாலின் ரசிய பெருந்தேசிய வாதத்திற்குப் பலியாகி விட்டார் என்று விமர்சித்தமையும், 3ம் அகிலம் கலைக் கப்பட்டதற்கு அவர் கூறிய கேலிக்குரிய காரணங்களையும் தொகுத்துப் பார்க்கும் போது ஸ்டாலின் சர்வதேசவாதியாக நடந்து கொள்ளவில்லை என்பது புலப்படும்.

மற்றும் சோவியத்யூனியன் நாசிப்படைகளால் தாக்கப்பட்ட போது அதற்கு எதிராக ரசியர்கள் மட்டும் போராடவில்லை. ஏனைய தேசிய இனங்களும், அவர்கள்தம் வளங்களும் படைவீரர்களும்கூட போரிட்டன. இந்நிலையில் மகாபீட்டர் இவான் பற்றி ஸ்டாலின் பேசி ரசியர்களை உசுப்பியதாவது ஏனைய தேசிய இனங்களுக்கு அச்சத்தையும் சோர்வையுமே உண்டு பண்ணியிருக்கும். அத்தோடு கம்யூனிசத்தையும், சோசலிசத்திற்காக போரிட்ட இலட்சக்கணககான மக்களையும் போரளிகளையும் அவமானம்படுத்துவதாகவே போயிற்று. அன்று ஊட்டப்பட்ட ரசிய பெருந்தேசிய வெறி, சுதந்திர குடியரசுகளாக பிரிந்து போய்விட்ட ஏனைய தேசிய இனங்கள் மீது இன்றும் ஆதிக்க வெறியாய் பாயவே செய்கிறது. இது வரலாறாகவே இருந்துவிட்டுப் போகட்டும். எமது தேசிய விடுதலைப் போராட்டத்திலும் இத்தகைய தவறு ஏற்பட்டுவிடக் கூடாது. வரலாற்றில் இருந்து எழுச்சிக்கு உந்தக்கூடிய கோசங்களை எடுக்கக் கூடாது என்பதல்ல. மாறாக தகுந்த ஆழமான பரிசீலனையின் பின்பு எடுத்துக் கொள்ளப்படவேண்டும். இன்று தமிழ் தேசிய விடுதலைப் போரில் சிவகுமாரனை தேசிய வீரராக அடையாளப் படுத்துவதற்கும் சங்கிலியனை தூக்குவதற்கும் கிடையேயுள்ள வேறுபாட்டினூடாக இதை நாம் துல்லியமாகமதிப்பிடலாம் .

---

தோழைமையுடன்.......

---

நட்புடன் உயிர்ப்பினர்க்கு!

.........'உங்களுடன் நாம்' ஓரளவு அனைவராலும் ஏற்கக் கூடியதாகவிருந்தது. போராட்டத்தை வழி நடத்துவது தொடர்பான உங்கள் கருத்துகள் வரவேற்கத்தக்கவை.

'தேசியவாதம் குறித்த விவாதத்திற்கான ஒரு முன்னுரை'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பலரை இவ்விவாதத்தில் இழுத்துவிடும் என எதிர்பார்க்கின்றேன். விவாதத்தில் ஈடுபடுபவர்கள் மார்க்சியக் கண்ணோட்டத்தைக் கைக்கொள்ள வேண்டுமேயன்றி மார்க்சிய மூலவர்களின் கண்ணோட்டத்தை அல்ல அவ்வாறு நிகழின் மார்க்சியம் பற்றிய தொடர்ந்த விவாதத்திற்கு வழி சமைக்குமேயன்றி தேசிய வாதத்திற்கல்ல. தொடர்ந்த விவாதங்களின் மூலமே நாம் ஒரு தீர்க்கமான முடிவை அடையமுடியும். போராட்டத்தை செவ்வனே வழி நடாத்த முடியும்.

பெண்ணிலைவாதக் கட்டுரை தமிழாக்கம் நன்றாக இருந்தது. இதுவரையில் தமிழில் வெளியாகாத வகை இதன் முதல்பந்தியே கட்டுரையின் உள்ளடக்கத்திற்குச் சான்றாக உள்ளது. அனைத்து பெண்ணிலை வாதிகளாலும் பெண்ணிலை வாதத்தை ஆதரிப்பவர்களாலும் உள்வாங்கப்பட வேண்டிய ஒரு கட்டுரை. உங்கள் பாதையை மாற்றி எவரும் எதிர்பார்க்காத நேரத்தில் இக்கட்டுரையை பிரசுரித்தமை மகிழ்ச்சியான விடயம். ஏனெனில் எமது தேசியவிடுதலைப் போராட்டத்தில் பெண்ணிலை வாதமும் மிகமுக்கியமான விவாதத்திற்குரிய விடயமாகவுள்ளது. எனவே இச்சந்தர்ப்பத்தில் இக்கட்டுரை தேவையான ஒன்றாகும்.

தேவதாஸின் இலங்கையில் தேசங்களின் உருவாக்கம் இலகுவில் விளங்கிக் கொள்ளக் கூடியதாகவிருந்தது. ஆனால் தமிழ் மக்கள் பக்கம் சார்ந்து எழுதப்பட்டது போல தோன்றுகிறது. பல தமிழ் அரசியல் வாதிகள் (இலங்கையிலும் சரி, இந்தியாவிலும் சரி) தமது பிழைப்பிற்காக உருவாக்கிய கோசங்களை நியாயப்படுத்தியுள்ளார். இக் கோசங்களால் மக்கள் விழிப்புப் பெறவில்லை. ஒரு மாயையிலேயே ஆழ்ந்தனர். அரசியல்வாதிகள் தாம் எதிர்பார்த்த கண்மூடித்தனமான ஆதரவை பெற்று தலைவர்களாக திகழ்ந்தனர். விளைவு அவ்வளவே. எவ்வாறாயினும் தேவதாஸ் அவர்கள் கைகொண்ட வரலாற்று ரீதியான பார்வைகள், எடுகோள்கள் ஆகியன தேசியப் பிரச்சனையில் அக்கறை கொண்டவர்களுக்கு மிகவும் உதவியானது என்பதில் ஐயமில்லை. தேவதாஸ் அவர்கள் தமிழ் தலைமைகள் செய்த துரோகங்களையும் விரிவாக தந்திருக்கலாம், இவை தவிர்க்கப்பட்டதானது. இக்கட்டுரையின் முழுமையை தடை செய்வதாக உள்ளது.

வ. ஐ. ச. ஜெயபாலனின் கடிதம் பல நல்ல அம்சங்களைக் கொண்டிருந்த போதிலும் தற்போதைய சந்ததிகள் அறிந்திராத சாதிப் பெயர்களை வெளிக் கொணர்ந்துள்ளது என எண்ணுகின்றேன். சாதிப்பெயர்கள் கையாண்டதை தவிர்த்திருக்கலாம் என எண்ணுகின்றேன். தற்போது இலங்கையில் சாதிப்பிரச்சனைகள் மட்டுப்பட்டுள்ளது என்பதுண்மை. சில கலப்பு மணங்களும் தலைதூக்கியுள்ளன அனைவரது எண்ணங்களும் செவ்வனே எமது தேசியவடுதலைப் போரட்டத்தை நோக்கிக் குவிக்கப்படின் காலப்போக்கில் புதிய சந்ததிகள் மத்தியில் சாதி, முற்றாகவே ஒழிந்து போகக் கூடிய சாத்தியகூறுகள் உண்டு.

நட்புடன்
மறவன் பேராதனை.

ஆசிரியர் குழுவிற்கு,

எமது போரட்டத்தில் அரசியல் தொடர்பான எவ்வளவோ முக்கியத்துவம் மிக்க விடயங்கள் இருக்கையில், பெண்ணிலைவாதம் தொடர்பான கட்டுரைக்கு உயிர்ப்பில் இத்தனை அதிக பக்கங்களை ஒதுக்கத்தான் வேண்டுமா? அத்துணை முக்கியத்துவம் உள்ளதா?

பரமசிவம் கொழும்பு

உயிர்ப்பு ஆசிரியர் குழுவிற்கு;

'உயிர்ப்பு' 3ம் இதழ் முதல் இரண்டையும் விட சிறப்பாகவும், வளர்ச்சியை காட்டுவதாகவும் உள்ளது. தேசிய விடுதலைப் போரட்டத்தை சரியாக முன்னெடுக்கும் திசையில் ஒரு நம்பிக்கையூட்டலை உயிர்ப்பு ஏற்படுத்தியுள்ளது. இலங்கையில் தேசங்களின் உருவாக்கம் போன்ற கட்டுரைகள், மேலும் பல அம்சங்களை உள்ளடக்கியதாக தொடர்ச்சியாக வரவேண்டும் என்பது எதிர்பார்ப்பு.

பக்க தொடர்ச்சி 55.....



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## மார்க்சியமும் தேசியப் பிரச்சனையும்

# அமைப்பியல்வாதம் தரும் புதிய வெளிச்சம்

ஏகலைவன்

தேசியப் பிரச்சனையை மார்க்சியம் சரியாக விளக்கத் தவறிவிட்டது என்ற விமர்சனத்தை இப்போது பரவலாகக் கேட்க முடிகிறது. தேசியப் பிரச்சனை என்பது முதலாளித்துவத்தின் வெளிப்பாடே எனவும், சோசலிசத்தின் வருகையுடன் இது மறைந்துவிடும் என்றும் பொதுவாக கூறப்பட்டதுண்டு. அவ்வாறே சோவியத்யூனியனில் தேசியப் பிரச்சனை முற்றிலும் தீர்க்கப்பட்டுவிட்டதாக சிலர் அண்மைக் காலம் வரையில் சாதித்து வந்தார்கள். ஆனால் சோவியத்யூனியன் பதினாறு குடியரசுகளாக சிதறுண்டதுடன், அக் குடியரசுகள் பலவற்றிலும் கூட மீண்டும் தேசியப் பிரச்சனைகள் தீவிரப்பட்டு வருவதும் மேற்கூறப்பட்ட எதிர்வு கூறல்களை மறுதலிப்பனவாகவே உள்ளது.

சித்தாந்தம் (Ideology) தொடர்பாக பிரதிபலிப்புக் கோட்பாடு (ReflexiveTheory) இப்போது கடுமையான விமர்சனத்திற்குள்ளாகி வருகிறது. சித்தாந்தம் என்பது வெறுமனேபொருளாதாரத்தின் பிரதிபலிப்பே என்ற குறுகிய பார்வையானது கடந்த காலத்தில் சமூகத்தில் எழுந்த பல தீவிரமான பிரச்சனைகளை விளங்கிக் கொள்ள தடையாக இருந்து விட்டதாக இப்போது விமர்சிக்கப்படுகிறது.

பெண்ணடிமைத்தனம் என்பதை தனிச் சொத்துடைமையின் தோற்றத்துடன் சேர்த்து விளக்க முனைந்தவர்கள், தனிச்சொத்துடமையின் மறைவுடன் பெண்ணடிமைத்தனமும் மறைந்துவிடும் என்று எதிர்வு கூறினர். ஆனால் சோசலிச சமூகங்களில் பெண்ணடிமைத்தனத்தின் சில வடிவங்கள் தொடர்ந்து நீடித்து வந்ததுடன், இவை சட்டரீதியாக சோசலிச சமுதாயத்தில் பெண்களிற்கு வழங்கப்பட்ட உரிமைகளைக் கூட பெண்கள் அனுபவிப்பதற்கு தடையாக இருந்தன என்பது இன்று வரலாற்று உண்மையாக உள்ளது. அத்துடன் முதலாளித்துவ சமூகங்களில் பெண்களது உரிமைகளிற்கான போராட்டங்களை இடதுசாரிகள் அணுகும் போது சமவேலைக்கு சம ஊதியம் என்பதற்கு மேல் அக்கறை காட்டாததனால், பெண்களது சொத்துரிமை, வாக்குரிமைக்கான போராட்டங்கள் இடதுசாரி இயக்கங்களிற்கு வெளியே நடைபெற்றன. இன்றும் கூட எமது சூழலில் பெண்கள் தமது உடல், உடற்செயற்பாடுகளின் மீது தமது சொந்த கட்டுப்பாட்டை நிறுவுவது பற்றி பேசும் போது, அவர்கள் வர்க்கம் பற்றி ஏதும் பேசவில்லையென்று குற்றம் சாட்டுபவர்களையும்காண முடிகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



- *கலை இலக்கியங்களின் பாத்திரம் குறித்து கடந்த காலத்தில் முற்போக்கு சக்திகள் நடத்திய விவாதங்களை இன்று திரும்பிப் பார்க்கும் எவரும் அத்தனை மகிழ்ச்சி கொள்ள முடியாத நிலைமையே இருக்கிறது. "கலை கலைக்காக" என்ற பூர்சுவா கோசத்தை நிராகரித்தது சரியானதுதான் எனினும், அதற்கு மேல் உள்ளடக்கத்திற்கு கொடுத்த அதீத முக்கியத்துவமானது கலை இலக்கியங்களின் அழகியல் அம்சத்தை ஓரேயடியாகப் புறக்கணிப்பதிலும், இறுதியில் அரசியல் கோசங்களை கலை இலக்கியத்தின் பேரால் எழுப்பியதும் நல்ல விளைவுகளை கொடுக்கவில்லையென்பதை இன்று திரும்பிப் பார்க்கும் எவரும் புரிந்து கொள்ள முடியும்.*

- *இசையின் வர்க்கத் தன்மை பற்றிய விவாதம் ஒன்று சில காலத்திற்கு முன்புதமிழகத்தில் சிறு பத்திரிகைகளில் நடைபெற்றது.*

மேலே கூறப்பட்ட நிகழ்வுகள் மிகவும் வித்தியாசமானவை. மிகவும் வேறுபட்ட தளத்தில், வேறுபட்ட காலத்தில், வேறுபட்ட நபர்களுடன் தொடர்புபட்டு நடந்தவையாகும். ஆனால் இந்த நிகழ்வுகளிற்கெல்லாம் பொதுவானதாக நின்று இவற்றை ஒன்றினைக்கும் ஒரு அம்சம் உண்டு. அதுதான் பொருளாதார வாதமாகும்.1 மார்க்சியத்தை பொருளாதார வாதமாகக் குறுக்கப் பார்த்ததன் விளைவுதான் இவையாகும் மேற்கூறப்பட்ட பலதரப்பட்ட தவறுகளையும் தமது சொந்த அரசியல் முன்னெடுப்புகளில் தவிர்க்க விரும்பும் யாருமே இந்த பொருளாதாரவாதம் தொடர்பாக விழிப்பாக இருப்பது அவசியமானதாகிறது பலசந்தர்ப்பங்களிலும் மார்க்சியம் வெறும் பொருளாதார வாதமாக குறுக்கப்பட்டு விடுகிறது. இந்த பொருளாதார வாதமானது சமூகத்திலுள்ள பலதரப்பட்ட பிரச்சனைகளையும் பொருளாதாரம் என்ற ஒரே அம்சத்தின் மூலமே விளக்கிவிட முனைகிறது. அனைத்துப் பிரச்சனைகளுக்கும் பொருளாதாரமே காரணம் என்கிறது. பாட்டாளி வர்க்கப்புரட்சியொன்றையே தீர்வாக முன்மொழிகின்றது.

இந்த வகையான கண்ணோட்டமானது யதார்த்தத்தில் சமூகத்தில் தமது கண்களுக்கு முன்னால், தமது சொந்த நாட்டில் நிகழ்ந்து கொண்டிருக்கும் மாபெரும் கொந்தளிப்புக்களைக் கூட சரியாக புரிந்துகொள்ளத் தவறிவிடுகிறது. இந்த சமூக முரண்பாடுகள் கட்டவிழ்த்துவிடும் பலதரப்பட்ட சமூக சக்திகளையும் மதிப்பிட தவறிவிடுகிறது. இதனால் சமூகத்தில் நிகழும்

---

*Structuralism என்பது பொதுவாக அமைப்பியல் வாதம் என்றே மொழிபெயர்க்கப் படுகிறது. Structure என்பது அமைப்பு எனப்படுகிறது. ஆனால்தமிழில் அமைப்பு என்ற சொல்லானது Form, System, Organigation, Apparatus போன்ற இன்னும் பல பதங்களையும் குறிக்கப் பயன்படுத்தப்படுவதால் தமிழில் அமைப்பு எனும் சொல்லானது பல மயக்கங்களை ஏற்படுத்த வாய்ப்புள்ளதாக கருதுகிறோம். அத்தோடு Structuralism உடன் தொடர்புடையConstrruction- கட்டமைத்தல், de Construction- கட்டவிழ்த்தல்,கட்டுடைப்பு, தகர்ப்பமைப்பு என வழங்கப்படுவதும் கவனிக்கத்தக்கது. எனவே Structure என்ற பதத்தை தமிழில் நாம் கட்டமைப்பு என்றே பாவிக்கிறோம்.ஆயினும் Structuralism என்பதை அமைப்பியல் வாதம் என்றே இப்போதைக்கு பயன்படுத்தி வருவோம்.*

*இங்கு கட்டமைப்பு என்பது எவையெல்லாம் தமக்கேயுரிய தனித்துவமானபண்புகளுடனும், தனித்துவமான இயக்க விதிகளுடனும், தமக்கேயுரிய தளத்தில் இயங்குகின்றனவோ அவற்றையெல்லாம் குறிப்பிடும் விதத்தில் விரிவான அர்த்தத்திலேயே பயன்படுத்தப்படுகிறது.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாபெரும் மாற்றங்களில் எந்தவித காத்திரமான பங்களிப்பும் ஆற்றமுடியாதவையாக கொம்யூனிஸ்ட்டு கட்சிகள்பல நாடுகளில் இருந்து வருகின்றன. முக்கியமான சமூக மாற்றங்களும், சமூகமாற்றங்களுக்கான முயற்சிகளும், மோதல்களும் கட்சிக்கு வெளியில் உள்ள சக்திகளால் நிகழ்த்தப்படுகின்றன. இதனால் புரட்சிகர கட்சியின் தேவை குறித்த கேள்விகள் கூட எழுப்பப்படுகின்றன.

பலசந்தர்ப்பங்களிலும் மார்க்சியம் வெறும் பொருளாதார வாதமாக குறுக்கப்பட்டு விடுகிறது. இந்த பொருளாதார வாதமானது சமூகத்திலுள்ள பலதரப்பட்ட பிரச்சனைகளையும் பொருளாதாரம் என்ற ஒரே அம்சத்தின் மூலமே விளக்கிவிட முனைகிறது.

புரட்சியாளர்கள் என்பவர்கள் சமூகத்தை வெறுமனே விமர்சித்துக் கொண்டிருப்பவர்கள் அல்லர். சமூகத்தை புரட்சிகரமாக மாற்றியமைக்கும் பொறுப்பை தமது தோள்களில் சுமப்பவர்கள். இவர்கள் தமது கடமையை செய்வதற்கு வரலாற்றுப் போக்கில் புரட்சிகரமான தலைமீடு செய்யவேண்டியது அவசியமானது. ஆனால் பொருளாதாரவாதக் கண்ணோட்டமானது சமூக யதார்த்தங்களை, சமூகத்தின் போராட்ட சக்திகளை சரியாக மதிப்பிடத் தடையாக இருந்து வருவதால் சமூகத்தில் நடைபெறும் போராட்டங்களில் கொம்யூனிஸ்ட்டு கட்சிகள் தமது முத்திரையை பதிக்க முடியாதவைகளாக ஆகிவிடுகின்றன. இதனால் இந்த போராட்டங்கள் முற்றிலும் தன்னியல்பு போக்கிலேயே நடைபெறுகின்றன. பல போராட்டங்கள் நெருக்கடிக்குள்ளாகின்றன; தோல்வியுறுகின்றன. இன்னும் பல சந்தர்ப்பங்களில் மக்களின் தன்னியல்பான போராட்டங்களின் தலைமை பிற்போக்கு சக்திகளின் கரங்களுக்குள் சிக்கிவிடுகின்றன. இப்படியான நிலைமைகளில், போராட்டத் தலைமை இவ்வாறு பிற்போக்கு சக்திகளிடம் சென்றதில் தமது பாத்திரம் குறித்து கொம்யூனிஸ்ட்டு கட்சிகள் சுயவிமர்சனம் செய்வதற்கு பதிலாக, போராட்டத்தின் பிற்போக்குத் தன்மையே பிற்போக்கு தலைமைகள் தோன்றுவதற்கான காரணம் என்று சப்புக் கொட்டிக் கொண்டு, புற உலகில் நடைபெறும் தீவிரமான அதிர்வுகள் எதுவும் தமது பொருளாதாரவாத கண்ணோட்டத்தை சிதைத்து விடாதபடி பக்குவமாக காத்துக் கொள்கின்றன.

சமூகத்தில் நடைபெறும் போராட்டங்களில் கொம்யூனிஸ்ட்டு கட்சிகள் புரட்சிகரமான தலைமீட்டை நிகழ்த்தாத போதிலும், போராட்டமே அதில் ஈடுபடுபவர்களுக்கு பல பாடங்களைக் கற்றுக் கொடுக்கிறது. இதனால் போராட்டத்தில் ஈடுபடுபவர்களில் ஒரு பகுதியினர் போராட்டத்தில் பெறும் அனுபவங்களைப் பொதுமைப்படுத்தியும், மார்க்சிய நூல்களை கற்பதன்மூலமும் விழிப்புணர்வு பெற்று அந்த போராட்டங்களை புரட்சிகரமாக முன்னெடுக்க முனையும் முன்னேறிய பிரிவினராக வளர்ந்து வருகிறார்கள். இப்படியாக, போராட்டத்தின் மூலம் உருவாகும் முன்னேறிய பிரிவினர் வேறுவிதமாக பிரச்சனைகளை முகம் கொடுக்க நேர்கிறது. சமூக யதார்த்தத்துடனும், போராடும் மக்களுடனும் மிகவும் நெருக்கமான தொடர்புகளைப் பேணிக் கொண்டு, அவற்றின் மீது செயற்பட்டுக் கொண்டிருக்கும் இந்த முன்னேறிய பிரிவினர், தமது போராட்டத்தின் சரியான, நியாயபூர்வமான தன்மை பற்றி உறுதியாக இருப்பினும்கூட, இவர்களால் மிகவும் உயர்வாக நேசிக்கப்படும் கோட்பாடானது இவர்களது நிலைப்பாட்டை பலப்படுத்துவதாக அமைவதில்லை. மார்க்சியம் எனும் பெயரில் இவர்களுக்கு பரிச்சயமான கோட்பாடானது பல தீர்க்கமான இடங்களில் மௌனம் சாதிப்பதாக இவர்கள் உணர்கின்றனர். இதனுடன் போராட்டத்தில் ஏற்படும் தேக்கங்கள், நெருக்கடிகள் இவர்களது உணர்வுகளைப் பாதிக்கின்றன. இந்த நிலையில் சிலர் மரபுவழி இடது சாரிகளின் பொருளாதாரவாத கருத்துக்களின் செல்வாக்கிற்கு உட்பட்டு, தாம் இதுவரை ஈடுபட்டு வந்த போராட்டத்தில் நம்பிக்கை இழந்து போராட்டங்களிலிருந்து ஒதுங்கிக் கொள்கிறார்கள். இது 'தத்துவம் ஒருவரை குழப்பிவிட்டதாக' போராட்ட வட்டாரங்களில் பேசப்படும் நிலைமையை தோற்றுவிக்கின்றது. இன்னும் சிலர் போராட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுப்பதில் தீவிரமாக இருப்பினும், கோட்பாடானது இவர்களது பாதையில் சரியான ஒளியைப் பாய்ச்சாமல் இருப்பதாகவே உணர்கிறார்கள். இது இவர்களது உணர்வுபூர்வமான, தீர்க்கமான செயற்பாடுகளுக்கு குந்தகமானதாக அமைகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எதிரியின் எல்லாவிதமான வார்த்தை ஜாலங்களையும் முறியடித்து முன்னேறிய பிரிவினரிடம் எழும் பலவிதமான கேள்விகள், சந்தேகங்களிற்கு உறுதியான பதில்களை அளித்து அவர்களை வென்றெடுத்து, தலைமை தாங்குவதற்கு அவசியமான 'சித்தாந்த மேலாண்மை' இவர்களிடத்தில் இருப்பதில்லை. இந்த நிலைமையானது யதார்த்தத்தில், போராட்டத்திலிருந்து எழுந்து வரும் புரட்சிகர சக்திகளைப் பலவீனப்படுத்தவும், ஏற்கனவே போராட்டத்தில் உருவாகிவிட்ட பிற்போக்குத் தலைமை உறுதிப்படவுமே வழிவகுக்கிறது.

## மார்க்சியம் என்பதென்ன?

சிலருக்கு முதற்பார்வையில் இந்தக் கேள்வியானது விஷமத்தனமானதாகக் கூடபடலாம். ஆனால் இன்று மார்க்சியமானது புரிந்துகொள்ளப்பட்டிருக்கும், வெளிப்படுத்தப்படும்,விவாதிக்கப்படும் விதங்களைப் பார்க்கையில் இப்படிப்பட்ட ஒரு கேள்வியை எழுப்புவது தவிர்க்கமுடியாதது என்றே படுகிறது.

பொதுவாக மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின், மாவோ போன்ற மார்க்சிய ஆசான்களது எழுத்துக்களின் திரட்சியே மார்க்சியம் என்றொரு விளக்கம் பரவலாக எமக்கிடையே காணப்படுகிறது. எனவே இந்த மூலநூல்களைப் படிப்பதும், அவற்றை எமது சூழலுக்கு ஏற்ற விதத்தில் அர்த்தப்படுத்திக் கொள்வதுமே (Interpritation) புரட்சியாளர்களது கடமை என்ற வகையில் பலமுயற்சிகள் அமைந்துவிடுகின்றன. "பாட்டாளி வர்க்கமே புரட்சிகரமான வர்க்கம்" என்றுதான் மார்க்ஸ் சொன்னார். "தேசியவாதத்தை முன்னெடுக்குமாறு லெனின் பாட்டாளிகளைப் பணிக்கவில்லை" "தரகு முதலாளி என்று மாவோ குறிப்பிட்டது யாரை"? இது போன்ற கேள்விகளே எமது விவாதங்களில் பெரும்பாலும் எழுப்பப்படுகின்றன.

இன்று எமக்கிடையே நடைபெற்றுவரும் விவாதங்களின் பின்னணியிலும் இந்த கேள்வியானது முக்கியத்துவம் பெறவே செய்கிறது. இன்று சிலர் வெளியிட்டுவரும் கருத்துக்களில் இயங்கியல் கண்ணோட்டமோ, பொருள்முதல்வாத அணுகுமுறைகளோ இருப்பதில்லை. மாறாக நபர்கள், சம்பவங்கள் என்று எடுத்துக் கொண்டு அவற்றை வெறுமனே பொதுப்புத்தி மட்டத்தில் விமர்சித்து அந்த விமர்சனங்களுடன் சில மார்க்சிய மேற்கோள்களைச் செருகி தமது கருத்துக்கள் தான் சரியான மார்க்சிய நிலைப்பாட்டை கொண்டிருப்பதாக உரிமை பாராட்டுபவர்களை காணமுடிகிறது. இப்படிப்பட்ட நிலைமைகளில் மார்க்சியம் என்றால் என்ன? என்ற கேள்வியை வெளிப்படையாகவே எழுப்புவது அவசியமானதாகிறது.

கோட்பாட்டுப் பிரச்சனைகள் யாவும் மூலநூல்களில் தீர்க்கப்பட்டுள்ளன. அவற்றை நடைமுறைப்படுத்துவதே புரட்சியாளர்கள் முன்னுள்ள ஒரேபணி என்றதொரு பார்வையும் பலரிடம் காணப்படுகிறது. இதுவே மேலே குறிப்பிட்ட வியாக்கியானங்களை முன்வைப்பதற்கான காரணமாகும்.

புரட்சியாளர்கள் என்பவர்கள் சமூகத்தை வெறுமனே விமர்சித்துக் கொண்டிருப்பவர்கள் அல்லர். சமூகத்தை புரட்சிகரமாக மாற்றியமைக்கும் பொறுப்பை தமது தோள்களில் சுமப்பவர்கள். இவர்கள் தமது கடமையை செய்வதற்கு வரலாற்றுப் போக்கில் புரட்சிகரமான தலையீடு செய்யவேண்டியது அவசியமானது.

ஆனால் யதார்த்தத்தில், ஒரு கோட்பாடானது, அது எவ்வளவு தான் முன்னேறிய கோட்பாடாக இருந்தாலும் கூட, சமூக மாற்றம் பற்றிய பொதுவான விதிகளை மட்டுமே கொண்டிருக்கும். இதனை வழிகாட்டியாகக் கொண்டு, குறிப்பிட்ட ஒரு நாட்டின், குறிப்பிட்ட காலகட்டத்தின் நிலைமைகளுக்குப் பொருத்தமான குறிப்பான விதிகளை வகுத்துக் கொள்வது அந்தந்த நாட்டிலுள்ள புரட்சியாளர்களது பணியாக அமைகிறது. மார்க்சியத்தை நடைமுறைப் படுத்துவதே புரட்சியாளர்களது கடமை என்ற கருத்தானது புரட்சியாளர்கள் முன்னேயிருக்கும் கோட்பாட்டுப் பணிகளை நிராகரித்து விடுவதால், இந்தக் கருத்து, புரட்சிக்கு மிகவும் பாதகமான விளைவுகளையே உருவாக்குகிறது. புரட்சியில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கோட்பாட்டுப் பணிகளின்முக்கியத்துவம் சரியாக உணர்ந்து கொள்ளப்பட்டால், இதனை செய்வதற்கு மார்க்சியத்தை வியாக்கியானம் செய்வது மட்டும்போதுமானதாக அமைந்து விடமாட்டாது. அதற்கு மேலாக, மார்க்சியத்தின் உயிர்நாடியான 'மார்க்சியமுறையியல்' என்பது சரியாக இனங்காணப்பட வேண்டியது முதன்மை பெறுகிறது. மார்க்சியமானது, வரலாற்றை, சமுதாயத்தை எவ்வாறு புரிந்து கொள்வது? சமுதாயத்தை எவ்வாறு மாற்றியமைப்பது? என்பது பற்றிய ஒரு முறையியலை அளிக்கிறது. இந்த முறையியல் தான் மார்க்சியத்தின் தீர்க்கமான அம்சமாகிறது. இந்த முறையியலை சமூகத்தின் பல்வேறு பிரச்சனைகளில் பிரயோகித்து பல கோட்பாடுகளை மார்க்சியம் உருவாக்கியுள்ளது . இந்த வகையில் மார்க்சியம் என்பது மார்க்சிய முறையியலையும் மார்க்சியக் கோட்பாடுகளையும் உள்ளடக்கியது என்பது சரியானதே. எனினும் மார்க்சியமானது மிகவும் முன்னேறிய கோட்பாடாகத் திகழ வேண்டுமாயின் அதன் முறையியல் அதிக கவனத்தை வேண்டி நிற்கிறது. மார்க்சியத்தின் இந்த முறையியல் தொடர்ந்தும் முனைப்பாக முன்னெடுக்கப்படும் போதுதான் மார்க்சியமானது புதிதாக உருவாகும் பிரச்சனைகளையும் மிகவும் வேறுபட்ட ஸ்தூலமான நிலைமைகளையும் முகங்கொடுக்கும் அதன் உயிர்ப்பாற்றலைக் கொண்டிருக்கும்.

மார்க்சியமானது வரலாற்றில் திடீரென உதித்த தொன்றல்ல. அதுவரை காலமும் சமூகத்தில் உருவாகியிருந்த பொருளாதார, தத்துவ, அரசியல் கருத்துக்களை கிரகித்து, ஜீரணித்து, அவற்றை ஓர் உயர்ந்த கட்டத்திற்கு வளர்த்தெடுத்ததே மார்க்சின் பணியாக இருந்தது. இந்த வகையில் மார்க்சியமானது விஞ்ஞானங்களின் விஞ்ஞானமாக அமைகிறது. எந்தவொரு விஞ்ஞானமும் வளராமல் இருப்பதில்லை. அந்த வகையில் மார்க்சியமானது தொடர்ந்தும் வளர்ந்து கொண்டிருப்பதாகவும் புரிந்து கொள்ளப்பட வேண்டும். வளர்ச்சி என்று வரும் போது அது நிலை மறுப்பின் நிலைமறுப்பு விதிக்கு உட்பட்டதே. அதாவது தேவையானால் தனது முன்னைய கோட்பாடுகள் சிலவற்றை நிலைமறுத்தும் வளர்ந்து செல்லும் என்பதை கருத்திற் கொள்ள வேண்டும். இப்படியாக தொடர்ச்சியாக நடைபெறும் நிலைமறுப்பின் நிலைமறுப்பினூடாகவே உயர்மட்ட வளர்ச்சியை எட்ட முடியும். இதற்கு மாறாக மார்க்சியத்தில் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் ஏற்கனவே தீர்வு காணப்பட்டுள்ளதாக கூறும் போது மார்க்சியத்தின் விஞ்ஞானத் தன்மையையே மறுப்பதாகவே அர்த்தப்படும். அணுவைப் பிளப்பது பற்றி திருக்குறள் பேசுவதாக குறிப்பிடும் ஒருவர், வேத நூல்களில் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் தீர்வு இருப்பதாக கூறும் ஒருவர் இப்படிச் சொன்னால் ஆச்சரியப்பட எதுவுமில்லை. ஆனால் விஞ்ஞானத்தின் பேரால்இவ்விதம் கூறுகையில் அசட்டுத்தனமே மிஞ்சும். மார்க்ஸ் இன்றிருந்தால், இன்றைய அறிவுத்துறையின் வளர்ச்சி நிலையில் சமுதாயம் புதிதாக முகம் கொடுக்கும் பிரச்சனைகளை எவ்வாறு அணுகியிருப்பார் என்பதை கருத்திற்கொள்ள வேண்டுமேயன்றி மார்க்ஸ் என்ன கூறினார் அல்லது குறிப்பிட்ட பிரச்சனையை கருத்திற் கெடுத்திருந்தாரா இல்லையா என்ற வகையில் விவாதித்துக் கொண்டிருப்பது மார்க்சியத்தை மூடிய கோட்பாடாக ஆக்கி அதன் முனைப்பை மழுங்கடித்து விடச் செய்கிறது.

மார்க்சியம் உருவான காலம் தொட்டு அது நடைமுறையில் செயல்படுத்தப்பட்டு மிகவும் விரிவான அனுபவங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது. இந்த அனுபவங்களை பொதுமைப் படுத்துவதும்,

யதார்த்தத்தில், ஒரு கோட்பாடானது, அது எவ்வளவு தான் முன்னேறிய கோட்பாடாக இருந்தாலும் கூட, சமூக மாற்றம் பற்றிய பொதுவான விதிகளை மட்டுமே கொண்டிருக்கும். இதனை வழிகாட்டியாகக் கொண்டு, குறிப்பிட்ட ஒரு நாட்டின், குறிப்பிட்ட காலகட்டத்தின் நிலைமைகளுக்குப் பொருத்தமான குறிப்பான விதிகளை வகுத்துக் கொள்வது அந்தந்த நாட்டிலுள்ள புரட்சியாளர்களது பணியாக அமைகிறது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவற்றிலிருந்து படிப்பினை பெறுவதும் முக்கியமானது. இது தவிர மார்க்சியத்தை நடைமுறைப்படுத்த எடுத்த முயற்சிகள் பல்வேறு நாடுகளிலும் பலதரப்பட்ட கேள்விகளை எம்முன் எழுப்பியுள்ளன. மார்க்சிய ஆசான்கள் முன்பே எதிர்பார்க்காத பல பிரச்சனைகளை வரலாறு இன்று முன்வைத்துள்ளது. இவற்றை மார்க்சிய முறையியலை பயன்படுத்தி விரிவாக பகுத்தாராய்வது இன்றைய அவசிய தேவையாகிறது. இதனை விட, பயன்படுத்தினார்களே ஒழிய, தயாராக இருந்த சூத்திரங்களுடன் திருப்தியுறவில்லை. இதனால் தான் லெனினும், மாவோவும் வரலாற்றில் மார்க்சிய கோட்பாட்டாளர்களாக இடம் பெறும் தகுதியைப் பெற்றார்கள். இந்த வகையில் இன்றைய தேவை சில சூத்திரங்களைஉச்சரிப்பதுடன் திருப்திகாண்பதல்ல. மாறாக மார்க்சியத்தை அதன் முழுமையான உயிர்ப் பாற்றலுடன் வளர்த்தெடுத்து பயன்படுத்தவதேயாகும்.

மார்க்சியமானது வரலாற்றில் திடீரென உதித்ததொன்றல்ல. அதுவரை காலமும் சமூகத்தில் உருவாகியிருந்த பொருளாதார, தத்துவ, அரசியல் கருத்துக்களை கிரகித்து, ஜீரணித்து, அவற்றை ஓர் உயர்ந்த கட்டத்திற்கு வளர்த்தெடுத்ததே மார்க்சின் பணியாக இருந்தது. இந்தவகையில் மார்க்சியமானது விஞ்ஞானங்களின் விஞ்ஞானமாக அமைகிறது.

விஞ்ஞானமானது இன்று பல துறைகளிலும் தொடர்ந்து, வளர்ந்து வருகிறது. தனது ஆய்வு முறைகளையே விசாலப்படுத்தி வருகிறது. இந்த நிலையில் மார்க்சியமானது விஞ்ஞானங்களின் விஞ்ஞானமாக, மிக முன்னேறிய கோட்பாடாக இருக்கவேண்டுமாயின் அது விஞ்ஞானத்தின் முறையியலில் இதுவரை ஏற்பட்டுள்ள வளர்ச்சிகளையும் உள்வாங்கி தன்னை வளர்த்துக் கொள்வது அவசியமானது. இந்த வகையில் மார்க்சியமானது ஒரு வளர்ந்து செல்லும் முறையியலாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும். இதற்கு மாறாக, மூலநூல்களை அப்படியே பேணும் முயற்சியானது, உண்மையில் மார்க்சியத்தை பாதுகாக்கும் பெயரில் மார்க்சியத்திற்கு விளைவிக்கப்படும் ஊறு என்பது புரிந்துகொள்ளப்பட வேண்டும். மார்க்ஸ் கூட தனது வாழ்நாளிலேயே தனது முன்னைய நிலைப்பாடுகள் சிலவற்றை மாற்றிக்கொள்ள நேர்ந்தது. லெனினும், மாவோவும் கூட அவர்களது காலங்களில் வாழ்ந்த பலரது மூலநூல்களை அப்படியே பேணும் முயற்சிகளை மீறிச் செயற்பட்டு, தமது வாழ்நாளில் தமது சூழ்நிலையில் புதிதாக எழுந்து வந்த பிரச்சனைகளை அணுகும் விதத்தில் மார்க்சியத்தை வளர்த்தெடுத்துத் தான்

மார்க்சியம் என்பது ஒரு விஞ்ஞானம் என்ற வகையில் அறிவை ஒன்று திரட்டுவது மட்டும் அதன் பணியல்ல. அப்படியாக இருந்திருந்தால் அது பல்கலைக்கழக பேராசிரியர்களுக்கு மட்டுமே உரிய ஒரு கோட்பாடாக இருந்திருக்கும். இதனை விட முக்கியமாக மார்க்சியமானது செயலுக்கான வழிகாட்டியாக இருப்பதன் மூலம் ஒடுக்கப்பட்ட மக்களது புரட்சிக்கான வாய்ப்புக்களை அகலத்திறந்து விடுவதாக இருக்கிறது. இதனாலேயே மார்க்சியமானது பரந்துபட்ட மக்களது கோட்பாடாக தன்னை உயர்த்திக் கொண்டுள்ளது. இறுதி ஆய்வில், மார்க்சியமானது திடமான ஒரு அரசியல் நடைமுறையாகவே இருந்து வருகிறது. இந்த வகையில் மார்க்சியமானது நடப்பிலுள்ள சமூக இயக்கத்தில் ஒரு புரட்சிகரமான அரசியல் தலையீடாக, உள்ளது. தாம் வாழும் சமூகத்திலுள்ள சமூக உறவுகள் குறித்தும், சமூக இயக்கங்கள் குறித்தும் இந்த இயக்கங்கள் அரங்கிற்கு கொண்டு வரும் புதிய சமூக சக்திகள் குறித்தும் விஞ்ஞான பூர்வமான விளக்கத்தை பெறாத வரையில் எந்தவொரு சமூகத்தையும் மாற்றியமைப்பது சாத்தியமற்றது. சமூகத்திலுள்ள ஸ்தூலமான நிலைமைகளை சரியாகப் புரிந்து கொள்ளாத வரையில் புரட்சிகர தலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மீடு செய்வதற்கான ஆற்றலைப் புரட்சியாளர்கள் பெறுவதில்லை. இன்றைய தேவை சூத்திரங்களின் தூய்மையை பாதுகாப்பதல்ல, மாறாக வெகுஜனங்களுக்கான விரிவான வாய்ப்புகளை திறந்து விடுவதேயாகும்.

தீவிரமான போராட்டங்கள் நிகழும் ஒரு சமூகத்தில், வெகுஜனங்களின் பல பிரிவினரும் வீதிகளுக்கு வந்துவிட்ட நிலையில், அந்த சமூக நிகழ்வுகள் பற்றிய சரியான மதிப்பீடுகளை உருவாக்குவதற்கு தடையாக இருக்கும் பொருளாதார வாதமானது மார்க்சியத்தை மூடிய கோட்பாடாக ஆக்கிவிடுகிறது. இதற்கு மேல் இந்த மூடிய கோட்பாடானது செயலுக்கான வழிகாட்டியாக அமையமாட்டாது. புரட்சியாளர்கள் தாம் வாழும் சமூகத்திலுள்ள உறவுகள் பற்றியும், அந்த சமூகத்தில் நிகழும் தீவிரமான போராட்டங்கள் பற்றியும், அப் போராட்டங்கள் அரங்கிற்கு கொண்டு வரும் சமூக சக்திகள் பற்றியும் முறையான மதிப்பீட்டிற்கு வருவதும், அந்த மதிப்பீட்டின் அடிப்படையில் சமூக மாற்றத்திற்கான ஒன்றிணைக்கப்பட்ட திட்டத்தை முன்வைப்பதும், அந்த திட்டத்தின் அடிப்படையில் சமூகத்தில் தீவிரமாகப் போராடிக் கொண்டிருக்கும் பலதரப்பட்ட சக்திகளையும் ஒன்றினைத்து, அவர்களுக்கு புரட்சிகரமாக தலைமை தாங்கவும் ஆற்றல் மிக்கவர்களாக இருக்கவேண்டும். மார்க்சியத்தை சரியானமுறையில் வளர்த்தெடுத்து பயன்படுத்துகையிலேயே இந்த ஆற்றலை புரட்சியாளர்கள் பெறமுடியும். இன்று மார்க்சியம் எதிர்நோக்கும் பலவித குறுக்கல் வாதங்களையும் முகம் கொடுத்து அவற்றை கடந்து மார்க்சிய முறையியலை சரியான முறையில் வெளிப்படுத்தவும், வளர்த்தெடுக்கவும் முயலும் ஒரு முயற்சியாக அமைப்பியல்வாதம் திகழ்வதால் மார்க்சிய அமைப்பியல் வாதமானது புரட்சிகர சக்திகளுக்கு சரியான திசைவழியைக் காட்டுவதாகவே அமைகிறது. இதுவரையில் மார்க்சியம் என்று பேசப்பட்டு வந்த கோட்பாட்டிலுள்ள இடைவெளிகளை இட்டு நிரப்புவதாகவும், மௌனங்களை பேச வைப்பதாகவும் அமைகிறது என்பதால் இன்று மார்க்சிய அமைப்பியல் வாதமானது புரட்சிகர சக்திகளது முதன்மையான அக்கறைக்குரியதாகிறது.

## அல்தூசரின் அரசியல் ரீதியிலான தலையீடு

சமூக உருவாக்கத்தை (Social Formation) அதன் இயக்கத்தை, வரலாற்றை எவ்வாறு புரிந்துகொள்வது? என்ற கேள்வியானது பல காலமாகவே எழுப்பப்பட்டு வந்ததுண்டு. வரலாறானது தற்செயல் நிகழ்ச்சிகளின் தொகுப்பெனவும், தனி மனிதனது சித்தத்திலிருந்து பிறப்பதாகவும் விளக்க முனைந்தவர்கள் இந்த தற்செயல்களதும், தனி மனிதர்களதும் தோற்றத்திற்கான காரணத்தை இறுதியில் கடவுளால் முன்னரே தீர்மானிக்கப்பட்ட விதியில் கண்டார்கள். இதன்படி சமூக உருவாக்கம், இயக்கம், வரலாறு போன்றவற்றை விளக்குவது மனித சக்திக்குஅப்பாற்பட்டதாகவும், முழுக்க முழுக்க தற்செயல் நிகழ்வுகளினூடாக நடைபெறும் ஒரு புரியாப் புதிராகவுமே விளங்கியது. வரலாற்று ஓட்டத்தின் முன்பு பரந்துபட்ட மக்கள் கைகளைக் கட்டிக்கொண்டு ஒன்றும் செய்ய முடியாது திகைத்துக் கொண்டிருக்கும் மந்தைகளாகவே கருதப்பட்டனர்.

> *மார்க்சியமானது விஞ்ஞானங்களின் விஞ்ஞானமாக, மிக முன்னேறிய கோட்பாடாகஇருக்க வேண்டுமாயின் அது விஞ்ஞானத்தின் முறையியலில் இதுவரை ஏற்பட்டுள்ள வளர்ச்சிகளையும் உள்வாங்கி தன்னை வளர்த்துக் கொள்வது அவசியமானது..*

வரலாற்றை முதன்முதலில் விஞ்ஞான பூர்வமாக விளக்க முனைந்த கார்ல் மார்க்ஸ், சமூகவாழ்வின் பல்வேறு தளங்களிலிருந்து பொருளாதார தளத்தை வேறுபிரித்தும், பல்வேறு உறவுகளில் இருந்து உற்பத்தி உறவுகளை தனிமைப்படுத்தியும் எடுத்து, இவற்றை அடிப்படையான, முதன்மையான, ஏனைய உறவுகளை நிர்ணயிக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



*"ஒரு சமூக இயக்கத்தை மதிப்பிடுகையில் அந்த சமூகம் இருக்கும் கட்டம், அது இயங்கிச் செல்லும் திசை, அந்த சமூக இயக்கத்தில் சம்பந்தப்படும் பிரதான சக்திகள் போன்றவற்றை சரியாக மதிப்பிடுவதன் மூலம் குறிப் பிட்ட சமூக மாற்றத்திற்கான திட்டத்தை யுத்த தந்திரத்தை வகுப்பதன் மூலம் புரட்சிகர சக்திகள் குறிப்பிட்ட சமூக இயக்கத்தில் உணர்வு பூர்வமாக செயற்படுவது சாத்தியமாயிற்று."*

காரணியாகக் காட்டினார். சட்ட உறவுகள் பற்றியும், அரசியல் வடிவங்கள் பற்றியுமான விளக்கங்களை அவற்றிலிருந்தோ அல்லது மனித மனத்தின் பொதுவான வளர்ச்சியிலிருந்தோ தேடாமல், சமூக வாழ்வின் பொருளாதார நிலையிலிருந்து தேடச் சொன்னார். 'சிவில் சமூகம்' பற்றிய விளக்கத்தை அரசியல் பொருளாதாரத்தில் தேடச் சொன்னார். உற்பத்தி சக்திகள் மற்றும் உற்பத்தி உறவுகளின் மொத்தமே சமூகத்தில் பொருளாதாரக் கட்டுமானத்தை உருவாக்குகிறது. இதுவே உண்மையான அத்திவாரமாகும். இதிலிருந்தே சட்டஅரசியல் மேற்கட்டுமானங்களின் குறிப்பிட்ட வடிவங்களாகிய சமூக உணர்வுகள் எழுகின்றன எனக்காட்டினார். இதுவே வரலாற்றை புரிந்துகொள்வதற்கான திறவு கோலாயிற்று.

கைத்தொழில் புரட்சியும், பூர்சுவா ஜனநாயக புரட்சியும் மேற்கு ஐரோப்பாவை முற்றாக உருமாற்றிக் கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில் வாழ்ந்த மார்க்ஸ், அடுத்தடுத்து வெவ்வேறு நாடுகளில் உற்பத்தி முறைகளில் ஏற்படும் மாற்றங்கள், அவற்றிற்கேற்ப ஒத்த தன்மையுள்ள சமூக மாற்றங்களை உருவாக்குவதைச் சுட்டிக்காட்டினார். இதன் மூலம் சமூக இயக்கத்தின் விதிகளை வெளிப்படுத்தினார். இதற்கு மேல் அரசியல் என்பது ஒரு விஞ்ஞானமாயிற்று. குறிப்பிட்ட ஒரு சமூக இயக்கத்தை மதிப்பிடுகையில் அந்த சமூகம் இருக்கும் கட்டம், அது இயங்கிச் செல்லும் திசை, அந்த சமூக இயக்கத்தில் சம்பந்தப்படும் பிரதான சக்திகள் போன்றவற்றை சரியாக மதிப்பிடுவதன் மூலம் குறிப்பிட்ட சமூக மாற்றத்திற்கான திட்டத்தை யுத்த தந்திரத்தை வகுப்பதன் மூலம் புரட்சிகர சக்திகள் குறிப்பிட்ட சமூக இயக்கத்தில் உணர்வு பூர்வமாக செயற்படுவது சாத்தியமாயிற்று. எந்த உருவகங்களும் உவமானங்களும் அவை எந்த நிகழ்வுகளை விளக்கப் பயன்படுகின்றனவோ அவற்றை குறிப்பிட்ட சில அம்சங்களில் மட்டுமே ஒத்திருக்கும். இந்த வகையில் அந்த நிகழ்வுகளின் குறிப்பிட்ட சில அம்சங்களை விளக்க உருவகங்களையும், உவமானங்களையும்பயன்படுத்துவது விரும்பத் தக்கதே. ஆனால் இந்த எல்லைகளிற்கு அப்பாலும் இந்த உருவகங்கள் அல்லது உவமானங்களைப் பின் தொடர்ந்து செல்ல முனையும் போது அது வேண்டாத இடர்களை கொண்டுவந்து சேர்த்து விடுகிறது. அடித்தளம்–மேற்கட்டுமானம் என்ற உருவகமானது அன்றிருந்த பொதுவான கோட்பாட்டுச் சூழலில் பொருளாதாரத்தின் முதன்மையான பாத்திரத்தை திட்டவட்டமாக வலியுறுத்துவதில் முக்கியமான பங்களிப்பைச் செய்தது என்பது உண்மைதான். ஆனால் இந்தநோக்கத்திற்கு அப்பாலும் இந்த உருவகமானது தொடரப்படுகையில் ஒரு வித நிர்ணய வாதத்திற்கு (Determinism) காரணமாகிறது. அதாவது அடித்தளமாகிய பொருளாதாரமே மேற்கட்டடுமானத்தின் அனைத்து அம்சங்களையும் அப்படியே, தானே நேரடியாக நிர்ணயிப்பதான ஒரு விளக்கமும் இந்த உருவகத்தை அதன் பயன்பாட்டு எல்லைக்கு அப்பாலும் தொடரும் போது உருவாகிவிடுகிறது. இந்தவிதமான நிர்ணய வாதத்தின் வெளிப்பாடே பொருளாதார வாதமாகிறது.

மார்க்ஸ் வாழ்ந்த காலத்திலேயே அவரை பின்பற்றிய சிலராலேயே மார்க்சின் மேற்கூறிய கண்டுபிடிப்பானது அதன் ஒரு கோடிக்கு (Extreme) எடுத்துச் செல்லப்பட்டு பொருளாதாரமே அனைத்தையும் நிர்ணயிக்கும் காரணியாக சித்தரிக்கப்படும் ஒருவித நிர்ணயவாதப்போக்கு (Determinism) குறுக்கல்வாதம் (Reductionism) உருவாக்கப்பட்டது. இந்தவிதமான பொருளாதாரவாத (Economism) விளக்கங்களை கண்டித்த மார்க்ஸ் அவர்களது அர்த்தத்தில் தானே ஒரு 'மார்க்சியவாதி அல்ல,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்று கேலியும் செய்தார். ஆயினும் இந்த போக்கு மார்க்சின் மறைவின் பின்பும் தொடர்ந்தது. ஏங்கல்ஸ் இந்த போக்குகளுக்கு ஏதிராக போராடுவதில் தனது கவனத்தை செலுத்த வேண்டியிருந்தது. ஏங்கெல்சின் மறைவுக்குப் பின்பும் கூட 2ம் அகிலத்தில் இதே தவறான போக்குகள் தொடரவே செய்தன.

இரண்டாம் அகிலத்தில் தொடர்ந்த பொருளாதார வாதத்தையும், அதன் குறிப்பான அரசியல் அமைப்பு வழிமுறையான தன்னியல்பு வாதத்திற்கும் எதிராக லெனின் போராடநேர்ந்தது. லெனின் எழுதிய 'என்ன செய்ய வேண்டும்?' 'ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சக்கட்டம்' போன்ற நூல்கள் கூட ஒரு விதத்தில் இந்த பொருளாதார வாதத்திற்கு ஏதிரான போராட்டத்தில் அரசியலின் முதன்மையான பாத்திரத்தை வலியுறுத்தும் நோக்கில் உருவானவையே. போல்ஷேவிக் கட்சி, அன்று பொருளாதார வாதத்திற்கு எதிராக நடத்திய போராட்டத்தின் முக்கியத்துவம் கருதியே கிராம்சி போல்ஷேவிக் புரட்சியை 'கார்ல்மார்க்சின் 'மூலதனத்திற்கு' (das Capital) எதிரான புரட்சி' என்று வர்ணித்தார். அந்த அளவிற்கு 2ம் அகிலத்துள் மார்க்சியமானது பொருளாதார வாதமாக குறுக்கப்பட்டிருந்தது.

பொருளாதார வாதம் என்பது மார்க்சியத்தை மிகவும் எளிமைப்படுத்தி புரிந்து கொள்ளப்படுவதன் விளைவு என்பதால், எவ்வளவு தான் எதிர்த்துப் போரிட்டாலும் கூட பொருளாதாரவாதமானது என்றென்றைக்குமாக மறைந்து விடுவதில்லை. அது மீண்டும் மீண்டும் பலதரப்பட்ட வடிவங்களில் மறுபிறப்பெடுக்கவே செய்கிறது. லெனின் மறைவை அடுத்து ஸ்டாலின் காலத்தில் மூன்றாம் அகிலத்தில் மீண்டும் பொருளாதாரவாதமே பிரதான போக்காக மாறியது. பொருளாதார வாதத்தின் வரட்டுச் சூத்திரத்திற்கு எதிராக இருபதுகளிலேயே எதிர்ப்புக்குரல்கள் கேட்க தொடங்கிவிட்டன. ஜோர்ஜ் லூக்கஸ் இருபதுகளில் பொருளாதார வாதத்தை விமர்சித்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர். 1930களில், அதுவரை பிரசுரிக்கப்படாதிருந்த மார்க்சின் இளமைக்கால படைப்புகள் முதன் முதலாக பிரசுரமானபோது அது மார்க்சிய சிந்தனையாளரிடையே பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. மார்க்சின் இந்த இளமைக்கால படைப்புக்களின் வெளிச்சத்தில் பொருளாதாரவாதத்திற்கு எதிரான தாக்குதல்கள் இன்னும் தீவிரமடைந்தன. 1940களில் கிராம்சியின் முக்கியமான பங்களிப்புகளும் பொருளாதாரவாதத்தை மறுப்பவையாகவே இருந்தன. 1950களில் உலகளாவிய மார்க்சிய சிந்தனையானது மார்க்சின் இளமைக்கால எழுத்துக்களாலேயே அதிகம் பாதிக்கப்பட்டிருந்தன. சாத்தர் இவர்களுள் குறிப்பிடத்தக்கவர். இப்படியாக பொருளாதாரவாதத்திற்கு எதிராக பலர் தொடர்ந்து போராடிய போதிலும், இவர்கள் அனைவருமே பொருளாதாரவாதத்திற்கு எதிர்கோடியாக இன்னோர் விதமாக குறுக்கல் வாதத்திற்கு பலியானார்கள். இவர்களால்முன்வைக்கப்பட்ட மானுடவாதம்,2 வரலாற்றுவாதம்,3 போன்றவை கெஹலியச்சாயல ; 4 கொண்டவையாக இருந்தன.

1956இல் சோவியத் கொம்யூனிஸ்ட்டு கட்சியின் 20வது கொங்கிரசில் குருஷேவ் ஆற்றிய ஸ்டாலினை நிராகரிக்கும் உரையில், அவர் சோசலிச மனிதாபிமானம், சமாதான சகவாழ்வு போன்ற கருத்துக்களை முன்வைத்தார். இது சோவியத் கொம்யூனிஸ்ட்டுக் கட்சி பிற்காலத்தில் பகிரங்கமாகவே முன்னெடுத்த பல சமரச நிலைப்பாடுகளின் தொடக்கமாக அமைந்தது. இதனைத் தொடர்ந்து சர்வதேச அளவிலும் கொம்யூனிஸ்ட்டுக் கட்சிகளிடையே பலதரப்பட்ட வர்க்க சமரச நிலைப்பாடுகள் பிரதான போக்காக மாறி பலம்பெற்றன. கறாரான வர்க்கக் கண்ணோட்டத்தைக் கைவிடுவது, சமரச பாதைகளை மேற்கொள்வது போன்ற சீர்திருத்த வாதங்கள் பலம் பெற்றன. இது இறுதியில் சோசலிச முகாம் பிளவுறவும், சர்வதேச ரீதியில் இடதுசாரிக் கட்சிகள் பிளவுறவும் இட்டுச் சென்றன.

இப்படிப்பட்ட ஒரு சிக்கலான கோட்பாட்டு, அரசியல், சர்வதேச சூழ்நிலையில் தான் அல்துாசர் தனது கருத்துக்களை முன்வைக்கிறார். அவரது முக்கியமான கண்டுபிடிப்புகள் மார்க்சை கறாராகவும், தீவிரமாகவும் மறுவாசிப்பு செய்ததன் விளைவாகும். இவரது முக்கியமான வாதங்களை செவ்வியல் மார்க்சியத்தின் மீதான விமர்சனங்களாக அல்லாமல், அன்றிருந்த குறிப்பான சூழலில் வைத்துப் பார்த்தால் மட்டுமே சரியாகப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புரிந்துகொள்ளப்படவும், அவற்றின் முக்கியத்துவம் முறையாக உணரப்படவும் முடியும். இந்த வகையில் அல்துாசரின் முயற்சிகள் தத்துவப் பேராசிரியர் ஒருவரின் வெறும் கல்விசார் பயிற்சியல்ல. மாறாக, மேற்கத்திய மார்க்சியத்தில் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக செல்வாக்குச் செலுத்தி வந்த போக்குகளை (ஹெலிய வாதம், வரலாற்றுவாதம், மானுடவாதம்) அல்துாசர் மறுதலித்தார் என்றால் அதற்கான காரணம், கோட்பாட்டு ரீதியில் பற்றாக்குறை இருப்பதானது வர்க்கப்போராட்டத்தின் அரசியல் செயல்பாடுகளில் பாரதூரமான எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் என்பதனாலாகும். போராட்டம் முகம்கொடுக்கும் யதார்த்தமான அரசியல் பிரச்சனைகளுக்கு போதிய அளவு விஞ்ஞானபூர்வமான அறிவைக் கொடுக்காமல், வெறும் சித்தாந்த5 சூத்திரங்களின் கற்பனையில் சுகம் காண்பதானது, அந்த பிரச்சனைகளை தீர்க்க உதவமாட்டாது. மாறகா அதற்கான தீர்வுகளை காணத் தடையாகவே இருக்கும். இதனால் அல்துாசரின் நோக்கம் அரசியல் ரீதியானதே. மார்க்சியத்தில் தோன்றிய இத்தகைய போக்குகளுக்கு எதிரான ஒரு கொம்யூனிஸ்ட்டின் தலைமீடாகவே அல்துாசரின் வாதங்கள் புரிந்து கொள்ளப்பட வேண்டும். இந்த பின்புலத்தில் வைத்துப் பார்த்தால் மட்டுமே இதன் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ள முடியும்.

## மார்க்சிய தத்துவம்
## *(Marxist Philosaphy)*

மார்க்சியத்தை வட்டமிடும் பொருளாதாரவாதம், ஹெலியவாதம் போன்ற இரண்டுவிதமான குறுக்கல் வாதங்களையும் களைந்து மார்க்சுக்கேயுரிய அவரது அசலான (Orignal) சுயமான சிந்தனையை நிலை நாட்டுவதே அல்துாசரின் அக்கறைக்குரிய விடயமாகிறது. இந்த நோக்கிலேயே மார்க்சின் படைப்புகளை மறுவாசிப்பு செய்கிறார். இந்த நோக்கத்திற்கு, அப்போது மொழியியல், மானுடவியல் போன்ற துறைகளில் மிகவும் பிரபலமாக இருந்த அமைப்பியல்வாத அணுகுமுறைகளையும், உளவியலில் கையாளப்படும் 'கூறுகாண் படிப்பு'6 போன்ற அணுகு முறைகளையும், அறிவியல் உருவாக்கியிருந்த 'சிந்தனைக் கட்டு', 'அறிவுத் தோற்ற உடைவு' போன்ற கருத்தாக்கங்களையும் எடுத்தாள்கிறார். அதுவரை காலமும் விஞ்ஞானத்திலும் பல்வேறு முறையியல்களிலும் ஏற்பட்டிருந்த வளர்ச்சிகளை தனது நோக்கங்களுக்கு பயன்படுத்திக் கொள்கிறார்.

நீண்ட காலமாகவே மொழியியலானது சொற்களின் அர்த்தங்களை அவற்றின் ஒலியை மையமாக வைத்து தேடும் ஒருவித சப்தமையவாத (Logocentrism) ஆய்வு முறைகளை மேற்கொண்டிருந்தது. இதற்கு மாறாக, சுசூர், சொற்களுக்கான அர்த்தங்களை அவற்றின் ஒலியை மையமாக வைத்து தேடாமல் இந்த சொற்களிற்கிடையிலான ஓசை வேறுபாட்டிலும், இந்த சொற்கள் தமக்குள் கொள்ளும் உறவிலும் தான் அர்த்தம் கொள்வதாக நிரூபித்தார். இந்த விதமான விளக்கமானது– வேறுபாடுகளை வலியுறுத்துவதும், வேறுபட்ட கூறுகளின் உறவில் அர்த்தம் பெறுவதும் என்ற கண்டுபிடிப்பானது– மொழியியலில் மட்டுமன்றி ஏனைய துறைகளிலும் கூட பல புரட்சிகரமான மாற்றங்களுக்கு வழிவகுத்தன.

வெடிமருந்துகளையும், அச்சியந்திரத்தையும், மருத்துவத்தையும், கணிதத்தையும், வானவியலையும் 'கீழைத்தேய' மக்களிடமிருந்து கற்றுக்கொண்ட ஐரோப்பியர், தம்மை பண்பாடுடைய நாகரீக சமூகங்களெனவும் ஏனைய சமூகங்களை பண்பாடற்ற காட்டுமிராண்டிகளெனவும் கூறிவந்தனர். இந்த விதமான ஐரோப்பிய மையவாதமே (Eurocentrism) மானுடவியலிலும் ஆட்சிசெலுத்தி வந்தது. லெவிஸ்ட்ராஸ் வேறுபட்ட சமூக உருவாக்கங்களை மதிப்பிடும் போது ஐரோப்பியர்கள், தமது சமூக விழுமியங்களை அடிப்படையாக வைத்து அணுகாமல், அந்தந்த சமூகங்கள் தமக்கென சொந்தமான, தனித்துவமான விழுமியங்களை கொண்டிருப்பதை சுட்டிக்காட்டி, அவற்றை தனியான கட்டமைப்புகளாக இனம்கண்டு, குறிப்பிட்ட சமூகங்களை மதிப்பிடும்போது அவற்றின் விழுமியங்களின் அடிப்படையில் வைத்து அணுக வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். மானுடவியலில் நிலவிவந்த ஐரோப்பிய மையவாத நிற வெறி, கொலனித்துவ கருத்துக்களுக்கு எதிரான அடியாக இது அமைந்தது.7



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இவ்வாறே உளவியலில் சிக்மன் பிராய்ட் பயன்படுத்திய கூறுகாண் படிப்பு என்பதுவெறுமனே ஒருவரது படைப்புகளை அவற்றில் எழுதப்பட்டவற்றை படிக்காமல், அவரது மனவோட்டத்தை கண்டறியும் நோக்கில் மார்க்சின் முறையியலை அவரது படைப்புகளினூடாக கண்டறிய பயன்படுத்தப்பட்டது. அவ்வாறே பெக்சலாட்டு உடைய 'சிந்தனைக் கட்டு'8 எனும் கருத்தாக்கம், கறாரான கோட்பாட்டுத் தன்மையை வலியுறுத்தவும், 'அறிவுத்தோற்ற உடைவு'9 எனும் கருத்தாக்கம் மார்க்சின் சிந்தனை வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றங்களை, பாய்ச்சல்களை கண்டுகொள்ள அல்துாசருக்கு பயன்பட்டது.

அல்துாசரின் புதிய கண்டுபிடிப்புகள் மார்க்சை மீண்டும் மறுவாசிப்பு செய்ததனால் ஏற்பட்டவையாகும். பிறருடைய கருத்தாக்கங்களைக் கொண்டு, பிறதுறைகளின் கலைச் சொற்களைக் கொண்டும் மார்க்சிடம் ஏற்கனவே இருந்த எண்ணங்களையும், சிந்தனைகளையும்தான் அல்துாசர் வெளிப்படுத்தினார்.

மார்க்சிற்கே உரிய சிந்தனைகளை வெளிப்படுத்தும் நோக்கில் மார்க்சை கூறுகாண் படிப்பு செய்யும் அல்துசார், மார்க்சின் படைப்புகள் அனைத்தையுமே அப்படியே ஏற்றுக்கொள்வதில்லை. ஹெகல், பயபார்க் போன்றோரது செல்வாக்கிலிருந்து முற்றாக விடுபடாத நிலையில் எழுதப்பட்ட மார்க்சின் இளைமைக்கால எழுத்துக்களை நிராகரித்து விட்டு தனது முன்னோரிடமிருந்து மட்டுமல்லாமல், தனது இளைமைக்கால கண்ணோட்டங்களில் இருந்து முறித்துக்கொண்டு, தனக்கென சுயமான சிந்தனைகளை உருவாக்கிக்கொண்ட 'முதிர்ந்த' மார்க்சை அங்கீகரித்து, அவரது பிற்கால எழுத்துக்களையே இந்த நோக்கத்திற்கு பயன்படுத்திக் கொள்கிறார். இப்படியான அறிவுத்தோற்ற உடைவு மார்க்சில் 1845ல் ஏற்பட்டதாக குறிப்பிடும் அல்துாசர் 1845 இற்கு முந்தைய மார்க்சின் எழுத்துக்களை—அதாவது இளம் மார்க்சை—நிராகரித்துவிட்டு, 1847 இற்கு பிந்திய எழுத்துக்களை—அதாவது முதிர்ந்த மார்க்சையே அங்கீகரிக்கிறார். 1845-47 வரையான காலகட்டம் மாறும் காலகட்டம் என்பது அல்துாசரின் அபிப்பிராயமாகும்.

1845 இல் மார்க்ஸ், தனது முன்னையகண்ணோட்டங்களிலிருந்து முறித்துக்கொண்ட போதிலும், எந்தவொரு புதிய போக்கும் உடனடியாகவே மேலாண்மையைப் பெற்றுவிடுவதில்லை என்பதையும் சுட்டிக்காட்டி, மார்க்சின் முதிர்ந்த எழுத்துக்களில் கூட ஹெகலிய போக்கின் மிச்ச சொச்சங்களும் கோட்பாட்டு ரீதியில் துல்லியமின்மையும் ஆங்காங்கே காணப்படுவதாக அல்துாசர் குறிப்பிடுகிறார். இந்தவிதமான மிச்சசொச்சங்களை களைந்து, மார்க்சிற்கேயுரிய அசலான சிந்தனைகளை வேறுபடுத்தி எடுப்பதாயின் மார்க்சின் பிற்கால படைப்புக்ளை தீவிரமானதும், கறாரான துமான வாசிப்பிற்கு உட்படுத்துவது அவசியம் என்கிறார். மார்க்சின் 'மூலதனம்' எனும் நூலானது பலருக்கு ஒரு அரசியல் பொருளாதார நூலாக விளங்க, அல்துாசருக்கு இது மார்க்சிய தத்துவத்தின் விளைநிலமாக தென்படுகிறது.

மார்க்சின் அசலான சிந்தனைகளை இனம்காணும் நோக்கில் முதிர்ந்த மார்க்சின்படைப்புகளை ஆராயப்புகும் அல்துாசர், அதற்கான காரணத்தை பின்வருமாறு குறிப்பிடுகிறார். மார்க்சியம் என்பது இரண்டு மிகவும் நெருக்கமான, ஆனால் தனித்துவமான துறைகளால் ஆனது. அவையாவன,

1) இயக்கவியல் பொருள்முதல்வாதம்—மார்க்சிய தத்துவம் (Marxist philosophy) இது அறிவின்தோற்றம் மற்றும் அதன்வரலாறு பற்றிய விஞ்ஞானமாகும்.

2) வரலாற்று பொருள்முதல்வாதம்—மார்க்சிய விஞ்ஞானம் (Marxist Science) இது சமூக உருவாக்கம் மற்றும் அவற்றின் வரலாறு பற்றிய விஞ்ஞானமாகும்.

மார்க்ஸ், இந்த இரண்டு துறைகளையும் ஒரே செயலினுடாகத்தான் படைத்தார். அதாவது வரலாற்றுப் பொருள்முதல் வாதத்தை உருவாக்கிச்செல்லும் போக்கிலேயே இந்த விஞ்ஞானத்திற்கு வழிகாட்டும் தத்துவமான இயக்கவியல் பொருள் முதல் வாதத்தையும் படைத்துச் சென்றார். ஆனால் இந்த இரண்டு துறைகளிலும் வரலாற்றுப் பொருள்முதல் வாதமானது மார்க்சின் பிற்காலப் படைப்புக்களில் விரிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இது மார்க்சிற்கு பின்னால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வந்த லெனின் போன்ற, வர்க்கப் போராட்டத்தில் நடைமுறையில் ஈடுபட்ட கோட்பாட்டாளர்களால் இன்னும் வளர்த்தெடுக்கப்பட்டு செழுமைப்படுத்தப்பட்டுள்ளது. இயக்கவியல் பொருள் முதல் வாதமானது மார்க்சின் பிற்காலப் படைப்புக்களில் உள்ளார்ந்திருந்து வரலாற்றுப் பொருள்முதல்வாத கருத்துக்களை வழிநடத்தும் விதத்தில் செயற்பட்டாலும் அது வரலாற்றுப் பொருள் முதல்வாதம் போன்று வெளிப்படையாக பேசப்படவில்லை. அதாவது இயக்கவியல் பொருள் முதல்வாதமானது புதையுண்டு ஆனால் தீவிரமாக செயற்படும் (Burried but active) நிலையில் இருந்து மார்க்சின் கருத்துக்களை வழிநடத்தும் தத்துவமாக, முறையியலாக உள்ளது. இப்படியாக இயக்கவியல் பொருள்முதல் வாதம் விரிவாக மார்க்சின் படைப்பில் புதையுண்டு ஆனால் செயற்படும் வடிவில் காணப்படும் போதிலும் வரலாற்றுப் பொருள் முதல்வாதம் போன்று நேரடியாகவும், வெளிப்ப டையாகவும், அதிகம் பேசப்படுவதில்லை. லெனின் வார்த்தையில் சொன்னால், இயக்கவியல் பொருள் முதல்வாதத்திற்கான "அத்திவாரம் மட்டுமே இடப்பட்டுள்ளது".

இப்படியாக மார்க்சியத்தின் இரண்டு துறைகளிலும் காணப்படும் அசமத்துவமான வளர்ச்சியானது பல நெருக்கடிகளுக்கு காரணமாகிறது.

1) இயக்கவியல் பொருள்முதல் வாதம், வரலாற்றுப் பொருள் முதல்வாதம் ஆகியவை இரண்டு தனித்துவமான, வேறு பட்ட துறைகள் என்று புரிந்து கொள்ளப்படாமல் ஒன்றோடொன்று போட்டுக் குழப்பப்படுகிறது. இயக்கவியல் பொருள் முதல் வாதத்தை வரலாற்று பொருள் முதல் வாதமாக குறுக்கிவிடுவதானது வரலாற்று வாதமாகிறது. மாறாக வரலாற்று பொருள் முதல் வாதமானது இயக்கவியல் பொருள்முதல்வாதமாக குறுக்கப்படுகையில் அது நேர்க்காட்சிவாத10 அனுபவவாத11 அர்த்தப்படுத்தல்களுக்கு இட்டுச்செல்கிறது. இப்படியாக மார்க்சியத்தில் பல தவ றான போக்குகள் இந்தஇரண்டு துறைகளினதும் அசமத்துவமான வளர்ச்சியிலிருந்து பிறக்கின்றன.

2) மார்க்சின் சிந்தனைகளை உள்ளார்ந்து நின்று வழிநடத்தும் மார்க்சிய தத்துவமானது வளர்த்தெடுக்கப்படாத நிலையில், மார்க்சிய விஞ்ஞானமானது ஒரு குறிப்பிட்ட அளவிற்கு வளர்த்தெடுக்கப் பட்டுள்ளதென்றால் அது, பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தாமலில்லை. இயக்கவியல் பொருள் முதல் வாதத்தின் விஞ்ஞானதன்மையானது விழிப்புணர்வுடன் காக்கப்படுகையில் அது, வரலாற்றுப் பொருள்முதல் வாதத்தை அதன் பலவீனமான புள்ளிகளிலும், எல்லைகளிலும் அச்சுறுத்தும் சித்தாந்தங்களிலிருந்து தற்காத்துப் பலப்படுத்தமுடியும். தத்துவ அக்கறை இல்லாது விஞ்ஞானமானது தன்னியல்பாக வளர அனுமதிக்கப்படுகையில், அது சித்தாந்தத்தின் வெளிப்படையான ஊடுருவலையும், அச்சுறுத்தலையும் முகம் கொடுக்கும் ஆற்றலற்றதாகி விடுகிறது. கடந்த காலத்தில் இதுதான் நடைபெற்றது. தொடர்ந்தும் இந்தநிலைமையை அனுமதிப்பது இன்னும் ஆபத்துக்களை வருவித்துக் கொள்வதாகி விடும். எதிர்காலத்திலும், விஞ்ஞானமானது அதன் சொந்த செயற்பாடுபற்றிய வெளிப்படையான கோட்பாடுகளைக் கொண்டிராத வரையிலும் இது நடைபெறவே செய்யும். இதனால் வரலாற்றுப் பொருள் முதல்வாதத்தின் எதிர்காலமே. இன்று இயக்கவியல் பொருள்முதல்வாதமானது சரியான முறையில் வரையறுக்கப்பட்டு, வளர்த்தெடுக்கப்படுவதிலேயே தங்கியுள்ளது. நன்கு உருவாக்கப்பட்ட மார்க்சிய தத்துவமானது, மார்க்சிய விஞ்ஞானத்திற்கு, அதன் பலவீனமான புள்ளிகளை இனங்கண்டு கொள்வதற்கும், தீர்வுகானப்படக் கூடிய விதத்தில் அதன் பிரச்சனைகளை தெளிவாக முன்வைப்பதற்கும், அதன் பணிகளுக்கு போதுமான கருத்தாக்கங்களை வழங்குவதற்கும், அது இப்போதுதான் தொடங்கியுள்ள அல்லது இனிமேல் தான் தொடங்கவிருக்கும் ஆய்வுகளில் அதன் பாதையை சரியாக அமைத்துக்கொடுத்து அதன் வெற்றியை உத்தரவாதப்படுத்தவும் மிகவும் அத்தியாவசியமாகும்.

3) மார்க்சிய படைப்புகளில் சிலபிரச்சனைகள் விரிவாகவும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆழமாகவும் ஆராயப்பட்டு அவற்றிற்கு தீர்வுகள் காணப்பட்டுள்ளன. ஆனால் இன்னும் சில பிரச்சனைகள் இவ்வாறு விளக்கப்படவில்லை. எனவே மார்க்சிய ஆய்வு முறையை வழிநடத்தும் மார்க்சிய தர்க்கமுறையை, முறையியலை, தத்துவத்தை சரியாகப் பற்றிப் பிடித்துக்கொண்டால் மட்டுமே, மார்க்சால் அப்போது போதியளவு விளக்கப்படாத பிரச்சனைகளில் சரியான புரிதலைப் பெறும்விதத்தில் இந்த முறையியலை பயன்படுத்துவது சாத்தியப்படும். அத்தோடு கடந்த ஒரு நூற்றாண்டுக்கும் கூடிய புரட்சிகர அமைப்புகளின் செயற்பாடுகளும், சோசலிசத்தை கட்டுவதில் 70 வருடங்களாக பெற்ற அனுபவங்களும், வேகமாக மாறிவரும் சர்வதேச நிலவரங்களும் மார்க்சியம் முன்பு அறிந்திராத, எதிர்பார்த்திருக்க முடியாத பல புதியபிரச்சனைகளை முகம் கொடுக்க நேர்ந்துள்ளது. இவற்றைச் சரியாகக் கையாண்டு தீர்வுகளைக் கண்டறிவதற்கு மார்க்சிய தத்துவம் பற்றிய சரியான புரிதல் மிகவும் அவசியமானதாகிறது. இவ்வாறே புரட்சிகர அமைப்புகளினுள்ளும், புரட்சியாளர்களது சர்வதேச அமைப்புகளினுள்ளும் எழும் முரண்பாடுகளை சரியாகக் கையாண்டு தீர்வு காண்பதற்கும் மார்க்சிய தத்துவத்தில் வழிகாட்டுதல் அத்தியாவசியமானதாகும்.

இப்படியாக இன்று மார்க்சியமும், புரட்சிகர இயக்கங்களும் முகம் கொடுக்கும் பல்வேறு நெருக்கடிகளையும் வெற்றிகரமாக சமாளித்து வரலாற்றில் அவற்றின் பாத்திரத்தைசரியான விதத்தில் நிலைநாட்டுவது மார்க்சியதத்துவத்தைசரியானவிதத்தில் உருவாக்குவதிலேயே தங்கியுள்ளதென அல்தூசர் வலியுறுத்தினார். 'மார்க்சின் தத்துவ சிந்தனையை கண்டறிவது' என்பதே அல்தூசரது படைப்புகளின் மையமானதும், மேலோங்கியிருப்பதுமான அக்கறையாகும். மார்க்சிய தத்துவத்திற்கு மிகவும் கறாரானதும், வளமானதுமான வரைவிலக்கனத்தை உருவாக்குவதே உடனடித தேவையாக குறிப்பிடும் இவர், மார்க்சை மறுவாசிப்பிற்குட்படுத்துவதானது தத்துவவியலாளர் ஒருவர் மோற்கொள்ளும் வெளிப்படையான தத்துவப் பணியாகவே அமைந்துவிடுகிறது.

## அடித்தளம் – மேற்கட்டுமானம் ஆகியவற்றிடையிலான உறவுகள்

மார்க்சிய தத்துவத்தை சரியாக இனம்காணும் நோக்கில் செயற்படும் அல்தூசரின் கவனமானது மார்க்ஸ் குறிப்பிடும் அடித்தளம்–மேற்கட்டுமானம் ஆகியவற்றுக்கிடையிலான உறவுபற்றியதாக குவிக்கப்படுகிறது. உற்பத்தி சக்தியையும், உற்பத்தி உறவுகளையும் கொண்ட பொருளாதாரத்தை மார்க்ஸ் அடித்தளம் என்றார். கலை, இலக்கியம், மதம், சட்டம், அரசியல், போன்ற சித்தாந்தங்களை மேற்கட்டுமானம் என்றார். இவற்றில் மேற்கட்டுமானமானது இறுதியில் பொருளாதார அடித்தளத்தால் நிர்ணயிக்கப்படும் என்றார். மார்க்சின் இந்த ஆய்வானது அதன் ஒரு கோடிக்கு இட்டுச் செல்லப்படுகையில் பொருளாதார வாதமாகிவிடுகிறது. பொருளாதாரமே அனைத்தையும் நிர்ணயிப்பதாக கூறும் பொருளாதார வாதத்தை மார்க்சோ, ஏங்கெல்சோ அங்கீகரிக்கவில்லை என்பதை ஏங்கெல்சின் மேற்கோள்களை காட்டி அல்தூசர்விளக்குகிறார்,

'இறுதியாக வரலாற்றை நிர்ணயிப்பது உற்பத்தியும், யதார்த்த ஜீவிதத்தை மறுஉற்பத்தியும் செய்வதுதான். இதற்கு மேலாக நானோ மார்க்சோ ஏதும்சொல்லி விடவில்லை. நாங்கள் சொல்லாததை யாராவது வேண்டுமென்றே திரிபுபண்ணி பொருளாதாரம் தான் எல்லாவற்றையும் நிர்ணயம் செய்யுமென்று சொன்னால் அது அர்த்தமற்றது, தவறானது, பொருளாதாரச் சூழல் அடிப்படையானது ஆனால் மேற்கட்டுமானத்தைச் சார்ந்த, வர்க்கப் போரின் பலனாக ஏற்படும் அரசியலும், சட்டங்களும், நீதிகளும், நிர்ணயங்களும், போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் அனிச்சையாக மூளையில் ஏற்படுத்தும் அரசியல், நீதி, தத்துவ, மதக்கருத்துக்களும் வரலாற்றை நிர்ணயம் செய்கின்றன.'

"............பிரஷ்ய அரசு வரலாற்றில் பொருளாதாரக் காரணங்களால் தான் எழுந்தது என்று ஒத்துக் கொள்ளலாம். ஆனால் வடஜேர்மனியின் பொருளாதார,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மொழிவளர்ச்சிக்கும், வடக்கிற்கும், தெற்கிற்கும் உள்ள மதவேறுபாட்டிற்கும் பொருளாதாரக் காரணங்களைக் காண்பவர்கள் தவறு செய்பவர்களே......'

'இளைஞர்கள் பலர் பிற துறைகளை விட பொருளாதாரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதற்கு நானும், மார்க்சும் கூட ஓரளவு குற்றம் சாட்டப்பட வேண்டியவர்களே. நாங்கள் பொருளாதாரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதற்கு எங்கள் எதிரிகள் தான் காரணம். அவர்கள் முழுதாய் பொருளாதாரத்தை மறுத்ததால் நாங்கள் பொருளாதாரத்தை வலியுறுத்தினோம். பிற முக்கியமான துறைகள் சமூகத்தில் ஆற்றும் பங்கு பற்றி விளக்கி எழுத எங்களுக்கு இடமும் நேரமும் போதியளவு இல்லை.....'

மார்க்சிய படைப்புகளில் சில பிரச்சனைகள் விரிவாகவும், ஆழமாகவும் ஆராயப்பட்டு அவற்றிற்கு தீர்வுகள் காணப்பட்டுள்ளன. ஆனால் இன்னும் சில பிரச்சனைகள் இவ்வாறு விளக்கப்படவில்லை. எனவே மார்க்சிய ஆய்வு முறையை வழிநடத்தும் மார்க்சிய தர்க்கமுறையை, முறை மியலை, தத்துவத்தை சரியாகப் பற்றிப் பிடித்துக்கொண்டால் மட்டுமே, மார்க்சால் அப்போது போதியளவு விளக்கப்படாத பிரச்சனைகளில் சரியான புரிதலைப் பெறும்விதத்தில் இந்த முறைமியலை பயன் படுத்துவது சாத்தியப்படும்.

உறவு பற்றி ஆராயப்புகும் அல்துாசர் மார்க்ஸ் எமக்கு ஒரு சங்கிலியின் இரண்டு முனைகளை தந்து அவற்றிக்கிடையில் என்ன நடைபெறுகிறது என்று கண்டறியுமாறு பணித்துள்ளதாக குறிப்பிடுகிறார். 'பொருளாதார உற்பத்தி முறை எல்லாவற்றையும் இறுதியில் நிர்ணயிக்கும்' என்பது ஒருமுனை. மேற்கட்டுமானத்தின் சார்பளவிலான சுயாதீனமும், அவற்றின் குறிப்பான தாக்கம் நிகழ்த்தும் தன்மையும் மற்றோர் முனை. இந்த முனைகளுக்கிடையில் நடைபெறுவன பற்றிய அல்துாசரின் வாதங்களே அமைப்பியல்வாத மார்க்சியத்தின் மையச்சிந்தனைகளாக அமைகின்றன. அவற்றைவிரிவாக பரிசீலிப்போம்.

## மட்டங்கள் – கட்டமைப்புகள்
## (Levels - structures)

இப்படியாக ஏங்கெல்ஸ் வெளியிட்ட பொருளாதார வாதத்திற்கு எதிரான, பலமான கண்டனங்களை சுட்டிக்காட்டும் அல்துாசர், இது தொடர்பாக ஏங்கெல்சின் நிலைப்பாட்டை பின்வருமாறு தொகுத்தளிக்கிறார். அடித்தளம் போலவே மேற்கட்டுமானமும் நிர்ணய சக்தி படைத்தது. அடித்தளம் மேற்கட்டுமானத்தை தீர்மானிப்பது போலவே அரசியலும், மரபான சிந்தனைகளும் கூட மேற்கட்டுமானத்தை நிர்ணயிப்பதில் ஒரு பங்கு வகிக்கின்றன. மேற்கட்டுமானத்தால் வரலாறு தன்னை ஸ்தாபிக்கிறது. இப்படியாக அடித்தளமும், மேற்கட்டுமானமும் இடைவிட்டு நிற்பதாகவே ஏங்கெல்ஸ் கருதுவதாக அல்துாசர் சுட்டிக்காட்டுகிறார். அடித்தளம், மேற்கட்டுமானம் என்பவற்றிடையிலான உறவு பற்றி இன்னும் விரிவாக ஆராய வேண்டியிருப்பதை சுட்டிக்காட்டுகிறார்.

அடித்தளம் மேற்கட்டுமானம் என்பவற்றிக்கிடையிலான

சமூக உருவாக்கத்தை (Social Formation) அல்துாசர் நான்கு மட்டங்களாக பிரிக்கின்றார். பொருளாதர மட்டம், அரசியல் மட்டம், சித்தாந்த மட்டம், கோட்பாட்டு மட்டம் என்பவையே இவையாகும். (பிற்கால எழுத்துக்களில் அழகியல் மட்டம் என்பதையும் சேர்த்து ஐந்து மட்டங்களாக பிரிக்கிறார்) இந்த மட்டங்கள் என்பவை முறையே பொருளாதார செயற்பாடு, அரசியற் செயற்பாடு, சித்தாந்த செயற்பாடு, கோட்பாட்டுச் செயற்பாடு, (அழகியல் செயற்பாடு) ஆகியவை நடைபெறும் இடங்களேயாகும்.

பொருளாதாரச் செயற்பாட்டில் இயற்கையான அல்லது பகுதியளவில் பதப்படுத்தப்பட்ட பொருள்களை, இயந்திரங்கள், தொழில் நுட்பங்கள் குறிப்பிட்ட விதத்திலான மனித உழைப்பு போன்றவற்றைப் பயன்படுத்தி பயன்மதிப்புள்ள பொருட்கள் உற்பத்தி செயற்படுகின்றன. அரசியல் செயற்பாட்டில் குறிப்பிட்ட விதத்திலமைந்த சில



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சமூக உறவுகள், குறிப்பிட்ட சில வழிமுறைகளையும், மனித உழைப்பையும் பயன்படுத்தி புதிய சமூக உறவுகளாக மாற்றியமைக்கப்படுகின்றன. கோட்பாட்டுச் செயற்பாட்டில் கருத்தாக்கங்கள், பிரதிநிதித்துவப்படுத்தல்கள், ஊகித்துணர்தல்கள் போன்றவை சிந்தனையாற்றல், கோட்பாட்டு உற்பத்திக்கான சாதனங்கள், முறையியல் ஆகியவற்றைப் பயன்படுத்தி அறிவாக மாற்றப்படுகிறது. சித்தாந்த செயற்பாடானது சமூக உறவில் வாழும் மக்கள், உலகத்துடனான அவர்களது உறவில் தோன்றும் கண்ணோட்டங்கள் பிரதிநிதித்துவப்படுத்தல்களை மாற்றுகிறது.

இங்கு ஒவ்வொரு செயற்பாடும் ஏதோ சில மூலப்பொருள்களை, சில வழிமுறைகள், சாதனங்கள் உழைப்பு போன்றவற்றின் மூலம் வேறு பயனுள்ள பொருட்களாக மாற்றுகின்றன. இந்த வகையில் இவை ஒவ்வொன்றையும் உற்பத்திகள் என்றும் கூறமுடியும். இந்த வகையில் இந்த செயற்பாடுகள்–உற்பத்திகள் அனைத்தையுமே தோற்ற அளவில் ஒத்தவையே. இதனால் பொதுவான செயற்பாடு–உற்பத்தி பற்றி பேசுவதும் சாத்தியமே. அந்த செயற்பாடுகளில் முக்கியத்துவம் பெறுவது மூலப்பொருளோ, விளைபொருளோ அல்ல. மாற்றும் செயல் தான் முதன்மையானது. இந்த மாற்றும் நிர்ணயமான கணமே முதன்மை பெறுகிறது.

மேலே கூறப்பட்ட பலவகை செயற்பாடுகளும் தோற்ற அளவில் ஒத்தவையே ஆயினும், அவற்றின் குறிப்பான தன்மைகளில் ஒவ்வொரு செயற்பாடும் தனித்துவமானவையும் கூட, ஏனெனில் ஒவ்வொரு செயற்பாடும் தமக்கே உரிய குறிப்பான மூலப்பொருட்களை, குறிப்பான சாதனங்கள், குறிப்பான முறைமைகள், குறிப்பான விதத்திலமைந்த உழைப்பு போன்றவற்றைப் பயன்படுத்தி குறிப்பான விளைபொருட்களாக மாற்றுகின்றன. இன்னும் குறிப்பாக சொல்வதானால் வேறுபட்ட மட்டங்கள்–செயற்பாடுகள்–உற்பத்திகள் அவற்றின் முதன்மையான அம்சமாகிய மாற்றம் நிகழ்த்தும் செயலைப் பொறுத்தவரையில் மிகவும் வேறுபட்டனவாக உள்ளன. இந்த உற்பத்திகள் ஒவ்வொன்றும் தமக்கேயுரிய தனித்துவமான சாதனங்கள், தனித்துவமான முறைமைகள், தனித்துவமான விதத்திலமைந்த உழைப்புப் போன்றவற்றை கொண்ட தமக்கேயுரிய உற்பத்தியின் கட்டமைப்பைக் கொண்டுள்ளன. இதனால் இந்த வேறுபட்ட மட்டங்கள்–செயற்பாடுகள்–உற்பத்திகள் வேறுபட்ட கட்டமைப்புகளாக அமைகின்றன. வேறுபட்ட செயற்பாடுகள், வேறுபட்ட கூறுகளை, வேறுபட்ட விதங்களில் இணைத்துச் செயல்படுவதன் மூலம், தமக்கேயுரிய தனித்துவமான பண்புகளுடனும், தனித்துவமான இயக்கவிதிகளுடனும் தனித்தனியான கட்டமைப்புகளாக செயற்படுகின்றன.

இப்படியாக நாம் சமூக உருவாக்கத்தை பொருளாதார கட்டமைப்பு, அரசியல் கட்டமைப்பு, சித்தாந்த கட்டமைப்பு, கோட்பாட்டுக் கட்டமைப்பு, அழகியல் கட்டமைப்பு என பாகுபடுத்துவதன் முக்கிய தாற்பரியம் யாதெனில் இந்த கட்டமைப்புகள் ஒவ்வொன்றும் தனித்துவமான பண்புகளுடன், தமக்கேயுரிய விதிகளுடன், குறிப்பான வளர்ச்சி வீதத்தில் (Rhythm) தத்தமது தளங்களில் இயங்குபவை என்பதை வலியுறுத்துவதாகும். இந்த புரிதலின் அடிப்படையில் அணுகும் போது இயற்கை விஞ்ஞானத்தின் விதிகளை சமூகத்திற்கும், பொருளாதாரத்தின் விதிகளை அழகியலுக்கும் பொருத்துவதிலுள்ள அசட்டுத்தனம் சட்டெனப் புரிந்துவிடுகிறது. வெவ்வேறு செயற்பாடுகளின் வேறுபட்ட போக்குகளையும், அவற்றின் குறிப்பான பொறிமுறைகளையும், அவற்றின் வளர்ச்சி வீதங்களையும் புரிந்து கொள்வதற்கு வெவ்வேறு செயற்பாடுகளின் இந்த யதார்த்மான வேறுபாடுகளைக் கருத்திற்கெடுப்பது முன்நிபந்தனையாகிறது.

சமூக உருவாக்கத்திலுள்ள ஒவ்வொரு மட்டமும் தனக்குள் பல பிராந்திய கட்டமைப்புகளால் ஆனது. உதாரணமாக எமது சமூகத்தில் பொருளாதார மட்டத்தை எடுத்தால் அதில் முதலாளித்துவ உற்பத்திமுறை, நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறை, முதலாளித்துவத்திற்கு பிந்திய உற்பத்தி முறையின் கூறுகள், நிலப்பிரபுத்து வத்திற்கு முந்திய உற்பத்தி முறைகளின் கூறுகள் போன்ற பல பிராந்திய கட்டமைப்புகள் காணப்படலாம். இந்த பிராந்திய கட்டமைப்புகள் ஒவ்வொன்றும் தம்ம ளவில் கட்டமைப்புகள் என்ற வகையில் தனித்துவமான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாம் சமூக உருகாக்கத்தை பொருளாதார கட்டமைப்பு, அரசியல் கட்டமைப்பு, சித்தாந்த கட்டமைப்பு, கோட்பாட்டுக் கட்டமைப்பு, அழகியல் கட்டமைப்பு எனபாகு படுத்துவதன் முக்கயதாற்பரியம் யாதெனில் இந்த கட்டமைப்புகள் ஒவ்வொன்றும் தனித்துவமான பண்புகளுடன், தமக்கேயுரிய விதிகளுடன், குறிப்பான வளர்ச்சி வீதத்தில் (Rhythm) தத்தமது தளங்களில் இயங்குபவை என்பதை வலியுறுத்துவதாகும்.

பண்பும், விதிகளும் கொண்டவை. இதனால் முதலாளித்துவ உற்பத்தி முறையினதும் பொருளாதார இயக்க விதிகள் வேறுபட்டவையே. இப்படியாக ஒரு சமூக உருவாக்கத்தின் பொருளாதார மட்டத்தில் பல உற்பத்தி முறைகள் காணப்பட்டாலும் கூட, இவற்றுள் ஏதாவது ஒரு உற்பத்திமுறை மிகவும் பலம் வாய்ந்ததாகத் திகழ்ந்து ஏனைய உற்பத்தி முறைகளைவிட மேலோங்கி மேலாதிக்கத்துடன் விளங்கும். இந்த மேலாதிக்க உற்பத்திமுறையானது ஏனைய பொருளாதார உற்பத்தி முறைகளையெல்லாம் ஒன்றுபடுத்தி ஒரு பொதுவான பொருளாதார கட்டமைப்பு என்ற தோற்றத்தை உருவாக்குகிறது. குறிப்பிட்ட ஒரு சமூகமானது முதலாளித்துவ உற்பத்தி முறையைக் கொண்டது என்று கூறும்போது, அந்த சமூகமானது தனது பொருளாதாரத்தை 'தூய' முதலாளித்துவ முறையில் ஒழுங்கமைத்திருப்பதாக அர்த்தம் பெறாது. மாறாக அந்த சமூகத்தில் முதலாளித்துவ உற்பத்திமுறை மேலாதிக்கம் செலுத்துவதாகவே அர்த்தம் பெறும்.

பிராந்திய கட்டமைப்புகள் கூட தம்மளவில் பல்வேறு வளர்ச்சி நிலையிலுள்ள கூறுகளால் ஆனவையே. உதாரணமாக முதலாளித்துவ உற்பத்திமுறையை எடுத்துக் கொண்டால் அது சிறு பண்ட உற்பத்தி, நடுத்தர கைத்தொழில், பெருவீத உற்பத்தி, ஏகபோகம் போன்ற பலவளர்ச்சி நிலையில்காணப்படும்கறாராக சொல்வதானால் இந்த வேறுபட்ட வளர்ச்சி நிலைகளும் கூட தம்மளவில் கட்டமைப்புகளே. ஏனெனில் சிறுபண்ட உற்பத்தி, போட்டி முதலாளித்துவம், ஏகபோகம் ஆகியவற்றின் இயங்குவிதிகள் வித்தியாசமானவை. குறிப்பிட்ட ஒரு சமுதாயத்தில், குறிப்பிட்ட ஒரு கணத்தில்இந்த வேறுபட்ட பொருளாதார வளர்ச்சி நிலைகளில் ஏதாவது ஒன்று மேலோங்கியதாகத் திகழும் இப்படியாக மோலாதிக்கம் செலுத்தும் முதலாளித்துவத்தின் குறிப்பிட்ட நிலையானது அந்த சமூகத்திலுள்ள முதலாளித்துவ உற்பத்திமுறையின் குறிப்பான பண்புகளுக்கு காரணமாக அமையும்.

மேற்கூறியவற்றிலிருந்து ஒவ்வொருமட்டத்திலும் பல பிரந்திய கட்டமைப்புகளும், இந்த பிரந்திய கட்டமைப்புகளிலும் பல்வேறு வளர்ச்சி நிலைகளும் காணப்படும் மென்றும், இந்த மட்டங்களும், பிராந்திய கட்டமைப்புகளும், வளர்ச்சி நிலைகளும் கூட தம்மளவில் தனித்துவமான பண்புகளையுடைய தனியான கட்டமைப்புகளே என்கது தெளிவுபடுத்தப்படுகிறது. உதாரணமாக அழகியல் செயற்பாட்டை எடுத்தால்அது ஓவியம், சிற்பம், நடனம், இசை, கவிதை, சிறுகதை நாவல்நாடகம் சினிமா போன்ற பல்வேறு கூறுகளைக் கொண்டது. இந்த ஒவ்வொரு கூறும் தம்மளவில் தனியான கட்டமைப்புகளே. தமக்கென தனியான விதிகளை கொண்டவையே. நாடகத்திற்கும், சினிமாவிற்க்கும் வேறுபாடு உண்டு என்பதை நீண்ட காலத்திற்கு பின்புதான் தமிழ்சினிமா கண்டுகொண்டது. இப்படியாக இங்கு அழகியல் கூறுகள் ஒவ்வொன்றும் வேறுபாடுகளைக் கொண்டவை என்பது அழுத்தம் பெறவேண்டியதாகிறது. இந்த வேறுபட்ட கூறுகளில் ஏதாவது ஒன்று குறிப்பிட்ட ஒரு கணத்தில் அழகியல் மட்டத்தில் மேலாதிக்கம் பெற்றுத் திகழும் நிலையில் இருக்கலாம். இப்படியாக அமைப்பியல்வாத அணுகுமுறையில் சமூகத்தை அணுகும் போது வெவ்வேறு செயற்பாட்டுகளின் வித்தியாசங்களைக் கண்டு கொள்வதும், இந்த வித்தியாசங்களுக்குள்ளும் மேலாதிக்கம் பற்றிய கவனத்தை குவிப்பதும் முக்கியத்தும் பெறுகிறது. இது தொடர்பாகவிரிவான விளக்கங்களுக்கு பிற்பாடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வருவோம்.

மேலே கூறப்பட்டவற்றை தொகுக்கும்போது, சமூக உருவாக்கமானது மட்டங்களாக, பிராந்திய கட்டமைப்புகளாக, வளர்ச்சி நிலைகளாக கூறுபடுத்தப்படுகிறது. இந்த ஒவ்வொரு கூறும் தன்னளவில் தனித்துவமான பண்புகளுடன், தனியான விதிகளுடன், தமக்கேயுரிய தளத்தில் இயங்குபவை என்றவகையில் தனித்துவமான கட்டமைப்பகளே. நவீன சமூதாயத்தில் பொருளாதாரம், அரசியல், விஞ்ஞானம், கலை, பால்வாதம், சாதியம், தேசியம், மதம், நிறப்பாகுபாடு, .........போன்ற பல கட்டமைப்புகளை இனங்காணமுடியும். இவற்றை தனியான கட்டமைப்புகளாக இனங்காண்பது என்பது, இவை ஒவ்வொன்றினதும் தனித்துவமான பண்புகளை, இயங்குவிதிகளை கருத்திற்கெடுக்கப்படுவதை வலியுறுத்துவதாகும். ஒன்றின் விதியை மற்றொன்றிற்குள் திணிக்கும் எல்லாவிதமான யாந்திரீக முயற்சிகளையும் எதிர்ப்பதுமாகும்.

சமூக உருவாக்கத்தில் பல்வேறு அம்சங்களையும் தனித்தனியான கட்டமைப்புகளாக இனம்காண்பது என்பது அவை வரம்பற்ற சுயாதீனம் (Absolute Autonomy) உடையவை என்று அர்த்தப்பட மாட்டாது. அவை ஏற்கனவே ஒரு குறிப்பிட்ட சமூக உருவாக்கத்தின் கூறுகள் என்ற வகையில் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவையே. ஒன்றின் மீது ஒன்று தாக்கம் நிகழ்த்தவும் வல்லவை. உதாரணமாக பொருளாதார உற்பத்தி என்பது வெற்றிடத்தில் நடப்பதல்ல. அது சமூக உருவாக்கத்தில் ஏனைய மட்டங்களான அரசியல், சித்தாந்த, கோட்பாடு, அழகியல் மட்டங்களுடன் தொடர்புபட்டே செயற்படுகின்றது. ஏனைய மட்டங்களை பொருளாதாரம் பாதிப்பது போலவே, ஏனைய மட்டங்களாலும் பொருளாதாரம் பாதிக்கப்படவும் செய்கிறது. இப்படியாக ஒவ்வொரு கட்டமைப்பும் ஏனைய கடடமைப்புகளுடன் தொடர்புடையவை. பரஸ்பரம் தாக்கம் நிகழ்த்துபவை எனும்போது இந்த கட்டமைப்புகளின் சுயாதீனம் என்பது சார்பளவிலானது என்றாகிறது. இங்கு சார்பளவிலான சுயாதீனம் (Relative Autonomy) என்பது ஓரளவு சுயாதீனம் என்பதாக அல்லாமல், பொருளாதாரத்துடன் ஒப்பிடும் போது சுயாதீனமானது என்ற வகையிலேயே அர்த்தப்படுத்தப்பட வேண்டும்.

மேலே கூறப்பட்ட கட்டமைப்பகளின் தொடர்பு, பரஸ்பரம் நிகழ்த்தும் தாக்கம் என்பவற்றையும் விட இன்னும் ஆழமான கருத்தொன்றை அமைப்பியல் வாதம் கூறும் சார்பளவிலான சுயாதீனம் எனும் கருத்தாக்கம் கொண்டுள்ளது. அது என்னவென்றால், ஒவ்வொரு கட்டமைப்பும் ஏனைய கட்டமைப்புகளுடன் கொள்ளும் உறவிலேதான் அர்த்தம் பெறுமென்பதே அதுவாகும். இதனை சற்று விரிவாக நோக்குவோம்.

பொருளாதாரத்தின் உருட்டித் திரட்டப்பட்ட வடிவமே அரசியலென்றும், அரசியலை வேறுவழிகளால் தொடருவதே யுத்தமென்றும் மார்க்சியம் எமக்கு கற்பிக்கிறது. இப்படியாக பொருளாதாரம், அரசியல், யுத்தம், போன்றவை ஒன்றுக்கொன்று நெருக்கமான தொடர்புள்ளவை என்ற போதிலும் பொருளா தாரத்தின் விதிகளை யுத்தத்திற்கு பிரயோகிக்க முனைவது எவ்வளவு அபத்தமானது என்பது இப்போது எமக்குத்தெரியும். ஏனெனில் இவை ஒவ்வொன்றும் தனித்தனியான கட்டமைப்புகள் இதனால் யுத்தமானது பொருளாதாரத்திலிருந்து வேறுபட்ட, தனித்துவமான விதிகளைக் கொண்ட ஒன்று என்பதைப் புரிந்துகொண்டுள்ளோம். இப்போது இந்த யுத்தத்தின் விதிகள் பற்றி சற்று நெருங்கிப் பரிசீலிப்போம்.

யுத்தத்தைப் பொறுத்த வரையில் கெரில்லா யுத்தம், நகரும் யுத்தம், நிலையான யுத்தம், சுற்றிவளைத்து அடக்குவது, பின்வாங்குவது, வரையறுக்கப்பட்ட யுத்தம், முழு அளவிலான யுத்தம் போன்ற அதன் பல்வேறு வடிவங்களும் தத்தமக்கேயுரிய விதிகளைக் கொண்டவை. இந்த விதிகளில் ஒருவர் எவ்வளவுதான் புலமை பெற்றிருந்தாலும் கூட அந்த விதிகள் மட்டும் தம்மளவில் யதார்த்தத்தில் நிகழும் குறிப்பிட்ட ஒரு யுத்தத்தின் தன்மையை விளக்கிவிட மாட்டாது. ஸ்தூலமாக ஒரு யுத்தத்தை புரிந்து கொள்ள வேண்டுமானால் அந்த யுத்தமானது அதனுடன் தொடர்புடைய ஏனையு கட்டமைப்புகளான பொருளாதாரம், அரசியல்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தேசியம், மதம் ........ போன்ற கட்டமைப்புகளுடனும் தொடர்புபடுத்தப்படும்போது மட்டுமே குறிப்பிட்ட ஒரு யுத்தத்தைப் புரிந்து கொள்வது சாத்தியப்படுகிறது. இதிலிருந்து கட்டமைப்புகள் ஒவ்வொன்றும் தமக்கேயுரிய விதிகளைக் கொண்டிருந்த போதிலும், அவை ஏனைய கட்டமைப்புளுடன் கொள்ளும் உறவிலேயே அர்த்தம் பெறுகின்றன. என்பதைப் புரிந்து கொள்கிறோம்.12

இப்போது ஒரு கேள்வி எழுகிறது. சமூக உருவாக்கத்தை கட்டமைப்புகளின் இணைவாக புரிந்து கொள்வதாயின், இதில் 'பொருளாதாரமே இறுதியில் நிர்ணயிப்பது' என்ற மரபான மார்க்சிய நிலைப்பாட்டின் இடம் யாது? என்பதே அந்தக் கேள்வியாகும். இது பற்றி அல்துாசர் விளக்குகிறார். பொருளாதாரம் வந்து நிர்ணய ஆற்றலைப் பெறுவது பல கட்டங்களின் இறுதிக்கட்டமாகத்தான் என்கிறார் மார்க்ஸ். இறுதிக்கட்டத்தில்தான் அந்த நிர்ணய சக்தி தோன்றும். ஆனால் இயங்கியலில் அப்படிப்பட்ட ஒரு இறுதிக்கட்டம் வருவதில்லை என்கிறார் அல்துாசர்.

'பொருளாதாரத்தால் இறுதியில் நிர்ணயிக்கப்படுவது' என்பதை பொருளாதாரம் மட்டுமே ஒரே நிர்ணய காரணி என்றோ ஏனைய கட்டமைப்புகள் அதனைத் தொடர்ந்து வருவதுமான ஒரு கணம் எப்போதாவது வரும் என்றோ, அல்லது அப்படிப்பட்ட ஒரு தொடர்புள்ள வரிசையான (Linear) ஒழுங்குமுறை இருக்குமொன்றோ அல்லது ஒன்றிலிருந்து மற்றையது உருவாகி வருமொன்றோ கருதக்கூடாது. பொருளாதாரம் இறுதியில் நிர்ணயிக்குமென்பது, பொருளாதாரம் எப்போதும் மேலாதிக்க கட்டமைப்பாக இருக்கும் என்று அர்த்தப்படாது. சமூக உருவாக்குமானது பொருளாதாரத்துடன் கூடவே இன்னும் பல கட்டமைப்புகளால் ஆனது. இறுதி ஆய்வில் பொருளாதாரமானது நிர்ணயமானதாக இருந்தாலும் சமூக உருவாக்கத்தின்வேறு எந்தவொரு கட்டமை' பையும் இந்த நிர்ணய காரணியை – பொருளாதாரத்தை– மேல் நிர்ணயம் செய்து மேலாதிக்க கட்டமைப்பாக ஆகலாம். பொருளாதார காரணியே தனித்து மேலாதிக்கம் செலுத்தும் கணம் எழாமலும் போகலாம்.

இங்கு, 'பொருளாதாரம் இறுதியில் நிர்ணயிக்கிறது. ஆனால் எல்லாச் சந்தர்ப்பத்திலுமே மேலாதிக்கம் வகிப்பதில்லை' என்பதிலுள்ள முரண் உண்மைத் தோற்றத்தைக் களைவதற்கு, இறுதியில் நிர்ணயிப்பது என்பதை சரியாக புரிந்து கொள்ள வேண்டும். பொருளாதாரமானது ஏனைய கூறுகள் தன்னோடும், அக்கூறுகள் தமக்குள்ளும் எவ்வளவு துாரம் சார்ந்திருப்பது சுயாதீனமாக இருப்பது என்பதை நிர்ணயிக்கிறது. குறிப்பிட்ட ஒரு கணத்தில் பொருளாதாரமானது தன்னை மேலாதிக்க நிலைக்கோ அல்லது மேலாதிக்கமற்ற நிலைக்கோ நிர்ணயிக்கலாம். அது தன்னை மேலாதிக்கமற்ற நிலைக்கு நிர்ணயிக்கும்போது, ஏனைய கூறுகளில் எது மேலாதிக்க நிலையில் இருக்குமென்பதை நிர்ணயிக்கிறது. இந்தக் கூறானது நிர்ணய காரணியான பொருளாதாரத்தை மேல் நிர்ணயம் (Over Determinism) செய்து மேலாதிக்க கட்டமைப்பாக ஆகிறது.

குறிப்பிட்ட ஒரு சமூக உருவாக்கத்தில் அதன் ஆதிக்க கூறானது என்றென்றைக்குமாக வரையறுக்கப்பட்டிருப்பதில்லை. எந்த நிலையிலும் ஒரு கூறானது இன்னோர் கூறை ஆதிக்கநிலையிலிருந்து இடம் பெயர்த்து தான் அந்த மேலாதிக்க நிலையைப் பெறலாம். ஆனால் இவ்வாறு நிகழும்போது சமூக உருவாக்கம் என்ற முழுமையானது ஏதோ ஒரு மோலாதிக்க கட்டமைப்பைக் கொண்டது. என்றவகையில் மாறாததாகவே தோற்றமளிக்கும். சமூக உருவாக்கத்தின் எந்தக் கட்டமைப்பு மேலாதிக்கம் செலுத்துவது என்பதை பொருளாதாரமே நிர்ணயிப்பதால்தான் பொருளாதாரமானது இறுதியில் நிர்ணய காரணியாக இருக்கிறது எனப்படுகிறது. பொருளாதாரமே நேரடியாக மேலாதிக்கம் செலுத்தும் நிலை மிகவும் அரிதாகவே உருவாகும்.

பண்டைய ஏதென்சிலும், ரோமிலும் அரசியல் மேலாதிக்க நிலையில் இருந்தது. நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் மதம் மேலாதிக்க நிலையில் இருந்தது. அப்படியிருப்பினும் கூட இந்த வேறுபட்ட கட்டமைப்புக்கள் எவ்வாறு மேலாதிக்க அமைப்பாக ஆகின என்பதற்கான காரணங்களை[1]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பொருளாதாரத்திலேயே கண்டறியலாம். முதலாளித்துவ சமுதாயங்களில் முதலாளித்துவ உற்பத்தி முறையானது ஏனைய அரசியல், சித்தாந்த மட்டங்களிலிருந்து அதிகம் தனிமைப்படுத்தப்பட்டிருக்கிறது. பொதுவாக இந்த சமூகங்களில் பொருளாதாரமே மேலாதிக்க நிலையில் இருக்கிறது. ஆனால் இது இன்னோர் கட்டமைப்பால் மேல் நிர்ணயம் செய்யப்படுவதை மறுப்பதாகாது. இன்று பல்வேறு நாடுகளிலும் அரசியல், மதம், தேசியவாதம், நிறவெறி போன்ற கட்டமைப்புகள் பொருளாதாரத்தை மேல் நிர்ணயம் செய்து மேலாதிக்க அமைப்புகளாக திகழ்வதை பல மார்க்சிய ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். பொருளாதாரக் கட்டமைப்பையே என்றென்றைக்கும் மேலாதிக்கக் கட்டமைப்பாக இனம் காண்பதானது பொருளாதார வாதமாகும். யதார்த்த வரலாற்றில் பொருளாதாரம் இறுதியில் நிர்ணயிப்பது என்பது பொருளாதாரம், அரசியல், சித்தாந்தம், கோட்பாடு என்பவை மாறிமாறி முதன்மையான பாத்திரத்தை ஆற்றுவதன் மூலமே துல்லியமாக நடைமுறைப் படுத்தப்படுகிறது.

சமூக உருவாக்கத்தை பல்வேறு மட்டங்களால் ஆனது எனும்போது, இந்த மட்டங்கள் சமமானவை என்று பொருள்படமாட்டாது. ஒரே மூலத்தை சமாந்தரமாக வெளிப்படுத்துபவையும் அல்ல, ஒன்றிலிருந்து மற்றயது உருவாகி வருவதுமல்ல. பல்வேறு மட்டங்களிலும் சில பிரதான பாத்திரம் ஆற்றும். சில பிரதானமற்ற பாத்திரம் ஆற்றும். இங்கு 'மேலாதிக்கம்' எனும் கருத்தாக்கமானது இந்த கட்டமைப்புகளின் படிநிலை வரிசையைச் (Hierarchcal Order) சுட்டுகிறது. மேலாதிக்க கட்டமைப்பு என்பது அந்த கட்டமைப்புகளில் ஒன்றுமாறிஒன்று மேலாதிக்க நிலைக்கு வரலாம் என்பதைக் குறிப்பிடுகிறது. சமூக உருவாக்கத்தை பல்வேறு கட்டமைப்புகளாக கூறுபடுத்துவதுடன் நின்றுவிடாமல் இந்த கட்டமைப்புகளிடையே ஒரு படிநிலை வரிசையையும் வலியுறுத்துவதன் மூலமே மார்க்சிய அமைப்பியல் வாதமனது ஏனைய பன்முக வாதங்களிலிருந்து வேறுபடுகிறது.

சமூகத்தை புரட்சிகர நடவடிக்கைகள் மூலம் மாற்றியமைக்க முனையும் மார்க்சிய அரசியல் நடவடிக்கையைப் பொறுத்தவரையில் ஏதாவது ஒரு கட்டமைப்பை மேலாதிக்கமாக கொண்டிருக்கும் என்றவகையில் மாறாதிருக்கும் சமூக உருவாக்கம் பற்றிய அறிவு மாத்திரம் போதாது. இந்த அரசியலானது வெற்றிகரமாக அமைய வேண்டுமானால் மாற்றம் பற்றியும் அதனால் அடுத்தடுத்து உருவாகும் குறிப்பான நிலைமைகள் பற்றியும் மிகவும் துல்லியமான அறிவை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். பல்வேறு மட்டங்கள் இடையேயுள்ள மேலாதிக்க– கீழ்படிவு உறவுகளின் துல்லியமான தன்மை, இவை கொண்டுள்ள சிக்கலான முரண்பாடுகள், அவற்றின் சார்பளவிலான முக்கியத்துவமும், பரஸ்பர செல்வாக்கும் போன்ற இவை அனைத்தையும் அரசியல் நடவடிக்கை நடைபெறும் ஒரு குறிப்பிட்ட வரலாற்று இணைவை (Conjuncture) வரையறுக்கையில் சரியாக பற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டும்.

## முரண்பாடுகள்.

சமூக உருவாக்கமானது பல்வேறு கட்டமைப்புகளால் ஆனது. இந்த கட்டமைப்புகள் தமக்கேயுரிய இயங்குவிதிகளைக் கொண்டவை, எனக் கொள்ளப்பட்டால், இந்தக் கட்டமைப்புகளின் குறிப்பான இயங்குவிதிகளைக் கண்டறிவது என்பது முதன்மையான அக்கறைக் குரியதாகிறது. 'இயங்கியல் என்பது ஒவ்வொரு பொருளின் சராம்சத்திலுள்ள முரண்பாட்டைக் காண்பதுதான்' என்கிறார் லெனின் 'முரண்பாடு என்பது இயங்கியலின் உள்விதையாகும்' என்கிறார் லெனின். 'முரண்பாடு என்பது ஒரு குறிப்பிட்ட பண்புகளுடன் செயற்படுவது' என்கிறார் மாவோ. எனவே, பல்வேறு கட்டமைப்புகளதும் இயங்குவிதிகளைக் கண்டறியும் நோக்கில் முரண்பாடுகள் பற்றிய சிந்தனைகள் முதன்மை பெறுகின்றன.

மார்க்சும், ஹெகலும் முரண்பாடு எனும் சிந்தனையைக் கொண்டிருந்தார்கள் என்பது உண்மையே. எனினும் முரண்பாடு பற்றிய மார்க்சின் சிந்தனையானது ஹெகலின் சிந்தனையிலும் பார்க்க சிக்கலானது, வளமானது என அல்தூசர் குறிப்பிடுகிறார்.13 மார்க்சியத்திலிருந்து ஹெகலிய சாயலை என்றென்றைக்குமாக அறுத்தெறிவது எனும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நோக்கில் செயற்படும் அல்தூசர் மார்க்சையும், அவர் வழிவந்த லெனின் மாவோவையும் அடியொற்றிச் சென்று முரண்பாடுகள் பற்றிய சிந்தனைகளை இன்னும் செழுமைப்படுத்துகிறார்.

இரண்டு பொருட்களிடையேயுள்ள எளிமையான முரண்பாடு பற்றி ஹெகல் கூறுகிறார். மார்க்சியம் குறிப்பிடும் முரண்பாடு என்பது இரண்டு கூறுகளுக்கிடையிலுள்ள எளிமையான முரண்பாடு அல்ல. மாறாக சிக்கலான, பன்முக முரண்பாடுகளைப் பற்றி மார்க்சியம் குறிப்பிடுகிறது. ஒரு வளர்ச்சிப் போக்கிலுள்ள பலவிதமான முரண்பாடுகளைப் பற்றி மார்க்சியம் குறிப்பிடுகிறது. அவ்வாறே முரண்பாட்டிலுள்ள ஒவ்வொரு கூறும் இன்னும் பலதரப்பட்ட கூறுகளுடன், பல விதமான முரண்பாடுகளைக் கொண்டிருப்பதாகவும் குறிப்பிடுகிறது. இவ்வாறாக சிக்கலான முரண்பாடு என்பது மார்க்சியத்தை ஹெகலியத்திலிருந்து பிரிக்கும் முக்கியமான ஒரு வேறுபாடாகும்.

மார்க்சிய முரண்பாட்டின் அடுத்த அம்சம் எந்தவொரு முரண்பாட்டிலும் உள்ள இரண்டு கூறுகளும் சமமானவை அல்ல என்பது. இதில் முதன்மைக் கூறிற்கும், இரண்டாம் பட்சமான கூறிற்கும் இடையிலுள்ள வேறுபாடு முக்கியமானது. முரண்பட்ட கூறுகளின் இந்த சமமற்ற வளர்ச்சியானது அந்த முரண்பாட்டின் குறிப்பான தன்மையை தீர்மானிப்பதாக மார்க்சியம் சுட்டிக்காட்டுகிறது.

மார்க்சிய முரண்பாடு பற்றிய கருத்துக்களில் அடுத்த அம்சம், எந்த குறிப்பிட்டவொரு முரண்பாடும் கூட மிகவும் எளிமையானதாக, ஒரு படித்தானது அல்ல என்பதாகும். அதாவது எந்த ஒரு முரண்பாட்டினுள்ளும் பல சிறிய முரண்பாடுகள் காணப்படும். இவற்றுள் ஒன்று பலமானதாகத் திகழ்ந்து, ஏனைய முரண்பாடுகளின் மீது மேலாதிக்கம் செலுத்தி அவற்றை ஒரு முரண்பாட்டு இறுகலில் வைத்திருக்கும். இதனால் குறிப்பிட்ட அந்த முரண்பாடானது ஒரு அமைப்பாக தோற்றமளிக்கிறது.

முரண்பாடுகள் ஒன்றையொன்று இடம்பெயர்க்கக் கூடியவை. முதலாளித்துவ சமுதாயத்தில் நிலப்பிரபுத்துவம் தொடர்ந்தும் நிலவும் சந்தர்ப்பங்களில் முதலாளி–தொழிலாளி முரண்பாடானது நிலப்பிரபு–விவசாயி முரண்பாட்டால் இடமாற்றப்படுவதை இங்கு உதாரணமாக குறிப்பிடலாம். இரண்டு மூன்று அல்லது பலமுரண்பாடுகள் ஒன்றாகச் சேர்ந்து இறுகும் தன்மையுடையவை. பொதுவாகக் கூறினால் வெற்றிகரமான புரட்சி என்பது உற்பத்தி சக்தி மற்றும் உற்பத்தி உறவு ஆகியவற்றிற் கிடையிலான பொருளாதார முரண்பாட்டின்எளிமையான வெளிப்பாடு அல்ல. இதற்கு பலதரப்பட்ட முரண்பாடுகளும் ஒன்றுள் மற்றொன்று ஊடுருவி, இறுகுவது தேவைப்படுகிறது.

ஒரு வளர்ச்சிப் போக்கிலுள்ள பல விதமான முரண் பாடுகளைப் பற்றி மார்க்சியம் குறிப் பிடுகிறது. அவ் வாறே முரண் பாட்டிலுள்ள ஒவ் வொரு கூறும் இன்னும் பல தரப்பட்ட கூறு களுடன், பல விதமானமுரண் பாடுகளைக் கொண்டிருப்பதாகவும் குறிப்பிடுகிறது. இவ்வாறாக சிக்கலான முரண் பாடு என்பது மார்க் சியத்தை ஹெகலியத் திலிருந்து பிரிக்கும் முக்கியமான ஒரு வேறுபாடாகும்.

ஒரு வளர்ச்சிப் போக்கில் உருவாகும் பலதரப்பட்ட முரண்பாடுகளும் ஒரே வளர்ச்சியுடையவை அல்ல. இவற்றுள் ஒன்று முதன்மையானதாகக் காணப்படும் என்கிறார் மாவோ. இந்த முரண்பாடானது ஏனைய முரண்பாடுகளின் இடமாற்றத்தாலும், பல முரண்பாடுகள் இறுகிச் சேர்வதாலும் உருவாவதாகும்.14 இந்த முதன்மையான முரண்பாடானது ஏனைய முரண்பாடுகளை மேல் நிர்ணயம் செய்யும் ஆற்றலுடையது என் பதால், இந்த முதன் மையான முரண்பாடானது மேலாதிக்க முரண்பாடு எனப்படுகிறது. மேலாதிக்க முரண்பாடானது மேலாதிக்க கட்டமைப்பைச் சுட்டிக்காட்டும். மேலாதிக்க முரண்பாடானது ஏனைய முரண்பாடுகளின் மேல்பாதிப்பை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஏற்படுத்தி அவற்றைப் புரட்சிக்கு இட்டுச் செல்கிறது. பல முரண்பாடுகளில் இணைவு என்பது ஒரு புரட்சிக்கு அவசியமானது. பல முரண்பாடுகளும் மையங்கொள்ளும் இடமே சங்கிலியின் பலவீனமான கண்ணியாகிறது. சமூகத்திலுள்ள பலவிதமான முரண்பாடுகளும் இணைந்து மேலாதிக்க முரண்பாட்டினுடாக வெளிப்படுத்தப்படுகையில் புரட்சி வெடிக்கிறது. போல்ஷேவிக் புரட்சி என்பது முதலாளி–தொழிலாளியின் முரண்பாடு எனும் எளிமையான முரண்பாட்டின் மூலம் நடந்து முடிந்துவிடவில்லை. இந்த முரண்பாட்டுடன் கூடவே ஏகாபத்தியம், நிலப்பிரபுத்துவம் ஆகியவற்றின் முரண்பாடுகளும் இணைந்தே புரட்சியைக் கொண்டுவந்தன.

மேலுள்ள விளக்கத்தின்படி சமூக உருவாக்கமானது பொருளாதார முரண்பாடு அல்லது வர்க்க முரண்பாடு என்ற எளிமையான ஒரு முரண்பாட்டை மாத்திரமே கொண்டிருப்பதல்ல. இந்த பொருளாதார முரண்பாட்டிற்கும் மேலாக இன்னும் பலவிதமான முரண்பாடுகளும் காணப்படும் என்பதும் இந்த பலதரப்பட்ட முரண்பாடுகளுக்கிடையிலான உறவுகளும் மேலாதிக்க முரண்பாடும் சிறப்பான கவனத்தை வேண்டி நிற்பனவாகும் என்பது தெளிவாகிறது.

## முழுமை

சமூக உருவாக்கம் என்ற முழுமை பற்றிய சிந்தனையிலும் மார்க்சியமானது ஹெகலியத்திலிருந்து தீவிரமாக வேறுபடுகிறது. சமூகத்தின் பல்வேறு நிகழ்வுகளான சட்டம், கலை, அரசியல்...........போன்ற அனைத்துமே ஆன்மாவின் புறவயமாக்கப்பட்ட வெளிப்பாடுகளே எனக்கருதும் ஹெகலியம் இந்த தோற்றப்பாடுகள் அதன் சாரமான ஆன்மாவாக குறுக்கப்படக் கூடியவை என்கிறது. இவ்வாறு குறுக்கப்படும் போது தோற்றப்பாட்டிலுள்ள சிக்கலான தன்மை மறைந்து எளிமையான சாரமான ஆன்மா பெறப்படுகிறது என்கிறது. ஹெகலின் முழுமை பற்றிய சிந்தனையானது சாராம்சவாதமாகும்.

சமூகத்திலுள்ள பல்வேறு நிகழ்வுகளையும் தமக்கேயுரிய பண்புகளையுடைய கட்டமைப்புகளாக இனம்காணும் மார்க்சியமானது, இக்கட்டமைப்புகள் சுயாதீனமாவையாகவும், ஒன்று மற்றொன்றாக குறுக்கப்பட முடியாததாகவும் காண்கிறது. இச்செயற்பாடுகள் ஒன்றிலிருந்து மற்றொன்று உருவானதோ அல்லது இவை அனைத்தும் ஒரே மூலத்திலிருந்து தோன்றியவையோ அல்ல என்பதால் இவை மையமற்றவையாகும். அவற்றின் எளிமையான சாரமாக குறுக்கப்பட பிழியப்பட முடியாததாகும் என்கிறது. எனவே முழுமைபற்றிய மார்க்சிய கோட்பாடு சிக்கலானதாகும். சமூக உருவாக்கத்தின் சாரமாக ஹெகல், ஆன்மாவைக் காண்கிறார். இந்த ஆன்மாவிற்கு பதிலாக பொருளாதாரம் அல்லது மக்கள் அல்லது வேறு ஏதாவது ஒன்றை சாரமாக வைப்பதானது மார்க்சியமாகாது. சமூக முழுமையை அதன் சாரமாக பிழிந்தெடுக்கும் எந்த முயற்சியும் சாராம்சவாதமேயாகும். மையமகற்றல் என்பது அமைப்பியல்வாதத்தில் முக்கியமானது.

சமூக உருவாக்கம் என்ற முழுமையானது சமூகத்திலுள்ள பல்வேறு கட்டமைப்புக்களின் இணைவால் உருவாவதாகும். இந்த இணைவின்போது பலதரப்பட்ட கட்டமைப்புகளும் தமது பண்புகளை இழந்துவிடுவதில்லை. முழுமையின் கூறுகளாக இருக்கும் போதே இந்த கட்டமைப்புக்கள் தமது சொந்த தளத்திலும், தமக்குரிய இயக்க விதிகளுடனும் இயங்கிக் கொண்டும் இருக்கின்றன. ஆதலால் இந்த இணைவு என்பது கட்டமைப்பு குலையாத இணைவாகும். இவ்வாறு பல்வேறு கட்டமைப்புகள் இணைவதன் மூலம் உருவாகும் முழுமை என்ற சமூக உருவாக்கமானது தனக்கேயுரிய பண்புகளை உடையது என்பதால் அதுவுமே ஒருகட்டமைப்பாகிறது. இந்தவகையில் சமூக முழுமையானது ஒரு பேரமைப்பாகும்.

பேரமைப்பானது பிராந்திய கட்டமைப்புகளால் உருவாவது போலவே, பேரமைப்பு பிராந்திய கட்டமைப்புகளின் மீது தாக்கம் நிகழ்த்தவும் கூடியது. எனவே சமூக முழுமை என்பது, பரஸ்பரம் தமக்குள் தாக்கம் நிகழ்த்தக் கூடியதும், படிநிலை அமைப்பிலானதுமான பல்வேறு கட்டமைப்புகளால் உருவாவதாகும். இக்கட்டமைப்புகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சமூக முழுமை என்ற பேரமைப்பை நிர்ணயிப்பது போலவே, இந்த பேரமைப்பால் நிர்ணமிக்கப்படவும் செய்கின்றன. இப்படியாக சமூக உருவாக்கமானது பல்வேறு கட்டமைப்புகளின் அமைப்பியல் இணைவாக, ஏனைய கட்டமைப்புகளின் மீதும் சமூக முழுமையின் மீதும் தாக்கம் நிகழ்த்தும் அதேவேளை, இவற்றால் தாமும் பாதிப்புறும் கட்டமைப்புகளின் அமைப்பியல் இணைவாக புரிந்து கொள்ளப்பட்டால் மட்டுமே சமூகத்தில் எழும் பல்வேறு சிக்கலான பிரச்சனைகளையும் துல்லியமாக விளக்குவது சாத்தியப்படும்.

## வரலாறு

ஹெகலின் எளிமையான சமூக முழுமையை நிராகரிப்பது போலவே, ஹெகலின் எளிமையான வரலாறு பற்றிய கருத்தையும் மார்க்சியம் நிராகரிக்கிறது. ஹெகலைப் பொறுத்த வரையில் வரலாறு என்பது சிந்தனை தனது உள்ளாற்றல்களை அடுத்தடுத்த கணங்களில் வெளிப்படுத்தி வரும் ஒரு வரிசை முறையிலமைந்த (Linear) காலத்தின் தொடர்ச்சியேயாகும். இதனால் வரலாறானது அதன் அனைத்து அம்சங்களிலும், நிலைகளிலும் அதன் வளமான தன்மையிலும், சிக்கலிலும் விரிந்து வரும் ஒரு சிந்தனையின் தொடர்ச்சி மட்டுமே. சமூக நிகழ்வுகளின் வரலாறானது ஆன்மாவின் வரலாறாகக் குறுக்கப்படக் கூடியது. இந்த குறுக்கல் காரணமாக, வரலாறு என்பதும் அனைத்தும் தழுவிய எளிமையான வரலாறு என்றாகிறது.

அமைப்பியல் வாதத்தைப் பொறுத்த வரையில் சமூக உருவாக்கத்தின் வெவ்வேறு மட்டங்கள் எவ்வாறு அவற்றின் சாரமாக குறுக்கப்பட முடியாதவையோ, அவ்வாறே இந்த மட்டங்களின் வரலாறும் சாரத்தின் தொடர்ச்சியான அனைத்தும் தழுவிய வரலாறாக குறுக்கப்பட முடியாதவையாகும். சமூக உருவாக்கத்தின் சார்பளவில் சுயாதீனமான ஒவ்வொரு மட்டமும் தமக்கேயுரிய சார்பளவில் சுயாதீனமான வரலாறுகளைக் கொண்டுள்ளன. ஒவ்வொரு மட்டத்தின் வரலாறும் அந்தந்த மட்டங்களின் வளர்ச்சி விதம் (Rhythm), அவற்றின் தொடர்ச்சி, அவற்றில் நடைபெறும் புரட்சிகளால் உருவாக்கப்படும் உடைவுகள், இடமாற்றங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய இடைநிறுத்தங்கள் போன்றவற்றால் குறிக்கப்படுகின்றன. அதாவது மட்டங்களின் வரலாறுகளில் தொடர்ச்சி, தொடர்ச்சியின்மை போன்றவை காணப்படுகின்றன.

இதன்படி பொருளாதார அடித்தளத்திற்கான ஒரு தனியான வரலாறும், அரசியல் மேற்கட்டுமானத்திற்கென ஒரு தனியான வரலாறும், சித்தாந்தத்திற்கென்று ஒரு தனியான வரலாறும், கோட்பாட்டிற்கு என்று ஒரு தனியான வரலாறும் இருக்கின்றன. இப்படியாக ஒவ்வொரு மட்டங்களின் வரலாறுகளும் தமக்கேயுரித்தான வளர்ச்சி வீதங்கள், தொடர்ச்சி, தொடர்ச்சியின்மை போன்றவற்றால் குறிக்கப்படுவதால் வெவ்வேறு மட்டங்களின் வரலாறுகள் ஒன்று மற்றொன்றாக குறுக்கப்பட முடியாதவை. குறிப்பிட்ட கணத்தில் குறிப்பிட்ட ஒரு சமூக உருவாக்கத்திலுள்ள பலதரப்பட்ட மட்டங்களின் வரலாறுகளுக்கிடையில் தொடர்பு இருக்கலாம், தொடர்பு இல்லாமலும் இருக்கலாம். எல்லா மட்டங்களுக்கும் பொதுவான, எல்லா வரலாறுகளையும் அளக்கக் கூடிய வரிசைக்கிரமமான காலத்தின் தொடர்ச்சி என்ற ஒன்று கிடையாது. இங்கு எளிமையான காலம், எளிமையான வரலாறு என்பவை, வெவ்வேறு மட்டங்களின் வேறுபட்ட காலங்களை உள்ளடக்கிய சிக்கலான வரலாற்றால் இடம் பெயர்க்கப்பட வேண்டும்.

மேற்கூறிய கருத்திற்கு ஆதாரமாக பொருளாதார வளர்ச்சி குறைந்த சமூகங்களில் உயர்வான கலை வளர்ந்திருந் ததையும், பொருளாதார உறவுகளுடன் பொருந்தாமல் சட்ட உறவுகள் வளர்வதையும் மார்க்ஸ் சுட்டிக்காட்டியிருப்பதையும் அல்துாசர் முன்வைக்கிறார். "உலகில் எதுவுமே சமமாக வளர்வதில்லை" என்ற மாவோவின் கருத்தும் இதனையே வலியுறுத்துகிறது.

இப்படியாக வெவ்வேறு மட்டங்களது காலமும், வரலாறும் குறுக்கப்பட முடியாதவை என்பதை, இந்த வேறுபட்ட மட்டங்களது காலமும் வரலாறும் முற்றிலும் சுயாதீனமானவை (Absolute Autonomy) என அர்த்தப்படுத்தி விடக்கூடாது. ஏனெனில் இவை சமூக உருவாக்கத்தின் வெவ்வேறு மட்டங்களது காலமும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வரலாறும் மட்டுமே. இந்த வகையில் இந்த மட்டங்களின் சார்பளவிலான சுயாதீனத்தை விட (Relative Autonomy) இவற்றின் காலமும் வரலாறும் அதிகம் சுயாதீனமானவை அல்ல. இந்த மட்டங்கள் பொருளா தாத்தைச் சார்பளவில் சார்ந்திருப்பது போலவே இந்த மட்டங்களின் வரலாறும் சார்பளவிலேயே சுயாதீனமாவை. இவை இறுதியில் நிர்ணயிக்கும் காரணியான பொருளாதாரத்தின் வரலாற்றுடன் ஒத்திசைந்தும் ஈடுசெய்துமே செல்பவை.

வரலாறு பற்றிய அல்துாசரின் இந்த விளக்கமானது சமூக உருவாக்கம் பற்றிய புரிதலில் இன்னுமோர் உயர்ந்த கட்டத்திற்கு உந்திச் செல்கிறது. சமூக உருவாக்கம் என்பது பொருளாதாரத்தின் வெளிப்பாடு என்ற மிகையாக எளிமைப்படுத்தப்பட்ட பொருளாதாரவாத விளக்கத்திற்கும் பதிலாக சமூக உருவாக்கத்தை தனியான பண்புகளையுடைய பல்வேறு கட்டமைப்புகளின் பரஸ்பரம் தாக்கம் நிகழ்த்தும் இணைவாகக் காண்பதையும், இந்த கட்டமைப்புகளின் வேறுபட்ட வரலாற்றையும் இது வலியுறுத்துகிறது. புரட்சிகர அரசியற் செயற்பாடு முன்னெடுக்கப்படும் சமூகத்தில் எழும் பொருளாதாரம், சித்தாந்தம், அரசியல், கோட்பாடு, அழகியல் போன்ற பல்வேறு மட்டங்களும் பலவிதத்திலும் செயற்படும் சிக்கலான செயற்பாடுகளை புரிந்து கொள்வதற்கு இந்த விதமான விளக்கம் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

## மதிப்பீடு

மார்க்சியமானது பொருளாதாரவாதமாக குறுக்கப்படுவதும், அதன் எதிர் விளைவாக பொருளாதாரவாதத்தை நிராகரிப்பவர்கள் சித்தாந்த ரீதியிலான குறுக்கல் வாதங்களுக்கு பலியாகிப் போவதுமான ஒரு சூழ்நிலையிலேயே அல்துாசரின் எழுத்துக்கள் பிறந்தன. இதன் மூலம் அல்துாசர் மார்க்சியத்தை எல்லாவிதமான குறுக்கல் வாதங்களிலிருந்தும் என்றென்றைக்கும் பிரிக்கவல்ல கருத்தாக்கங்களை உருவாக்கி மார்க்சியத்தை செழுமைப்படுத்தினார். இந்தவிதமான குறுக்கல் வாதங்கள் புரட்சிகர சோசலிச இயக்கம் முகம் கொடுத்த பல பிரச்சனைகளை விளக்க முடியாதிருந்தது. பாசிசம், தேசியவாதம், இனவாதம், (Racism) சமனற்றது, இணைந்ததுமான வளர்ச்சி (Uneven and Combined development), சோவியத் அரசு அதிகாரமயப்படல், மூன்றாம் அகிலத்தின்தோல்வி..... போன்றவை இப்படிப்பட்ட பிரச்சனைகளில் சிலவாகும்.

மேற்கூறப்பட்ட பிரச்சனைகள் மிகவும் சிக்கலானபிரச்சனைகளாகும். இவற்றை ஒரு மூலத்தைக் கொண்டு - பொருளாதார வளர்ச்சி அல்லது வேறு ஏதாவது ஒரு காரணியைக் கொண்டு விளக்க முடியாதிருந்தது. அல்துாசர் இந்த பிரச்சனைகளை தெளிவாக முன்வைத்து இவை பொருளாதாரம், அரசியல், சித்தாந்தம், கோட்பாடு போன்ற காரணம்-விளைவுகளின் சிக்கலான சேர்க்கையின் பின்னணியில் சிந்திக்கப்பட முனைந்தால் மட்டுமே புரிந்துகொள்ளப்பட முடியும் எனக்காட்டினார்.

மார்க்சியத்தின் வரலாற்றில் அல்துாசர் தான் முதன் முதலாக, சமூகத்தின் சிக்கலான பிரச்சனைகளை, பல்வேறு காரணிகளின் சிக்கலான உறவில் விளக்க முயன்றார் என்று யாரும் கூறமுடியாது. மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின் போன்றோரும் கூட ஏற்கனவே பல பிரச்சனைகளை, இப்படியான பல காரணிகளின் சிக்கலான உறவுகளை வெளிப்படுத்தி விளக்கியுள்ளனர் என்பது உண்மையே. ஆனால் இந்த உண்மையானது அல்துாசரின் பங்களிப்பை மறுத்துவிடுவதாகாது. ஏனெனில், மார்க்சியமானது எல்லாவிதமான குறுக்கல் வாதங்களிலிருந்தும் தன்னை முற்றாக விடுவித்துக் கொள்ள வேண்டுமானால் முன்னோடிப் புரட்சியாளர்கள் ஸ்துாலமான நிலைமைகளை ஸ்துாலமாக ஆய்வு செய்கையில் இந்த குறுக்கல்வாத தவறுகளை தம்மளவில் தவிர்த்தால் மட்டும் போதாது. அவர்கள் தமது செயலுக்கு-அதாவது இந்த குறுக்கல்வாத தவறுகளை தவிர்க்கும் ஆய்வு முறைக்கு-ஆதாரமாக விளங்கும் கோட்பாட்டையும் முன்வைப்பது அவசியமானது. செவ்வியல் மார்க்சியமானது ஒரு பொழுதுமே எமக்கு இந்தவிதமான கோட்பாட்டை வெளிப்படையாகவும், கறாராகவும் தராதது மட்டுமன்றி இப்படிப்பட்ட ஒரு கோட்பாட்டை வெளிப்ப



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



டையாக உருவாக்கி முன்வைக்காததன் விளைவாக, செவ்வியல் மார்க்சியத்தின் சில படைப்புகளே தம்மளவில் சமூக முழுமை பற்றிய எளிமையான கருத்தாக்கத்திற்குள் இடறி விழுந்துள்ளதாகவும் இன்றைய மார்க்சிய ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

அல்துாசர், பல்வேறு செயற்பாடுகளுக்கிடையிலான வேறுபாடுகள், அச்செயற்பாடுகளின் குறிப்பான தன்மைகள், அச்செயற்பாடுகளுக்கிடையிலான உறவுகள் பற்றிய பிரச்சனைகளை தெளிவாக முன்வைக்கிறார். இவரது வாதங்கள் மார்க்சியம் இன்று முகம் கொடுக்கும் அனைத்துப் பிரச்சனைகளுக்குமான விடைகளை தெளிவாக தந்துவிடாவிட்டாலும் கூட, மார்க்சிய கோட்பாட்டு வளர்ச்சிக்கு மிகவும் அவசியமான கேள்விகளை தெளிவாக எவ்வித பசப்புமின்றி முன்வைத்தமை அவரது முக்கியத்துவத்தை வலியுறுத்தி நிற்கிறது.

அல்துாசரின் எழுத்துக்கள் மேற்கத்திய மாணவர்கள் மீது பலத்த தாக்கத்தை ஏற்படுத்தியது.15 பலதரப்பட்ட மார்க்சிய வாதிகளிடையேயும் பலமான விவாதங்களைத் தோற்றுவித்தது. 'இளம் மார்க்ஸ்'–'முதிய மார்க்ஸ்' பற்றிய சர்ச்சைகள் அப்படிப்பட்டதொன்றாகும். அடுத்த விடயம் கோட்பாட்டு வாதமாகும். மார்க்சியத்தை பாட்டாளி வர்க்க சித்தாந்தமாக குறிப்பிடும் போது இது மார்க்சியம் ஒரு கோட்பாடு என்ற வகையில் அதன் தனித்துவமான பாத்திரம் மறுக்கப்பட்டு தன்னியல்பு வாதத்திற்கு வழிவிடுவதாக குறிப்பிடும் அல்துாசர் கோட்பாட்டின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் கோட்பாட்டுச் செயற்பாட்டைத் தனியான மட்டமாக குறிப்பிடுகிறார். இந்த வலியுறுத்தலை அளவுக்கதிகமாக செய்வதால் கோட்பாடானது முற்றிலும் சுயாதீனமான செயற்பாடு எனக் கருதும் அளவிற்கு இட்டுச் சென்றுள்ளதாக விமர்சிக்கப்படுகிறார். அடுத்த பிரச்சனை, 'தன்னிலை' (Subject) இன் பாத்திரம் பற்றியதாகும். 'மனிதர்களே வரலாற்றைப் படைப்பதாக' வரலாற்றுவாதம் கூறுகிறது. இதனை மறுக்கும் அல்துாசர் கட்டமைப்புகளின் பாத்திரத்தை வலியுறுத்தி, 'தன்னிலை' என்பது கட்டமைப்பு ஒதுக்கும் இடத்தில், கட்டமைப்பால் வழங்கப்படும் பாத்திரத்தை மட்டுமே ஆற்றுவதாகவும் உற்பத்திச் சாதனம், முறையியல் போன்றவற்றுடன் சேர்ந்து 'தன்னிலை' என்பதையும் ஒரு துணையான பாத்திரத்தை (Supportive Role) ஆற்றுவதாக குறிப்பிடுகிறார். இவ்வாறு 'தன்னிலை' யின்16 பாத்திரம் மறுக்கப்படுவதானது இன்று வரை பலத்த வாதப்பிர திவாதங்களுக்கு உரியதாகவே இருந்து வருகிறது.

தனது ஆரம்ப கருத்துக்கள் தொடர்பாக எழுந்த விவாத ங்களின் பலனாக அல்துாசர் பிற்காலத்தில் தனது முக்கியமான கருத்துக்கள் சிலவற்றை இன்னும் தெளிவுபடுத்தியுள்ளார். சிலவற்றை மாற்றியமைத்துள்ளார். அவரது வழிவந்தவர்கள் அல்துாசரின் வாதங்கள் சிலவற்றை இன்னும் வளர்த்தெடுத்துள்ளனர். அமைப பியல்வாத அணுகுமுறையை முற்றாகவே நிராகரிப்பவர்கள் கூட அல்துாசர் குறிப்பிடும் சோசலிச இயக்கம் முகம் கொடுக்கும் பிரச்சனைகள் என்பவற்றை ஒத்துக்கொள்ளவே செய்கின்றனர். இந்த வகையில் அல்துாசர் முன்வைத்த பன்முக முரண்பாடுகள். சார்பளவிலான சுயாதீனம், மேல்நிர்ணயம், மேலாதிக்க அமைப்பு, சித்தாந்தம் பற்றிய கருத்துக்கள் மார்க்சியத்தில் அவரது பங்களிப்பை உறுதி செய்பவையாகும்.

கோட்பாட்டு ரீதியிலான வறுமை மிகவும் மோசமாக நிலவும் தென்னாசியப் பிராந்தியத்தில் பொருளாதாரவாதமே மார்க்சியமாக அறியப்பட்டுள்ளது. என்பதுதான் இன்றைய யதார்த்த நிலைமையாகும். பொருளாதாரம் என்ற ஒரே காரணியால், வர்க்கம் என்ற ஒரே கருத்தாக்கத்தால் கலை இலக்கியம் முதல் பால்வாதம், தேசியவாதம் போன்ற பல்வேறு பிரச்சனைகளையும் விளக்க முனையும் இந்த பொருளாதாரவாதமானது நாம் இன்று முகம் கொடுக்கும் தீவிரமான பிரச்சனைகளை விளங்கிக் கொள்ள தடையாக இருக்கிறது. இதனால் புரட்சிகர சக்திகள் தீவிரமான சமூக நிகழ்வுகளில் தமது முத்திரையைப் பதிக்க முடியாமற் போவதோடு, அத்தகைய போராட்டத்தில் தீவிரமாக செயற்படும் பல்வேறு சக்திகளுக்கும் முத்திரை குத்தும் வேலையைத்தான செய்துகொண்டிருக்க முடிகிறது. இப்படிப்பட்ட சிக்கலான நிலைமைகளில் தாம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செயற்படும் சமூக யதார்த்தத்தை சரியாகக் புரிந்துகொள்ளவும், அதில் நடைபெறும் போராட்டங்களில் தலைமை சக்திகளாக தம்மை இருத்திக்கொள்ளவும் அமைப்பியல்வாத அணுகுமுறை காத்திரமான பங்காற்ற க்கூடியது என்பதால் அமைப்பியல் வாதத்தின் மீது புரட்சியாளர்கள் தமது அக்கறையை செலுத்துவது இயல்பானதே.

## அமைப்பியல் ஆய்வு என்பது யாது?

இதுவரையில் பொதுவான அமைப்பியல்வாத ஆய்வு முறை பற்றி சில முக்கியமான கருத்துக்களை பகிர்ந்து கொண்டோம். இப்போது ஒரு புரட்சியாளர் தான் செயற்படவேண்டிய ஒரு சிக்கலான சமூகச் சூழலில் இந்த ஆய்வு முறையை எவ்வாறு பிரயோகிப்பது என்று பார்ப்போம்.

1) சமூக உருவாக்கம் எதனையும் ஒரு புரட்சியாளர் சிக்கலானதாகவே புரிந்து கொள்ள வேண்டும். அந்த சமூகம் பற்றி திட்ட வட்டமான கருத்துக்கள் எதனையும் உருவாக்குவதற்கு அந்த சமூகத்தை அதனது ஆக்கக் கூறுகளான கட்டமைப்புகளாக உடைப்பது-கட்டுடைப்பது அல்லது கட்டவிழ்ப்பது-முதல் நிபந்தனையாகிறது.

2) இந்த உடைப்பின் மூலம் பெறப்படும் கட்டமைப்புகள் ஒவ்வொன்றும் சுயாதீனமானவை என்ற வகையில் தனித்துவமான பண்புகளைக் கொண்டவை. தனித்துவமான இயங்கு விதிகளைக் கொண்டவை. தமக்கென தனியான வளர்ச்சி நிலையையும், வரலாற்றையும் கொண்டவை என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும். இந்த வகையில் அந்த குறிப்பிட்ட கட்டமைப்புக்குரிய சிறப்பான பண்புகள், விதிகள் என்பவற்றை பொதுவாக உலக வரலாற்றிலிருந்து கற்றுக்கொள்வதுடன், அந்த குறிப்பிட்ட கணத்திலுள்ள பல்வேறு கட்டமைப்புக்களின் வளர்ச்சி நிலையையும், வரலாற்றுக் கட்டங்களையும் துல்லியமாக குறித்துக்கொள்ளவேண்டும்.

3) சமூக உருவாக்கத்தின் பல்வேறு கட்டமைப்புகளும் சார்பளவிலேயே சுயாதீனமுள்ளவை என்பதும், இன்னும் குறிப்பாக இந்த கட்டமைப்புகள் ஏனைய கட்டமைப்புக்களுடன் கொள்ளும் உறவிலேயேதான் அர்த்தம் பெறும் என்பதும் சரியான முறையில் கருத்திற்கெடுக்கப்பட்டு பல்வேறு கட்டமைப்புகளும் தமக்குள்ளும், மொத்த சமூக உருவாக்கத்திலும் கொண்டுள்ள உறவும், அவை பரஸ்பரம் நிகழ்த்தும் தாக்கங்களும் சரியான விதத்தில் குறித்துக்கொள்ள வேண்டும். இறுதியில் நிர்ணயிக்கும் காரணியான பொருளாதாரத்துடனும், சமூகத்தின் வர்க்க அமைப்புடன் இவைகொண்டுள்ள உறவும் துல்லியமாக இனங்காணப்பட வேண்டும்.

4) சமூக உருவாக்கத்தின் பல்வேறுகட்டமைப்புக்களும் சமமானவை அல்ல இவை ஒரு அதிகார படிநிலை வரிசை அமைப்பைக் கொண்டவை. என்பதையும் கருத்திற் கொண்டு இந்த கட்டமைப்புகளினுள் மேலாதிக்க கட்டமைப்பும், அடுத்தடுத்த நிலையிலுள்ள கட்டமைப்புகளும், முக்கியத்துவம் குறைந்த கட்டமைப்புகளும் சரியாக இனம் காணப்பட்டு சமூக போராட்டங்களை மதிப்பீடு செய்யும்போது அதிகாரப்படிநிலை அமைப்பில் இந்த கட்டமைப்புகள் கொண்டுள்ள நிலைக்கு ஏற்ப அவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

5) பல்வேறு கட்டமைப்புகளும் ஒன்றையொன்று சார்ந்து, ஒன்றையொன்று பலப்படுத்தும் விதத்தில் செயற்படுவதால், வெவ்வேறு கட்டமைப்புகளில் உள்ள முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான போராட்டங்களும் ஒன்றையொன்று பலப்படுத்தும் விதத்தில் இணைந்து முன்னெடுக்கப்பட வேண்டும். பல முரண்பாடுகளை இணைத்து மேலாதிக்க முரண்பாட்டினூடாக வெளிப்படுத்துகையில் புரட்சி உருவா வதை கருத்திற்கெடுத்து இந்த இணைவை பலப்படுத்தும் விதத்தில் போராட்டத்திற்கான திட்டம் வரையப்பட வேண்டும்.

6) பலதரப்பட்ட போராட்டங்களையும் இணைத்து முன்னெடுக்கையில் எமது திட்டம் முன்னெடுக்கும் புரட்சியின் கட்டங்களுக்கு ஏற்ப, அந்த புரட்சியின் கட்டங்களுடன் குறிப்பிட்ட கட்டமைப்பிலுள்ள முரண்பாடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எந்தளவிற்கு தீர்க்கப்படலாம் என்பதைக் கருத்திற்கெடுத்தே பிரச்சார, கிளர்ச்சி, செயல் முழக்கங்கள் முன் வைக்கப்பட வேண்டும்.

7) சமூக உருவாக்கத்திலுள்ள பல்வேறு கட்டமைப்புகளும் வேறுபட்ட வரலாறுகளைக் கொண்டிருப்பதனால், பல் வேறு கட்டமைப்புகளிலுள்ள முரண்பாடுகள், போராட்டங்கள் போன்றவற்றின் தீவிரமான தன்மைகளும், அவை தொடர்பாக மக்களின் விழிப்புணர்வு மட்டங்களும் கூட வேறுபட்டவையாகவே இருக்கும். தாபனம் தனது நடை முறைப் பணிகளை வகுக்கும் போது இந்த யதார்த்தமான வேறுபாடுகளை மனதில் கொள்ள வேண்டும். எந்தவொரு போராட்டத்தின் வளர்ச்சியிலும் மக்கள் விழிப்புணர்வு பெறல், அமைப்பாதல், நேரடியான செயல் என்ற படிநிலைகள் இருப்பதைக் கருத்திற் கொண்டு வெவ்வேறு கட்டமைப்புகளில் நடைபெறும் போராட்டங்கள் வெவ்வேறு வளர்ச்சி நிலையில் இருக்கலாம் – என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும். குறிப்பிட்ட ஒருகட்டமைப்பில் நேரடிச் செயல் வடிவில் போராட்டம் நடைபெறும் போதே, இன்னோர் கட்டமைப்பில் பிரச்சார மட்டத்திலும், இன்னோர் மட்டத்தில் அமைப்பாதல் மட்டத்திலும் கூட போராட்டமிருக்கலாம். இவற்றைக் கருத்திற் கொள்ளாத யாந்தீக பிரயோகம் எதுவுமே சிறப்பான பலனைக் கொடுக்க மாட்டாது.

8) எந்தவொரு குறிப்பிட்ட போராட்டத்தின் வளர்ச்சியிலும் அதன் வளர்ச்சி நிலைகளான விழிப்புணர்வு பெறல், அமைப்பாதல், நேரடிச்செயல் போன்ற ஒவ்வொரு நிலையும் தமக்கென தனித்துவமான பண்புகளையுடைய, அதனால் தனித்துவமான பணிகளை வேண்டி நிற்கும் கட்டமைப்புகளாக புரிந்து கொள்ளப்பட வேண்டும். ஒவ்வொரு கட்டத்திலுமான அமைப்பில் பணிகள் வெற்றிகரமாக நிறைவு பெறுகையில் அடுத்த கட்டத்தை நோக்கி அமைப்பின் பணிகள் உணர்வு பூர்வமாக நகர்த்தப்பட வேண்டும்.

9) குறிப்பிட்ட எந்தவொரு சமூக உருவாக்கத்தினதும், மட்டங்கள், கட்டமைப்புகள், வரலாறுகள், போராட்டத்தின் வளர்ச்சி நிலைகள் போன்ற அனைத்து அம்சங்களும் இன்னோர் சமூக உருவாக்கத்தை ஒரு போதுமே ஒத்திருக்கமாட்டாது. என்பதால் எந்தவொரு நாட்டினது புரட்சியும் கூட இன்னோர் நாட்டின் புரட்சியாளர்களுக்கு புரட்சி பற்றிய பொதுவான விதிகளுக்கு மேல் எதையும் கொடுத்துவிடப் போவதில்லை. ஆதலால் இரவல் கோட்பாடுகள் ஒரு போதும் கைகொடுக்கமாட்டாது. தமது சொந்தப் புரட்சிக்கு புரட்சியாளர்கள் பொதுவான கோட்பாட்டின் வழிகாட்டுதலில், தமது சமூக உருவாக்கத்தை ஸ்தூலமாகவும், துல்லியமாகவும் ஆராய்ந்து புரட்சியின் விதிகளைகண்டறிய வேண்டும். இந்த கோட்பாட்டு ரீதியிலான பணியை செவ்வனே செய்யாது முன்வைக்கும் ஒவ்வொரு அடியுமே தன்னியல்பின் பாற்பட்டவையேயாகும்.

இந்த விதமான அமைப்பியல் ஆய்வு முறையை குறிப்பிட்ட ஒரு சமூக உருவாக்கத்தை புரிந்து கொள்ளப் பிரயோகிக்கும் போது ஏற்படக்கூடிய தவறுகளில் இரண்டு முக்கியமான தவறுகளை இங்கு சுட்டிக் காட்டுவது அவசியமானது.

1) சமூக உருவாக்கம் என்பது மிகவும் சிக்கலானது என்ற வகையில் அதனை எந்தவொரு அம்சத்தினதும் பிரதிபலிப்பாக, நேரடி வெளிப்பாடாக, புரிந்து கொள்வதை தவிர்க்க வேண்டும். இந்த வகையில் சமூகத்தில் எந்தவோர் பிரச்சனையும் ஏதாவது ஒரு அம்சத்துடன் ஒன்றுக்கொன்று நேரான உறவு (One to - One Relationsி) கொண்டதாக பார்க்காமல் பல்வேறு கட்டமைப்புகளின் சிக்கலான இணைவாக சமூக உருவாக்கத்தை புரிந்து கொள்ளப்பட வேண்டும் என்ற நோக்கில் சமூக உருவாக்கமானது பல்வேறு கூறுகளாக உடைக்கப்படுகிறது. இந்த உடைப்பு எவ்வளவு முக்கியமானதோ அதேயளவு முக்கியமானது இந்த கட்டமைப்புகள் பரஸ்பரம் கொள்ளும் உறவிலேயேதான் அர்த்தம் பெறும் என்பதும், அந்த வகையில் உடைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட கூறுகள் சரியான முறையில் பரஸ்பரம் தொடர்பு படுத்தப்படாவிட்டால், இக் கட்டமைப்புகள் வரம்பற்ற சுயாதீனமுடையன போல கையாளப்பட்டால் எந்த விதமான புரிதலையும் ஏற்படுத்திவிட மாட்டாது. ஒரு விதமான குறுக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கல்வாதத்தை தவிர்ப்பது போலப்பட்டாலும் குழப்பமே மிஞ்சும்.

2) சமூக உருவாக்கத்தில் பல்வேறு கட்டமைப்புகளும் சரியாக இனம் காணப்பட்டு, புரிந்துகொள்ளப்பட்டு, தொடர்புபடுத்தப்பட்டாலும் கூட, இந்த கட்மைப்புக ளிடையேயுள்ள அதிகாரப் படிநிலை வரிசையை, மேலாதிக்க கட்டமைப்பை சுட்டத் தவறினால் அந்த ஆய்வு புரட்சிக்கான திட்டத்தை வரைவதில் பயன்படமாட்டாது. இது ஒருவித பன்மைவாதமே. செயலுக்கு உதவமாட்டாது. இந்த பன்மைவாதமானது பூர்சுவா கோட்பாடேயன்றி மார்க்சியமாகாது.

எனவே சமூக உருவாக்கத்தையோ இலக்கியத்தையோ அமைப்பியல் ஆய்வு செய்யும் போது உடைக்கப்பட்ட கூறுகளின் சார்பளவிலான சுயாதீனம், அதிகாரப்படிநிலை வரிசை, போன்றவற்றை கருத்திற்கெடுக்கத் தவறுகையில் அமைப்பியல்வாத ஆய்வு முறையின் பெயரால் ஒருவித சொற்களின் விளையாட்டும் பன்முக வாதமுமே மிஞ்சும். இன்று வலதுசாரிகள் இலக்கியத்தில் மேற்கொள்ளும் அமைப்பியல்வாத ஆய்வுகள் இவ்விதமாகவே அமைந்துவிடுகின்றன.

## பகுதி – 11

## இலங்கையில் புரட்சிகர மாற்றத்திற்கான வழிமுறை

எந்தவொரு சமூகத்திலும் புரட்சிகர மாற்றங்களை ஏற்படுத்த விரும்பும் புரட்சியாளர்கள், முதலில் அந்த சமூகத்திலுள்ள முரண்பாடுகள் பற்றி ஸ்தூலமான பகுப்பாய்வை மேற்கொள்வது அவசியமானது. மார்க்சிய கண்ணோட்டத்தில் சமூக உறவுகள் குறித்து விஞ்ஞானபூர்வமான ஓர் விளக்கத்தை முன்வைப்பது எந்தவொரு சமூக மாற்றத்திற்கும் முன் நிபந்தனையானது. இன்று சமூக மாற்றத்தில் தீவிரமான ஈடுபாடுள்ள எவருமே 'சோசலிசப் புரட்சி' 'பாட்டாளி வர்க்கத் தலைமை' போன்ற பதங்களை உச்சரித்துக் கொண்டிருப்பதுடன் திருப்தி கண்டுவிட முடியாது. அவர் வாழும் சமூக யதார்த்தத்தில் இந்த பதங்களை எப்படி புரிந்து கொள்ளப்படவேண்டும் என்பது இங்கு முதன்மையான அக்கறைக்குரியதாகிறது.

இலங்கையில் சமூக உருவாக்கமானது எளிய பொரு ளாதார முரண்பாடு என்ற சாரம்சத்தின் வெளிப்பாடாகப் புரிந்து கொள்ளப்படாமல் பொருளாதாரம், தேசியம், சாதியம், பால்வாதம் போன்ற பலதரப்பட்ட தனித்துவமான கட்டமைப்புக்களின் சிக்கலான உறவினூடாக புரிந்து கொள்ளப்பட வேண்டும். இந்த கட்டமைப்புக்களுக் கிடையிலான பரஸ்பர உறவுகள், சார்ந்திருத்தல்கள், இவை தமக்குள் நிகழ்த்தும் பரஸ்பர தாக்கங்கள், இவற்றினூடாக மேலாதிக்க கட்டமைப்பு செயற்படுவது போன்ற அனைத்தும் துல்லியமாக வெளிப்படுத்தப்படும் போது மட்டுமே இலங்கையில் புரட்சிகரமான மாற்றம் பற்றிய ஒரு உறுதியான வழிமுறையை முன் வைப்பது சாத்தியப்படும். இந்த முயற்சியில் இலங்கையில் நிலவும் பன்முக முரண்பாடுகளை இனங்கண்டு அவற்றுள் மேலாதிக்க முரண்பாட்டை துல்லியமாக வேறுபிரித்துக் காண்பது முக்கியமானதாகும்

இலங்கையில் முக்கியமான முரண்பாடுகளாக ஏகாதிபத்தியத்திற்கும் மக்களுக்குமான முரண்பாடு, இந்திய விஸ்தரிப்புக்கும் மக்களுக்குமான முரண்பாடு, வர்க்க முரண்பாடு, தேசிய முரண்பாடு, பால் முரண்பாடு, சாதிய முரண்பாடு என்பவற்றைக் குறிப்பிடலாம். இவற்றுள் காலனித்துவ கால கட்டத்தில் ஏகாதிபத்தியத்திற்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு மேலாதிக்க நிலையில் இருந்தது. சுதந்திரத்தின் பின்பு அறுபதுகளின் இறுதிப்பகுதி வரையில் வர்க்க முரண்பாடும், தேசியமுரண்பாடும் ஒன்று மாறி ஒன்றாக மேலாதிக்க பாத்திரத்தை ஆற்றிவந்துள்ளன. எழுபதுகளில் தேசிய முரண்பாடு இன்னும் தீவிரமடைந்து மேலாதிக்க நிலையை தக்க வைத்து கொண்டது. 80களின் பின்பு தேசி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முரண்பாடு திட்டவட்டமான மேலாதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டு இலங்கையில் ஏனைய முரண்பாடுகளை நிர்ணயிப்பதாக மாறியுள்ளது. (இடையில் ஒரு குறுகிய காலம் இந்திய மேலாதிக்கத்திற்கும் இலங்கை மக்களுக்கும் இடையிலான முரண்பாடு மேலாதிக்க நிலையை அடைந்திருந்தையும் குறிப்பிட வேண்டும்.)

இன்று மேலாதிக்க நிலையிலுள்ள தேசிய முரண்பாடு என்பது வெறுமனே இன முரண்பாடு மாத்திரமல்ல. இத் தேசிய முரண்பாடு என்பது இன முரண்பாட்டுடன் கூடவே, இன்னும் பல முரண்பாடுகள் இறுகிச் சேர்ந்ததன் விளைவாகும். தமிழ் மக்கள் தனியான தேசமாக உருவாகிவிட்ட இன்றைய நிலையில் தனியான அரசமைப்பது அவர்களது வரலாற்றுத் தேவையாக உள்ளது. இத்தேவை நிறைவு பெறுவதற்கு சிங்கள தரகு முதலாளித்துவ அரசு தடையாக உள்ளது. தமிழ் மக்களுக்கும் சிங்கள தரகு முதலாளி அரசுக்கும் இடையிலான முரண்பாடும் இந்த தேசிய முரண்பாட்டில் சேர்ந்து இறுகியிருக்கிறது. அத்துடன் தேசியவாதம் என்பது அதன்கறாரான அர்த்தத்தில் அனைத்து அந்நியசக்திகளின் ஆதிக்கத்திற்கும் எதிரானது என்றவகையில் ஏகா திபத்திய எதிர்ப்பாகவும், இந்திய மேலாதிக்க எதிர்ப்பா கவும், விரி வடையும் போதே தேசியமானது அதன் இலக்குகளை அடைய முடியும். இந்த வகையில் தமிழ் மக்களுக்கும் ஏகாதிபத்தியத்திற்கும், தமிழ் மக்களிற்கும் இந்தியமேலாதிக்கத்திற்கும், இடையிலான முரண்பாடுகளும் இதில் இறுகிச் சேர்ந்துள்ளன. இந்த வகையில் இன்று தேசிய முரண்பாடு என்பது நீண்டகாலமாக நிலவிவந்த இன முரண்பாட்டுடன், தமிழ் மக்களுக்கும் சிங்கள தரகு முதலாளித்துவ அரசுக்கும் இடையிலான முரண்பாடு, தமிழ் மக்களுக்கும் ஏகாதிபத்தியத்திற்கும் இடையிலான முரண்பாடு, தமிழ்மக்களுக்கும் இந்திய மேலாதிக்கத்திற்கும் இடையிலான முரண்பாடு போன்ற நான்கு முரண்பாடுகளும் இறுகிச்சேர்ந்து, வர்க்க முரண்பாட்டை இடம் பெயர்த்து மேலாதிக்க நிலைக்கு வந்துள்ளதாகும். தேசிய முரண்பாடானது மேலாதிக்க முரண்பாடாக இருப்பது என்பது இன்று எமது சமூக உருவாக்கத்தில்தேசியமானது மேலாதிக்க கட்டமைப்பாக திகழ்வதைக் காட்டுகிறது. தேசியமானது மேலாதிக்க கட்டமைப்பாக இனம் காணப்பட்டால் தேசியத்தின் தனித்துவமான பண்புகள், இயக்கவிதிகள் என்பவற்றில் ஆழமான பரிச்சயமானது உடனடியான தேவையாகிறது.

எந்தவொரு சமூகத்திலும் புரட்சிகர மாற்றங்களை ஏற்படுத்த விரும்பும் புரட்சியாளர்கள், முதலில் அந்த சமூகத்திலுள்ள முரண்பாடுகள் பற்றி ஸ்துாலமான பகுப்பாய்வை மேற்கொள்வது அவசியமானது.

இலங்கையில் சமூக உருவாக்கமானது எளிய பொருளாதார முரண்பாடு என்ற சாரம்சத்தின் வெளிப்பாடாகப் புரிந்து கொள்ளப்படாமல் பொருளாதாரம், தேசியம், சாதியம், பால்வாதம் போன்ற பல தரப்பட்ட தனித்துவமான கட்டமைப்புக்களின் சிக்கலான உறவினூடாக புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

தேசியம் என்பது பொருளாதாரத்தில் இருந்து வேறான, தனியான ஒரு கட்டமைப்பாகும். இன்று இலங்கையில் தேசிய முரண்பாடு என்பது மேலாதிக்க முரண்பாடாக இருக்கிறது. இந்த நிலையில் தேசிய முரண்பாட்டினூடாக ஏனைய சமூக முரண்பாடுகள் வெளிப்படுத்தப்படும் போது மட்டுமே இலங்கையில் புரட்சிகர மாற்றம் எதுவும் சாத்தியம் என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும். இலங்கையின் சமூக உருவாக்கமானது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஏற்கனவே சிங்கள, தமிழ் தேசங்களை தனித்தனியாக உருவாக்கி விட்டுள்ளதை கவனிக்கத் தவறக்கூடாது. ஏற்கனவே சமூக அளவில் நடைபெற்றுவிட்ட இந்த பிளவானது அரசியல் ரீதியாக நிறைவு பெறாமையே இன்றைய அவலங்களுக்கான காரணமாகும். தேசிய பிரச்சனைக்கு, ஒரு தேசம் தனக்கான தேசிய அரசை அமைப்பதன் மூலமே தீர்வு காணமுடியும் என்பதை தேசியத்தின் இயக்கவிதிகள் கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக திரும்பத் திரும்ப நிரூபித்துள்ளன. எனவே, தமிழ்த் தேசத்தைச் சார்ந்த புரட்சியாளர்கள் தேசியத்தை இன்றைய மேலாதிக்க கட்டமைப்பாக இனங்கண்டு அதில் பலமாக ஊன்றி நிற்பதன் மூலமே சமூகத்தில் புரட்சிகர மாற்றங்கள் எதனையும் நிகழ்த்துவது சாத்தியப்படும். எனவே ஒடுக்கப்படும் தேசம் என்றவகையில் தமிழ்த் தேசம் தனக்கான தேச அரசை உருவாக்குவதற்கான போராட்டத்தில், போராடும் மக்களுக்கு புரட்சிகர தலைமையை வழங்குவதே இன்று தமிழ்த் தேசத்தை சேர்ந்த கொம்யூனிஸ்டுகளதுகடமையாகும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு தமிழ் கொம்யூனிஸ்டுகள் தலைமை தாங்க வேண்டும் என்பதை விமர்சிப்பவர்கள் முன்வைக்கும் வாதமான "முதலாளித்துவ கோசத்திற்கு பலியாதல்" என்பது மரபுவழி இடதுசாரிகளது பொருளாதாரவாத கோஷமாக இனங்காணப்பட வேண்டும்.

தேசியம் என்பது ஒரு தனியான கட்டமைப்பு என்றவகையில் தேசிய முரண்பாட்டிற்கு காணப்படும் தீர்வானது தன்னளவில் சமூகத்திலுள்ள அனைத்து ஒடுக்குமுறைகளுக்கும் தீர்வைக் கொண்டுவந்து விடமாட்டாது. தமிழ்த்தேசமானது தேசிய முரண்பாட்டுடன் கூடவே வர்க்க, பால், சாதிய, அரசியல் முரண்பாடுகளையும் முகங்கொடுக்கின்றது. இந்த ஒவ்வொரு முரண்பாடுகளும் தனித்தனி கட்டமைப்பிற்குரியவையாகும். தமிழ்த்தேசம் என்பது இந்த பலதரப்பட்ட கட்டமைப்புகளது அமைப்பியல் ரீதியான இணைவாகும். இந்த கட்டமைப்புக்கள் ஒவ்வொன்றும் தமக்கென தனியான பண்புகளுடன், விதிகளுடன், வேறுபட்ட தளங்களில், வேறுபட்ட தீவிரத்துடன் செயற்பட்டு வருகின்றன. இந்த ஒவ்வொரு கட்டமைப்பிலும் உள்ள முரண்பாடுகள் சரியாக இனங்காணப்பட்டு, அந்த மோதல்கள் கட்டவிழ்த்துவிடும் சக்திகளை சரியாக மதிப்பிட்டு, இந்த முரண்பாடுகளுக்கான தீர்வுகளை தேசிய விடுதலைக்கான திட்டத்துடன் இணைக்கும் போதே தமிழ்த் தேசத்தின் புரட்சிகர மாற்றம் என்பது கைகூடும். அத்தோடு சமூகத்திலுள்ள ஏனைய கட்டமைப்புக்களான பொருளாதாரம், சாதியம், பால்வாதம்...... போன்றவை தேசியத்தைச் சார்ந்தும், ஒன்றையொன்று பலப்படுத்துவதாகவும் இருப்பதால், ஏனைய கட்டமைப்புகளிலுள்ள குறிப்பான முரண்பாடுகளும் இனங்காணப்பட்டு அவற்றைக்களைவதற்கான போராட்டங்களை தேசிய விடுதலைப் போராட்டத்தடன் இணைத்து முன்னெடுக்கப்படும்போது மட்டுமே தேசிய விடுதலைப் போராட்டமானது தமிழ்த் தேசத்திலுள்ள அனைத்து புரட்சிகர சக்திகளினதும் உள்ளாற்றலை வெளிப்படுத்துவதாக இருக்கும். இதனால் தமிழ்த் தேசமானது தனது தேசிய விடுதலையை அடைவதை இது உத்தரவாதப்படுத்துவதுடன், அவ்வாறு அடையப்பெறும் விடுதலையானது தமிழ்த் தேசத்தினது உண்மையான விடுதலையாக அர்த்தம் பெறவைக்கும்

## இயங்கு சக்திகள் பற்றிய பிரச்சனை

'சோசலிசம்,' 'பாட்டாளிவர்க்கக்கட்சி,' 'பாட்டாளிவர்க்கத்தலைமை' போன்ற பதங்கள் இன்று பலராலும் இந்தப் பதங்களின் தார்ப்பரியம் பற்றிய புரிதல் இன்றியே உச்சரிக்கப்படுவதை காணமுடிகிறது. இந்த கோஷங்களும், பொருளாதார வாதமும் கண்களை மறைப்பதால், மரபுவழி இடதுசாரி கட்சிகள் தாம் வாழும் சமூகத்தில் தீவிரமாக நடைபெறும் போராட்டங்களிலும், இப் போராட்டங்கள் கட்டவிழ்த்துவிடும் இயங்குசக்திகளிலும் எந்த விதமான தாக்கமும் நிகழ்த்த முடியாதவர்களாக உள்ளார்கள். இந்த செயலற்ற (Passive) நிலையிலிருந்து புரட்சியாளர்கள் தீவிரமான செயல்பாட்டு வடிவத்தைப் பெறுவதாயின் சோசலிசம்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாட்டாளி வர்க்கத் தலைமை, போன்றவிடயங்களையும் மீள்வரையறை செய்து கொள்வது அவசியமானது.

சமூக மாற்றத்திற்கான செயல்பாடு என்பது புரட்சியாளர்கள் தமது மனத்திற்குள் நடத்தி முடிப்பதல்ல. புறநிலையாக, வரலாறு தமக்களித்த குறிப்பான நிலைமையின் கீழ், சமூக வளர்ச்சியின் குறிப்பிட்ட கட்டத்திலிருந்து அடுத்த கட்டத்தை நோக்கி நகர்த்துவதே புரட்சியாகும். இதனால் புரட்சியாளர்கள் எப்போதும் தமது விருப்பு வெறுப்புகளிலிருந்து தொடங்காமல், தாம் வாழும் சமூகம் எந்தக்கட்டத்திலிருக்கிறது? அது செல்லக்கூடிய அடுத்த கட்டம் என்ன? என்பவற்றை விஞ்ஞானபூர்வமாக வரையறுத்துக் கொள்ளவேண்டும். இதிலிருந்து, தற்போதைய சமூக முழுமையில் பல்வேறு கட்டமைப்புக்களின் வளர்ச்சி நிலைகள் எப்படியுள்ளன? அடுத்த கட்ட சமூக வளர்ச்சியில் இந்த கட்டமைப்புக்களின் முரண்பாடுகள் எந்தளவிற்கு, எப்படி தீர்வு காணப்படும்? போன்றவற்றையும் துல்லியமாக கணித்துக் கொள்ள வேண்டும். இதிலிருந்து ஒவ்வொரு கட்டமைப்பிலும் நடைபெறும் போராட்டங்கள் கட்டவிழ்த்துவிடும் சமூக சக்திகள், இவை முன்வைக்கும் கோரிக்கைகள், இவற்றுக்குப் பொருத்தமான தாபன வடிவங்கள் போன்றவற்றை தீர்மானிக்க வேண்டும். வேறுபட்ட தளங்களிலும், வேறுபட்ட மட்டங்களிலும் நடைபெறும் போராட்ட வடிவங்களை இணைக்கும் விதத்தில் தாபனப் பணிகளை திட்டமிட வேண்டும். இவற்றிற்கு தகுந்தவிதத்தில் அந்த கட்ட புரட்சிகர சூழலுக்குப் பொருத்தமான அரசியல் திட்டம், யுத்ததந்திரம், நடைமுறைத் தந்திரங்கள், தாபன வடிவங்கள், பிரச்சார–கிளர்ச்சி–செயல் முழக்கங்களை வகுத்து முன்வைக்க வேண்டும். அப்போதுதான் எந்தவொரு புரட்சிகர தாபனமும் தான் வாழும் சூழலில் நடைபெறும் போராட்டங்களுக்கு பொருத்தமான தலைமையாக அமையமுடியும்.

19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் மார்க்ஸ், பாட்டாளி வர்க்கத்தை புரட்சிகர வர்க்கமாகக் கண்டார். அன்று முதலாளித்துவம் வளர்ந்துவரும் நிலையில் சமூகத்தில் நடைபெறும் கொந்தளிப்பான மாற்றங்களில் பாட்டாளி வர்க்கமானது தனது போர்க்குணாம்சத்தை பலதடவை நிரூபித்திருந்தது. அத்துடன் முதலாளித்துவமானது தனது அடுத்தகட்ட வளர்ச்சியாகிய சோசலிசத்தை அடைவதில் மட்டுமே பாட்டாளி வர்க்கம் தனது நலன்கள் கைகூடும் நிலையில் இருந்தது. இதனால் பாட்டாளி வர்க்கமானது சோசலிசப் புரட்சியின் தலைமை சக்தியாக இருந்தது. மிகவும் வேறுபட்ட நிலைமைகளில், பலதரப்பட்ட முரண்பாடுகளும் மிகவும் தீவிரமாக முட்டி மோதும் நிலைமைகளில் எந்தெந்த சமூகப்பிரிவுகள், சமூகத்தின் அடுத்தகட்ட நகர்வில் தமது நலன்கள் கைகூடக் காண்கின்றன. எந்தெந்த சமூகப்பிரிவுகள் அந்த போராட்டத்தில் தீவிரமாக குதிக்கின்றன என்பதை புற நிலையாக மதிப்பிடத் தவறக்கூடாது. தேசியம் என்பது தனியான கட்டமைப்பு என்ற வகையில் தேசியம் தனக்கேயுரிய தனியான பண்புகளையும், இயக்க விதிகளையும் கொண்டது மட்டுமல்ல, இது கட்டவிழ்த்துவிடும் போராட்ட சக்திகளும் தனித்துவமானவையாகும். ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தின் போது நாம் பொருளாதாரத் தளத்தில் நடைபெறும் போராட்டத்தில் செயற்படும் அதே சக்திகளின் சேர்க்கையை அப்படியே யாந்திரிகமாக எதிர்பார்க்கக்கூடாது. தேசிய விடுதலைப் போராட்டம் பொதுவாக கட்டவிழ்த்துவிடும் சமூக சக்திகளை தேசியத்தின் கடந்த இரண்டு நூற்றாண்டு வரலாற்றிலிருந்து இனங்காண கற்றுக்கொள்ள வேண்டும். எமது தேசிய விடுதலைப் போராட்டம் கட்டவிழ்த்து விட்டுள்ள சமூக சக்திகளை எமது போராட்டத்தின் ஸ்தூலமான நிலைமைகளில் இருந்தே கண்டறிய வேண்டும்.

எமது தேசிய விடுதலைப் போராட்டமானது இதுவரையிலுமான காலத்தில் பல தரப்பட்ட சமூக சக்திகளை அரங்கிற்கு கொண்டு வந்துள்ளது. மாணவர், இளைஞர், பெண்கள் போன்றவையே இந்த சமூக சக்திகளாகும். தேசிய விடுதலைப் போராட்டமானது இன்னும் புரட்சிகரமாகவும், ஜனநாயக சூழலிலும் முன்னெடுக்கப்படுகையில் புத்திஜீவிகளும், தாழ்த்தப்பட்ட மக்களும் கூட தீவிரமாக செயற்படும் சமூக சக்திகளாக வடிவெடுப்பர் என்று எதிர்பார்க்கலாம். தேசிய விடுதலைப் போராட்டத்தில் இவைதாம் பிரதான இயங்குசக்திகளாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உள்ளன. யதார்த்தத்தில் வீதிகளிலும், போர்முனைகளிலும் போராடிமடியும் சக்திகள் இவைதாம். இந்த சக்திகளை இனங்காண வர்க்க குறுக்கல்வாதம் தடையாக அமைந்துவிடக்கூடாது.

தேசிய விடுதலைப் போராட்டமானது இப்படிப்பட்ட சமூக சக்திகளை அரங்கிற்கு கொண்டு வந்துள்ள போதிலும் தேசியம் என்பது முற்றிலும் சுயாதீனமான கட்டமைப்பல்ல. இது சமூகத்திலுள்ள ஏனைய கட்டமைப்புக்களுடன் தொடர்புபட்டு, பரஸ்பரம் அவற்றால் பாதிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. அந்த வகையில் பொருளாதார கட்டமைப்பானது தேசியத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கங்கள் சமூக சக்திகளை மதிப்பிடும் விடயத்தில் முக்கியத்துவம் பெற்றதாகும். உலகம் தொடர்ந்தும் வர்க்கப் போராட்ட விதிகளால் ஆளப்பட்டு வருகிறது என்பது இங்கும் சொல்லத்தக்கதே. "வர்க்கங்களையும் வர்க்கப் போராட்டங்களையும் ஒரு போதும் மறந்துவிட வேண்டாம்" என்று மாவோ எச்சரித்ததும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டியதாகும். இவற்றிற்கேற்ப எமது போராட்டத்தில் நாம் காணும் இயங்கு சக்திகள் கூட பொருளாதார கட்டமைப்பிலுள்ள பிளவுகளால் ஊடுருவப்பட்டவையே. குறிப்பிட்ட நிலைமைகளின் கீழ் இந்த இயங்கு சக்திகள் ஒரே சமூக சக்திபோல் தோற்றமளித்தாலும் தீர்க்கமான அம்சங்களில்-நலன்கள் என்று வரும்போது இந்த சக்திகள் வர்க்கங்களாக பிளவுபட்டே தமது கருத்துக்களை வெளிப்படுத்துகின்றன. சமூக மாற்றம், அரசியல்-பொருளாதார கோரிக்கைகள் என்று வரும்போது கூட இந்த சமூகப்பிரிவுகள் பிளவுபடுவதை அவதானிக்க முடியும். இதுபோலவே தாபன ஒழுங்கமைப்பு, போர்க்குணாம்சம் போன்ற வற்றிலும் வர்க்க வேறுபாடுகள் வெளிப்படவே செய்கிறது. இந்த வேறுபாடுகள் என்பவை எப்போதுமே சாதாரண வேறுபாடுகளாகவே அமைந்து விடமாட்டாது. சில தீர்க்கமான கட்டங்களில் தீவிர முரண்பாடுகளுக்கும், மோதல்களுக்கும் கூட இவை இட்டுச் செல்லும் என்பதில் கவனமாக இருக்க வேண்டும். கடந்த காலத்தில் தேசிய விடுதலை அமைப்புக்களில் ஏற்பட்ட நெருக்கடிகளுக்கும் வேறுபல நாடுகளின் தனித்துவமான போராட்டங்களுக்கான அமைப்புக்கள் முகம் கொடுக்கும் நெருக்கடிகளுக்கும் இந்த இயங்குசக்திகள் வர்க்கங்களாக பிளவுபட்டிருப்பதே காரணமாகும்.

தேசிய விடுதலைப் போராட்டத்தில் புரட்சிகர சக்திகள் பற்றிய மதிப்பிடானது, இன்று யதார்த்தத்தில் தேசிய விடுதலைப் போராட்டம் கட்டவிழ்த்து விட்டுள்ள இயங்கு சக்திகளையும், இந்த இயங்கு சக்திகளுக்குள் ஊடுருவியுள்ள வர்க்க வேறுபாடுகளையும் இணைத்து கருத்திற்கெடுத்தே மேற்கொள்ளப்பட வேண்டும். தேசிய விடுதலைப் போராட்டம் கட்டவிழ்த்துவிடும் இயங்கு சக்திகளுள், உழைக்கும் வர்க்கப் பின்னணியிலிருந்து வருபவர்கள் அல்லது உழைக்கும் வர்க்க நலன்களுடன் தம்மை இணைத்துக் கொண்டவர்கள் தேசிய விடுதலைப் போராட்டத்தில் புரட்சிகரமான பிரிவுகளாக அமைவர். இயங்கு சக்திகளின் ஏனைய வர்க்கப் பின்னணியிலிருந்து வருபவர்கள் தேசிய விடுதலைப் போராட்டம் என்ற எல்லைக்குள் குறிப்பிடத்தக்க பாத்திரம் ஆற்றுவதை மறுத்துவிட முடியாது. ஆனால் தீர்க்கமான நிலைமைகளிலும், நீடிக்கும் போராட்ட காலத்திலும் இந்தப் பிரிவுகளும் புரட்சிகரப பிரிவும் முட்டி மோதும் நிலைமைகளும் எழலாம்.

## தாபன வடிவங்கள்

தேசிய முரண்பாடு என்பது இன்று மேலாதிக்க முரண்பாடாக இருந்து ஏனைய அனைத்து முரண்பாடு களையும் நிர்ணயிப்பதால், இந்த முரண்பாட்டைக்களைவதற்கான தேசிய விடுதலைப் போராட்டமானது தமிழ்த்தேசத்தின் அனைத்துத் தரப்பினது அக்கறைக்குரியதாகிறது. தமிழ்த்தேசத்திலுள்ள வெவ்வேறு கட்டமைப்புக்களின் முரண்பாடுகளால் ஒடுக்கப்படுபவர்களுக்கு அந்தந்த ஒடுக்கு முறைகளுக்கு தீர்வு காண்பதும் முக்கியமானதே. எனவே தனித்துவமான ஒடுக்குமுறைகளுக்கு எதிரான தனித்துவமான போராட்டங்களையும் தேசிய விடுதலைப் போராட்டத்துடன் இணைத்து முன்னெடுக்கப்படவேண்டியது அவசியமானது. சமூகத்திலுள்ள பல்வேறு கட்டமைப்புக்களும் ஒன்றையொன்று சார்ந்தும், ஒன்றையொன்று பலப்படுத்தும் விதத்திலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒழுங்கமைக்கப்பட்டிருப்பதால் இவற்றுள் ஏதாவது ஒன்றை விலையாகக் கொடுத்து மற்றொன்றை அடைய முடியாது என்பதில் விழிப்பாக இருக்கவேண்டும்.

தேசிய விடுதலைப் போராட்டத்திற்கான தாபனமானது தமிழ்தேசத்தின் அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கியதாக இருக்கும். அதேவேளை தனித்துவமான ஒடுக்குமுறைகளுக்கு எதிரான போராட்ட தாபனங்கள், அந்த ஒடுக்கு முறைகளால் பாதிக்கப்படுபவர்களையே பெருமளவில அணிதிரட்டியதாக இருக்கும். கூலி உழைப்பாளர் அமைப்பு, பெண்விடுதலை அமைப்பு, தீண்டாமை ஒழிப்பு அமைப்பு போன்றவை இப்படிப்பட்டனவாகும்.

தனித்துவமான கட்டமைப்புக்களில் நடைபெறும் போராட்டங்கள் அந்த கட்டமைப்புக்களில் ஒடுக்கப்பட்டு அறியாமையில் மூழ்கி மொத்த சமூக ஒடுக்குமுறைகளைப் பற்றியும் விழிப்புணர்வு இல்லாது இருந்தவர்களை தட்டியெழுப்புகிறது. இவர்கள் முதலில் தனித்துவமான ஒடுக்குமுறைகளை இனங்கண்டு போராடுகிறார்கள். இதன்மூலம் படிப்படியாக மொத்த சமூக ஒடுக்குமுறைகளையும் இனங்கண்டு அவற்றை களைவதற்கான போராட்டத்தை நோக்கி வளர்ந்து வருகிறார்கள். இதனால் தனித்துவமான போராட்டங்கள் பரஸ்பரம் ஏனைய ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடவும், இறுதியில் சமூக மாற்றத்தை இலக்காகக் கொள்ளவும் ஒடுக்கப்பட்டவர்களை உந்தித் தள்ளுகிறது. இதனால் இந்த தனித்துவமான போராட்டங்கள் மொத்த சமூக மாற்றத்திற்கு தவிர்க்க முடியாத அவசிய கூறுகளாகின்றன. மாறாக தனித்துவமான போராட்டங்களை ஒட்டுமொத்த சமூகமாற்றத்திற்கு எதிரானவையாகப் பார்ப்பது நிலையியல் கண்ணோட்டமாகும். பொருளாதாரத்தளத்தில் நடக்கும் வர்க்கப்போராட்டமே ஏனைய தனித்துவமான அனைத்து ஒடுக்குமுறைகளுக்கும் முடிவுகட்டுவதாக சாதிக்கும் பொருளாதார வாதமே இதுவாகும். தனித்துவமான ஒடுக்குமுறைகளுக்கு எதிரான போராட்டங்களை ஒட்டுமொத்தமான போராட்டத்துடன் இணைக்கத்தவறுவது புரட்சிகர மாற்றம் முழுவதற்கும் தீங்கிழைப்பதாகும்.

தனித்துவமான போராட்டங்கள் ஒவ்வொன்றும் ஒன்றை யொன்று பலப்படுத்தும் விதத்திலும், முழுமையான சமூக மாற்றத்தை நோக்கி இட்டுச் செல்லும்விதத் திலும் முன்னெடுக்கப்படுவதில் புரட்சிகர கட்சியானது தனது உயர்ந்தபட்ச கவனத்தைக் குவிக்கவேண்டும். இங்கு புரட்சிகரகட்சியானது, மார்க்சிய–லெனினிசத்தால் வழிகாட்டப்படும், புரட்சிகர மக்கள் பிரிவினரை பெருமளவில் அணிதிரட்டியுள்ள தாபனம் என்றே அர்த்தப்படும்.

## ஜனநாயகத்திற்கான போராட்டம்

அரசியல் தளத்தில் தமிழீழ விடுதலைப் போரட்டத்தில் ஓங்கியுள்ள 'பாசிசப்' போக்கை களைவது என்பது இன்று பலரதும் அக்கறைக்குரியதாகிறது. ஜனநாயக மின்மை என்பது எமது போராட்ட சூழலில் அரசியல் தளத்திலுள்ள முதன்மையான முரண்பாடாகும். இந்த முரண்பாட்டைக் களைவது தொடர்பானபிரச்சனையில் அமைப்பியல்வாதம் எந்தவிதமான தீர்வை முன்வைக் கிறது என்றுபார்ப்போம்.

விடுதலைப் போராட்டத்தில் ஓங்கி நிற்கும் 'பாசிச' போக்கானது பொதுவில் மக்களை மோசமாக நசுக்குவதாகவும் முற்போக்குப்பிரிவினரை குறிப்பாக வேட்டையாடுவதாகவும் உள்ளது. இந்த 'பாசிச' போக்கானது தேசிய விடுதலைப் போராட்டத்தின் புரட்சிகர உள்ளாற்றல் அனைத்தையுமே சிதைத்து வருகிறது. இப்படிப்பட்ட நிலையில் 'பாசிசம்' ஒழிக்கப்படவேண்டும் என்பதில் சமூகப் பொறுப்புணர்வுள்ள அனைவருக்குமே அக்கறையிருக்கிறது. ஆனால் அதனை எவ்வாறு செய்வது? என்பதில்தான் பல வேறுபாடுகள் எழுகின்றன. புலிகள் மக்களை மோசமாக நசுக்கிய போதிலும் மக்களின் கணிசமான பிரிவினர் புலிகளை ஆதரிப்பதேன்? என்ற கேள்வியும் பதிலை வேண்டி நிற்கிறது. பலரும் புலிகளை மக்கள் ஆதரிப்பதற்கு அவர்களது அறியாமையே காரணம் எனக்கூறி மக்கள் மத்தியில் புலிகளுக்கு எதிரான கருத்துக்களைப் பரப்புவதில் அக்கறை காட்டுகிறார்கள். சிலர் அரச படைகளுடன் சேர்ந்து நேரடியாகவே 'புலிவேட்டையில்' இறங்கியுள்ளார்கள். இன்னும் சிலர் அரசுடன் நேரடியாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சேரவிட்டாலும் புலிகளை எதிர்ப்பதையே தமது ஒரே இலக்காக கொண்டு செயற்படுகிறார்கள்.

தமிழ் மக்களது ஜனநாயகத்திற்கான போராட்டம் என்பது தமிழ்த் தேசம் முகம் கொடுக்கும் முரண்பாடுகளுள் முக்கியமானதொன்று என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இது மேலாதிக்க முரண்பாடல்ல. தேசிய முரண்பாடுதான் மேலாதிக்க முரண்பாடாக இருக்கிறது. தமிழ் மக்கள் தேசிய முரண்பாட்டை மோலாதிக்க முரண்பாடாக தமது சொந்த வாழ்வினூடாக உணர்வதால்தான் அந்த முரண்பாட்டை களைவதற்கு செயற்படும் புலிகளை ஆதரிக்க நேரிடுகிறது. புலிகளின் பாசிசத்தை எதிர்க்கமுயல்பவர்கள் தேசிய முரண்பாடு மோலாதிக்க நிலையில் உள்ளதை சரியாக கருத்திற்கெடுத்து செயற்பட்டால் மட்டுமே தமது இலக்கை எய்தமுடியும். தமிழ் தேசத்திலுள்ள ஏனைய முரண்பாடுகள் அனைத்தும் ஒன்றாக இணைக்கப்பட்டு மேலாதிக்க முரண்பாடாகிய தேசிய முரண்பாட்டினூடாக வெளிப்படுத்துகையில்தான் சமூகப்புரட்சி வெடிக்கும். மேலாதிக்க முரண்பாட்டை சரியாக கருத்திற்கெடுக்காத போது அல்லது மேலாதிக்க முரண்பாட்டை மறுதலித்து ஏனைய முரண்பாடுகளை மட்டும் குறியாக வைத்து செயற்படும்போது சமூக மாற்றம் மட்டுமல்ல, குறிப்பிட்ட ஒரு முரண்பாட்டிற்கான தீர்வும் கூட சாத்தியமாக மாட்டாது.

மக்கள் ஜனநாயகத்திற்கான தேவையை உணராமலில்லை. புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வாழ்ந்துகொண்டு, அன்றாடம் புலிகள் போடும் தாளத்திற்கெல்லாம் ஆடநேரும், அடிக்கடி புலிகளின் நிர்ப்பந்தங்களுக்கு பணிய நேரும் மக்கள் கொழும்பிலும் வெளிநாட்டிலுமுள்ள சக்திகளைவிட ஜனநாயகத்திற்கான தேவையை தமது சொந்த வாழ்கையின்னூடாக அன்றாடம் நன்கு உணர்கிறார்கள். ஆனால் "ஜனநாயகத்திற்காக போராடுபவர்கள்" தமிழ் மக்கள் மீது அன்றாடம் இனப்படுகொலைகளை கட்டவிழ்த்துவிடும் பேரினவாத இராணுவத்துடன் கைகளைக் கோர்ப்பதைகாணும் போது மக்கள் இந்த சக்திகளில் நம்பிக்கையிழக்கிறார்கள். தமது உடனடியான உயிர்வாழ்கைப் பிரச்சனைகளை முகம்கொடுத்துபோராடும் சக்தியை ஆதரிக்க நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். எனவே ஜனநாயகத்திற்கான போராட்டம் எதுவுமே மேலாதிக்க முரண்பாடாகிய தேசிய முரண்பாட்டை களைவதற்கான போராட்டத்துடன் இணைக்கப்படும்போது மட்டுமே வெற்றியைப் பெறமுடியும். இந்த இடத்தில், இந்தியப் படைகள் வந்தபோது நிகழ்தவற்றை மீட்டுப் பார்ப்பது பயன்னுள்ளதாக இருக்கும். இந்தியப் படைகள் ஈழத்தில் இறக்கப்பட்டபோது இந்திய மேலாதிக்கத்திற்கும் இலங்கை மக்களுக்குமான முரண்பாடு தீவிரம் பெற்றது. அப்போது தேசிய முரண்பாடு, அரசியல் முரண்பாடுகள் என்பனவும் தொடர்ந்தும் நிலவி வந்தபோதிலும் இந்திய மேலாதிக்கத்திற்கும் இலங்கை மக்களுக்குமான முரண்பாடே மேலாதிக்கம் பெற்றது. அன்று ஜனநாயகத்திற்காக போராடுவதாகக் கூறிக்கொண்ட அமைப்புக்கள் மேலாதிக்க முரண்பாட்டை சரியாக கருத்திற்கெடுக்காது இந்தியப் படைகளுடன் சேர்ந்து ஜனநாயத்தை 'மீட்கத்' தலைப்பட்டனர். ஆரம்பத்தில் மிகவும் சாதகமான நிலைமைகளை இந்த 'ஜனநாயக சக்திகள்' கொண்டிருப்பது போலப்பட்டாலும் இறுதியில் இவர்களால் புலிகளை அழிக்க முடியாதது மட்டுமல்ல, கூலிப்படைகள் என்ற வரலாற்றில் மாறாத அவப்பெயரையும் சம்பாதித்தார்கள். இதே காலகட்டத்தில் மிகவும் நெருக்கடிக்குள்ளாகியிருந்த புலிகளும், U.N.P அரசும் மேலாதிக்க முரண்பாட்டை பற்றிப் பிடித்து இந்திய எதிர்ப்பு வாதத்தினூடாகவே தமது இக்கட்டுகளிலிருந்து மீண்டெழுந்தார்கள். இப்படியாக மோலாதிக்க முரண்பாட்டை உதாசீனம் செய்வதும், சரியாக கருத்திற்கெடுப்பதும் எப்படியான எதிர்மாறான விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பதை வரலாறு எமக்கு கற்பிக்கிறது.

இன்று இன்னோர் பிரிவினர் தேசிய முரண்பாட்டை மேலாதிக்க முரண்பாடாக இருப்பதைக் காரணமாகக் காட்டி, தேசிய முரண்பாட்டைக் களைவதற்காகப் போராடும் புலிகளை ஆதரிக்கத் தலைப்பட்டுள்ளனர். தேசிய விடுதலையானது பரந்துபட்ட மக்களுக்கு உண்மையான விடுதலையாக அமைய வேண்டுமானால், அது தமிழ்த் தேசம் முகம் கொடுக்கும் ஏனைய முக்கியமான முரண்பாடுகளுக்கும் தீர்வு காண்பதாக இருக்க வேண்டும். இங்கு ஒன்றை விலையாகக் கொடுத்து இன்னொன்றை

பக்க தொடர்ச்சி 55........



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உங்களிடமிருந்து எமக்கு

21ம் பக்க தொடர்ச்சி

தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தின் சரியான தன்மையை கோட்பாட்டு ரீதியில் நிலைநாட்டும்போது அது விடுதலைப்புலிகளை பலப்படுத்துவதாக அமைகிறது என்ற கருத்து எனது நண்பர்கள் மத்தியில் நிலவுகிறது. இது தவறு என்பது எனது வாதமாகும். ஒட்டு மொத்த விடுதலைப் போராட்டத்தை சரியாக நிலைநிறுத்துவது வரலாற்றுக் கடமையாகும். மாறாக, புலிகள்தான் இதுவரை காலமும் தாம் நடத்தும் போராட்டத்தை தம்மளவில் கூட இன்றுவரை நியாயப்படுத்த முடியாத அரசியல் வங்குரோத்துத்தனத்தில் இருந்து வந்துள்ளனர் என்பது தான் உண்மையாகும்.

**உயிர்ப்பு வாசகர்**

**இராசரத்தினம் மட்டுநகர்**

**உயிர்ப்பிற்கு!**

நான் பல சஞ்சிகைகளிலும் வெளிவரும்அரசியல் கட்டுரைகளை வாசிப்பவன். அவற்றிலிருந்து உயிர்ப்பு ஓரளவு வேறுபட்டு நிற்கிறது. தேசிய விடுதலை போராட்டம் தொடர்பான பல கேள்விகளுக்கு தெளிவான பதில்களை தருகின்றது. பல புதிய சிந்தனைகளை கிளறி விடுகின்றது.

ஆனாலும் ஒரு மனக்குறை. உயிர்ப்பு வெளிவருவதிலுள்ள இடைவெளியும். தொடர்ச்சி இன்மையும் தான் அது. ஏன் 3அல்லது 4மாதங்களுக்கு ஒன்றாக ஒழுங்காக வெளியிடலாம்தானே. இது ஒரு வரலாற்று கடமை என்பதை நான் சொல்லியா தெரியவேண்டும். இதழ் 4 ஐ ஆவலுடன் எதிர்பார்க்கும்

**ரவிச்சந்திரன் திருகோணமலை**

---

54ம் பக்க தொடர்ச்சி

அடைய முடியாது. அப்படி ஒன்று கைகூடினால் அது பரந்துபட்ட மக்களுக்கு எந்த அர்த்தத்தையும் கொடுத்து விடமாட்டாது. எனவே தேசிய விடுதலைப் போராட்டமானது ஜனநாயத்திற்கான போராட்டத்தையும் தனக்குள் கொண்டிருக்கும்போது மட்டுமே, அது பரந்துபட்ட மக்களது ஆதரவைப் பெறுவதாகவும், மொத்தத்தில் சமூகப்புரட்சிக்கு வழிவகுப்பதாகவும் அமையும். தமிழ்த் தேசத் திலுள்ள புரட்சிகர சக்திகள் தேசியம், வர்க்கம், பால், சாதியம், அரசியல் முரண்பாடுகளை தனித்துவமாகக் கருதி அவற்றிற்கெதிரான தனித்துவமான போராட்டங்களை முன்னெடுக்கும் போதே, இந்த போராட்டங்களை ஒன்றிணைத்து மேலாதிக்க முரண்பாட்டைக் களைவதற்கான போராட்டமாகிய தேசிய விடுதலைப் போராட்டத்துடன் இணைந்து முன்னெடுக்கும் போதுதான் குறிப்பான முரண்பாடுகளுக்கான தீர்வும், முழுமையான சமூக மாற்றமும் கைகூடும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## அடிக்குறிப்புகள்

1. *பொருளாதார வாதம்* (Economism)

தொழிலாளர்கள் அரசியல் போராட்டங்களில் ஈடுபடாமல் பொருளாதார கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்க போராட்டங்களில் மட்டும் ஈடுபடும் ஒரு நடைமுறையைக் குறிக்கத்தான் லெனின் முதலில் பொருளாதார வாதம் என்ற பதத்தை செயற்பாட்டு மட்டத்தில் பயன்படுத்தினார். ஆனால் அவர் பிற்காலத்தில் கோட்பாட்டு மட்டத்திலும் இந்த பதத்தைப் பிரயோகிக்கலானார். பொருளாதாரத்தை சமூகத்தின் சாரமாக காண்பது, சிக்கலான பிரச்சினைகளை பொருளாதாரம் என்ற ஒரே காரணியால் விளக்கிவிட முனைவது போன்றவற்றை இதன் மூலம் குறிப்பிட்டார். தற்போது இந்த கோட்பாட்டு மட்டத்திலேயே பொருளாதார வாதம் என்பது அதிகம் விவாதிக்கப்படுகிறது.

2. *மானுட வாதம்* (Humanism)

மானிட இயல்பு என்ற ஒன்றை அனைவருக்கும் பொதுவான அம்சமாக மானுடவாதம் வலியுறுத்துகிறது. மனிதரே வரலாற்றைப் படைப்பதாக மானுடவாதம் கூறுகிறது. சமூக உருவாக்கத்தை உறவுகளாக, கட்டமைப்புகளாக காணத் தவறுகையில் இதுவோர் சித்தாந்தமாக இருக்கிறதே அன்றி செயலுக்கு வழிகாட்டும் கோட்பாடாக அமையமுடியாது. அல்துாசரின் கருத்துப்படி மானுடவாதம் என்பது ஒரு சித்தாந்தமாகும். மார்க்சியமானது மானுடவாத எதிர்ப்பு கோட்பாடாகும். கோட்பாட்டு ரீதியாக எதிர் மானுடவாதமாகும். மனிதர்கள் வரலாற்றைப் படைக்கவில்லை. அந்த நிகழ்ச்சிப் போக்கின் காரணிகள் மனிதர்கள் அல்ல.

சமூக யதார்த்தம் பற்றிய விஞ்ஞான அறிவானது மனித சாரம் அல்லது மனித இயல்பு என்ற கருத்தாக்கங்களை உள்ளடக்கிய மானுடவியலிலிருந்து உருவாக முடியாது. மாறாக இப்படிப்பட்ட ஒரு அறிவுக்கு மனிதன் பற்றிய தத்துவார்த்த ஐதிகங்கள் சாம்பலாவது முன்நிபந்தனையானது. மானுட வாதமானது ஒரு சித்தாந்தம் என்ற வகையில் இன்னும் ஒரு பாத்திரத்தைக் கொண்டுள்ள போதிலும் விஞ்ஞான நோக்கில் அதன் நிராகரிப்பு முழுமையானதும் ஐயத்திற்கிடமற்றதுமாகும்.

3. *வரலாற்றுவாதம்* (Historicism)

வரலாறு மனித சக்தியால் உருவாக்கப்பட்டு கொண்டே வருகிறது என்கிறது வரலாற்று வாதம். சமூகம் என்பது அதன் படைப்பாளனான தன்னிலையாக(Sulsject) குறுக்கி விடுகிறது. முழுமை என்பதை மொத்த மானுட முழுமையாக குறுக்கி விடுகிறது. கட்டமைப்புகள் என்ற கறாரான பார்வை அதனிடம் கிடையாது. உற்பத்திமுறை, உற்பத்தி உறவுகள் என்பவற்றிற்கு துணையான பாத்திரத்தையே வழங்குகிறது. வரலாற்று வாதமானது பல்வேறு செயற்பாடுகளின் தனித்துவமான அம்சங்களை கருத்திற் கெடுப்பதில்லை. கோட்பாட்டை ஏனைய செயற்பாடுகளுடன் சேர்த்து ஒட்டுமொத்தமாக சமூக செயற்பாடு எனக் காட்டுகிறது. இதனை praxis என்கிறது. இப்படியாக கோட்பாட்டின் தனித்துவம் நிராகரிக்கப்படுவதால் தன்னியல்பிற்கு கதவைத் திறந்துவிடுகிறது.

4. மார்க்சை அவரது முன்னோடிகளான தத்துவ, அரசியல், பொருளாதார, சோசலிச சந்தனையாளர்களுடன் தொடர்பு படுத்தியும், வேறுபடுத்தியும் பார்க்கும் போக்கு மார்க்சியத்தின் வரலாற்றில் நீண்ட காலமாகவே இருந்து வந்துள்ளது. இந்த முன்னோடிகளின் கருத்துகள் தொடர்பாக விரிவான பரிச்சயமும், இன்னும் இந்த முன்னோடிகளின் கருத்துக்களை மார்க்ஸ் எவ்வாறு வளர்த்தெடுத்தார் எனவும், எந்தெந்த இடங்களில் மார்க்ஸ் இவர்களிலிருந்து வேறுபட்டு நின்றார் எனவும், ஒரே பதங்களையும், கருத்தாக்கங்களையும் மார்க்சும் அவரது முன்னோடிகளும் பயன்படுத்தினாலும்கூட மார்க்ஸ் அந்த பதங்களை, கருத்தாக்கங்களை எந்த அர்த்தத்தில் பயன்படுத்தினார் என்பதையும் புரிந்து கொண்டால் மட்டுமே மார்க்சியத்தை சரியாக புரிந்து கொள்ளமுடியும் என பல மார்க்சியவாதிகள் வலியுறுத்துவர். அந்த விதத்தில் ஹெகல், பயபார்க், ஸ்பினாசோ, போன்ற தத்துவவியலாளர்கள், ரூசோ, மார்க்சியவல்லி, போன்ற அரசியல் அறிஞர்கள், ரிக்காடோ, அடம்சிமித், போன்ற அரசியல் பொருளாதார அறிஞர்கள், ரொபர்ட் ஓவான், சாம்சிமோன் போன்ற கற்பனாவாத சோசலிஸ்ட்டுகள் போன்றோரது எழுத்துக்களைப் படிப்பது மார்க்சியத்தை சரியாக புரிந்து கொள்ள அவசியம் என வலியுறுத்தப்படுகிறது. இந்த பின்புலத்திலேயே மார்க்ஸ் ஹெ!கலுடன் தொடர்பு படுத்தப்படுவதும், வேறுபடுத்தப் படுவதும் புரிந்து கொள்ளப்பட வேண்டும். மேலும் இது குறித்து லெனின் 'ஹெகலுடைய தர்க்கவியலை நீங்கள் முற்றாகக் கற்றுப் புரிந்து கொள்ளாமல் மார்க்சினுடைய மூலதனத்தை ஒரு போதும் விளங்கிக்கொள்ள முடியாது இதன் காரணமாக கடந்த அரை நூற்றாண்டில் மார்க்சிஸ்டுகள் எவருமே மார்க்சை புரிந்து கொள்ள வேயில்லை.' (-லெனின்- தத்துவக் குறிப்பேடுகளில் நூல் தொகு.38) என்றும் குறிப்பிட்டிருந்தார்.

5. கோட்பாடு (Theory), சித்தாந்தம் (Ideology) என்பவற்றிற்கு இடையில் அல்துாசர் திட்டவட்டமான வேறுபாடுகளை வலியுறுத்துகிறார். கோட்பாடு என்பது விஞ்ஞானம் என்ற வகையில் அறிவைத் தருவதை முதன்மையான நோக்கமாகக் கொண்டிருக்கிறது. கருத்துக்கள், நம்பிக்கைகள், விழுமியங்களின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொகுப்பான சித்தாந்தத்தைப் பொறுத்தவரையில் அதன் நோக்கம் அறிவு என்பதைவிட சமூக நடைமுறைப் பயன்பாட்டையே (Social Practical Function) முதன்மைப்படுத்துவதாகவும், பல்வேறு தரப்பினரது நலன்களுக்கு நெருக்கமானதாகவும், இதனால் விஞ்ஞான ரீதியிலான துல்லியமற்றதாகவும் இருப்பதாக அல்தூசர் குறிப்பிடுகிறார்.

கிராம்சியின் 'சித்தாந்த மேலாண்மை' என்பதைத் தொடர்ந்து சென்ற அல்தூசர் முன்வைக்கும் 'சித்தாந்த அரச இயந்திரம்' எனும் கருத்தாக்கமானது மிகவும் குறிப்பான கவனத்தைப் பெறுவதாகும்.

6. கூறுகாண் படிப்பு என்பது ஆழமற்ற, மேலோட்டமான பார்வைக்குள் தெரியும் கூறுகளை மட்டும் படிக்காமல் ஆழமான, எழுதியவரின் நினைவிலி மனத்தை அவரது எழுத்திலிருந்து படிக்கும் படிப்பாகும். இதற்கு சிரமமான உழைப்பு தேவைப்படும். இது பேச்சைப் போலவே மௌனத்திற்குள்ளும் அர்த்தத்தை தேடும் முயற்சியாகும்.

7. ஐரோப்பிய மையவாதமானது மார்க்சியத்திலும், பெண்ணிலை வாதத்திலும் கூட காணப்படுவதாக இன்று மூன்றாம் உலகைச்சேர்ந்த புரட்சியாளர்களும், பெண்ணிலைவாதிகளும் விமர்சிப்பது குறிப்பிடத்தக்கது.

8. *சிந்தனைக் கட்டு* (Propblematic)

கோட்பாடு அல்லது சித்தாந்தத்தில் சிந்தனைக்கட்டு என்பது அடிப்படையான கருத்தாக்கங்களை ஒன்றோடொன்று தொடர்புபடுத்தும் சட்டகமாகும். இந்த தொடர்புகளின் அமைப்பில் குறிப்பிட்ட ஒரு கருத்தாக்கம் வகிக்கும் இடத்தினாலும், பாத்திரத் தினாலும் இந்த சட்டகமானது அந்த கருத்தாக்கத்தின் முக்கியத்துவத்தை நிர்ணயிக்கிறது. இதன் மூலம் ஒவ்வொரு கருத்தாக்கத்திற்கும் அவற்றிற்குரிய குறிப்பான முக்கியத்துவத்தை அளிக்கிறது.

ஒவ்வொரு கருத்தாக்கமும் அந்தந்த சிந்தனைக்கட்டின் பின்பு லத்தில் வைத்தே சரியாக புரிந்து கொள்ளப்படுவதால் இக்கருத் தாக்கங்களை தனித்தனியான கூறுகளா பிரித்தெடுத்துஆராய்வதோ, இன்னோர் சிந்தனைக் கட்டைச் சேர்ந்த அதனை ஒத்த இன்னோர் கூறுடன் ஒப்பிடுவதோ சாத்தியப்பட மாட்டாது. வேறுபட்ட சிந்தனைக் கட்டுகளைச் சேர்ந்த ஒத்த கூறுகளின் ஒற்றுமை என்பது மேலெழுந்தவாரியானது. சில வேளைகளில் இக்கூறுகளிடையே ஒற்றுமை இல்லாமலும் இருக்கலாம். இந்த விளக்கத்தின்படி ஒரு கோட்பாட்டின் அல்லது சித்தாந்தத்தின் சிந்தனைக் கட்டானது அதனால் வழங்கப்படக் கூடிய விடைகளை மட்டும் வரையறுக்கவில்லை. மாறாக எந்தெந்த கேள்விகளை அதன்முன் எழுப்பலாம் என்பதையும் வரையறுக்கிறது. இதனால் சிந்தனைக் கட்டு என்பதுகேள்விகள் அல்லது பிரச்சினைகளின் தொகுதியாகும் (System of Question)ஒரு கோட்பாட்டின் சிந்தனைக்கட்டானது அரிதாகவே வெளிப்படையாகவும், உணர்வு பூர்வமான வடிவிலும் காணப்படுவதால், இதனை ஒரு திறந்த புத்தகம்போல் இலகுவில் வாசித்தறிய முடியாது. மாறாக, இது புதையுண்டு ஆனால் செயற்படும் வடிவில் இருக்கும். இதனை சரியாக பற்றிப் பிடிப்பதாயின் அதனை ஆழத்திலிருந்து தோண்டி எடுக்கவேண்டும்.

சிந்தனைக்கட்டு என்பது சித்தாந்தம், கோட்பாடு பற்றிய மார்க்சிய கோட்பாட்டில் முக்கியமான அல்தூசரின் பங்களிப்பாகும்.

9. அறிவுத் தோற்ற உடைவு (Epistomological Break)

சாதாரண கருத்தானது விஞ்ஞானமாக எழுச்சியுறும்போது ஓர் உடைவு உருவாகின்றது. இது அறிவுத்தோற்ற உடைவு எனப்படுகிறது. இந்த உடைவானது ஒரு இடைவெளி என்றும், முந்திய கருத்துகளில் இருந்து அந்த உடைவு வெட்டி மாறி நிற்பது எனவும் பெர்ச்சவாட் வலியுறுத்துகிறார்.

விஞ்ஞான கருத்து என்பது நேரடி அனுபவ அறிவையும், சமூக பரிச்சையத்தையும் விட்டு விலகி நிற்பது: தனியாக உருவாவது புலனறிவும் அறிவும் வேறுபட்டவை அனுபவப்படிப்பு உருவாக்கும் சூட்சுமமான கருத்தாக்கங்கள் அறிவுத்தோற்றத்திற்கு தடைகளாகும். இவற்றை தாண்டியதும்தான் விஞ்ஞான சிந்தனை உருவாகும்.

சித்தாந்தத்தையும் கோட்பாட்டையும் வேறுபடுத்தும் அல்தூசர், சித்தாந்த சிந்தனைக் கட்டிலிருந்து உடைவு ஏற்பட்டுத்தான் கோட்பாடு உருவாகும் என்கிறார். இதனை அறிவுத்தோற்ற உடைவு என்கிறார்.

10. நேர்க்காட்சி வாதம்; (Positivism) என்பது August Comte (1798-1857) என்பவரால் தொடங்கி வைக்கப்பட்ட ஒரு அணுகுமுறையாகும். இவர் இயற்கை விஞ்ஞானத்தின் விதிகளை சமூகத்திற்கு பிரயோகிக்க முனைந்தார். விஞ்ஞான விதிகளின்படி எதிர்கால சமூக நிகழ்வுகளை அப்படியே எதிர்வு கூறமுடியும் என்றார் தொழில்நுட்ப வளர்ச்சியுடன் கூடவே நடைபெறும் சமூக பரிணாமம் பற்றி பேசினார்.

சமூகம் என்பது உணர்ச்சிகளும் சிந்தனைகளும்உள்ளமக்க ளால் ஆனது. இதனால் இயற்கை விஞ்ஞானத்தின் விதிகளை சமூகத்திற்கு பிரயோகிக்க முடியாது. அத்துடன், இயற்கை விஞ்ஞானம் என்பது கூட குறிப்பிட்ட ஒரு நிகழ்வுடன் சம்பந்தப்பட்ட அனைத்து காரணிகளும் அறியப்படுமானால் அந்த நிகழ்வு எடுக்கக்கூடிய வழியின் உயர்ந்தபட்ச நிகழ்தகவுபற்றி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பேசுகிறதேயொழிய, அந்த நிகழ்வின் வழியை அப்படியே எதிர்வு கூறிவிடுவதில்லை. இந்த நிலையில் இயற்கை விஞ்ஞானத்தின் விதிகளை சமூகத்திற்கு பிரயோகிப்பதும், சமூக நிகழ்வுகளை அப்படியே எதிர்வு கூற முனைவதும் மிகவும் கொச்சைத்தனமான புரிதலாகும். 2ம் அகிலத்திலும் ஸ்டாலினிடமும் இந்தவிதமான போக்குகள் காணப்பட்டதாக விமர்சிக்கப்படுவதுண்டு.

11. அனுபவவாதம் (_Empiricism) ஆனது பார்வையே அறிவு என்கிறது. அனுபவங்களிலிருந்து நேரடியாகவே அறிவு பிறப்பதாக கூறுகிறது. புறப்பொருளை சூட்சுமப்படுத்தினால் அறிவைப்பெற முடியும் என்கிறது. பொருட்களின் சாராம்சத்தைக் காண்பதும், அதனை கையகப்படுத்துவதுமே அறிவு என்கிறது. அறிவு என்பதை அறியப்படும் பொருளின் ஒரு பகுதியாகவே காண்கிறது.

தோற்றப்பாட்டிற்கும் அறிவிற்கும் இடையிலுள்ள ஒருவித தொடர்ச்சியின்மையை மார்க்சியம் வலியுறுத்துகிறது. அனுபவவாதம் கருதுவதுபோல அறிவு என்பது நேரடியாக கண்களுக்கு கிட்டுவதில்லை. ஒரு நிகழ்வில் அனுபவ சாரத்தை புறக்கணித்து, அந்த நிகழ்வை இருப்பிற்குக் கொண்டுவரும் உள்ளார்ந்த தர்க்கத்தைக் கண்டறியும்போதே உண்மையான அறிவு பெறப்படுகிறது. இதற்கு புலனுணர்வுகளை அறிவுத்தோற்ற செயற்பாட்டிற்குட்படுத்துவது அவசியமானது.

சூரியன், பூமியை கிழக்கிலிருந்து மேற்காக சுற்றிவருவதாக எமதுஅனுபவம் கூறுகிறது. ஆனால் இதற்கு மாறாக பூமி தன்னைத்தானே சுற்றிக்கோண்டு சூரியனையும் சுற்றிவருகிறது என்பதுதான் விஞ்ஞான உண்மையாகும்.

12. வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் விஞ்ஞானமானது வேறுபட்ட செயற்பாடுகளின் குறிப்பான தன்மைகளையும், சமூக உருவாக்கத்தின் பல்வேறு சமூக செயற்பாடுகளின் சிக்கலான இணைவில் அவை ஒன்றுடன் மற்றொன்று கொள்ளும் உறவையும் துல்லியமாக கற்கும் ஒரு கோட்பாடாகும்.

இயக்கவியல் பொருள்முதல்வாதம் என்பது பொதுவான கோட்பாட்டுச் செயற்பாட்டில் சாராம்சத்தை கோட்பாட்டு ரீதியாக வெளிப்படுத்துவதாகும். இதன் மூலமே பொதுவாக பொருட்களின் வளர்ச்சிமாற்றம் ஆகியவற்றின் சாராம்சத்தை வெளிப்படுத்துவதாகும். அதாவது கோட்பாட்டின் கோட்பாடாகும்.

பிற்காலத்தில் இயக்கவியல் பொருள்முதல்வாதம் என்பது கோட்பாட்டின் கோட்பாட்டு என்ற கருத்தாக்கத்தை அல்தூசர் அரசியல் தலையீடு எனும் கருத்தாக்கத்தால் மாற்றியமைக்கிறார்.

13. தாம் செய்ததெல்லாம் ஹெகலை தலைகீழாக மாற்றி வைத்தது தான் என்று மார்க்சும், ஏங்கல்சும் கூறினாலும் இந்த கூற்றும்கூட ஒருவித உருவகமேயாகும். ஹெகலின் இயங்கியலானது கருத்துமுதல்வாதத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க தமது இயங்கியலானது பொருள்முதல் வாதத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதைத்தான் அவர்கள் இதன்மூலம் தெரிவிக்கிறார்கள். இதற்குமேல் இந்த உருவகமானது ஹெகலின் இயங்கியலும், மார்க்சின் இயங்கியலும் ஒரே தன்மையானது என்று அர்த்தப்படுத்தப்படக் கூடாது. மார்க்சிய இயங்கியலானது ஹெகலின் இயங்கியலைவிட மிகவும் வளமானதாகும்.

14. இறுகிச் சேர்வது, இடம் பெயர்ப்பது போன்றகருத்துக்கள் பிராய்டிடமிருந்து பெறப்பட்டவை.

15. அமைப்பியல் வாதம் காரசாரமாக விவாதிக்கப்பட்ட 1960கள் – 70களில் சர்வதேச சூழலையும் குறித்துக்கொள்வது முக்கியமானது. இந்தக் காலகட்டத்தில் உலகம் முழுவதுமே புரட்சிகர கொந்தளிப்புகள் தீவிரமாக இடம்பெற்ற காலமாகும். சீனக் கலாச்சாரப் புரட்சி, சேகுவராவின் நடவடிக்கைகள், அமெரிக்காவில் கறுப்பின மக்களது போராட்டம், வியட்னாம் யுத்தமும், அமெரிக்காவில் நடைபெற்ற யுத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும், பெண்ணிலைவாத எழுச்சிகள், மற்றும் ஆபிரிக்காவில் நடைபெற்ற கொலனித்துவ எதிர்ப்பு போராட்டங்கள், ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் நடைபெற்ற மாணவர் எழுச்சிகள் என்று உலகம் முழுவதுமே கொந்தளித்துக் கொண்டிருந்த ஒரு சர்வதேச சூழலில்தான் அமைப்பியல் வாதம் தொடர்பான விவாதங்களும்
நடைபெற்றன.

16 தன்னிலை அல்லது தான்கள் (Subject) என்பது ஒருவர் தன்னை எவ்வாறு உணர்கிறார்: தனக்கும் உலகிற்கும் இடையிலுள்ள உறவை எவ்வாறு விளங்கிக் கொள்கிறார் என்பதைக் குறிக்கிறது. இது அவரது உணர்வு பூர்வமான உணர்வு பூர்வமற்ற சிந்தனைகள், உணர்ச்சிகள் என்பவற்றை உள்ளடக்கியதாகும்.

பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் உயிர்ப்பு வெளிவருகின்றது. உயிர்ப்பின் வளர்ச்சிக்கும் தொடர்ச்சியான வருகைக்கும் உங்கள் பங்களிப்பை எதிர்பார்க்கின்றோம்

வருட சந்தா : 10 பவுண்ஸ்

UYIRPPU
BM BOX 4002
LONDON
WC 1N 3XX



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உயிர்ப்பு

## உங்களுடன் நாம் ...

அமைப்பியல்வாதம் தரும் புதிய வெளிச்சம்' எனும் கட்டுரை சில புதிய வெளிச்சங்களை காட்டமுனைகிறது. தேசியவாதத்தை ஒரு தனியான கட்டமைப்பாக புரிந்து கொள்வது பற்றியும் அதனை ஏனைய கட்டமைப்புகளுடன் இணைத்தும், ஒட்டு மொத்த சமூக மாற்றத்துடன் தொடர்புடைய பல்வேறு சமூக முரண்பாடுகளுக்கும் எதிரான போராட்டங்களை ஒன்று குவிப்பது பற்றியும் இக்கட்டுரை பேசுகிறது. வர்க்க, தேசிய, சாதிய மற்றும் பெண் ஒடுக்கு முறைகளுக்கு எதிரான போராட்டங்களை ஒன்றுக்கொன்று எதிராக நிறுத்துவது ஒன்று மற்றொன்றை பலவீனப்படுத்துவதாக குறை கூறப்படும் நிலையில் ஒட்டுமொத்த சமூகப் புரட்சியில் இந்த போராட்டங்கள் யாவும் எவ்வாறு தவிர்க்க முடியாத வகையிலும் மிகவும் அவசியமாகவும் ஒன்றையொன்று பலப்படுத்தும் வகையில் முன்னெடுக்கப் படவேண்டும் என்பதை இக்கட்டுரை காட்டுகிறது.

எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை சரியாக புரிந்து கொள்வதற்கு இப் போராட்டத்தின் அரசியல் பரிமாணத்தை பற்றிய புரிதல் அவசியமானது. 'விடுதலைப் போராட்டத்தின் அரசியல்' என்ற கட்டுரை இதனை செய்ய முனைகிறது. தேசியம், அல்லது "பாசிசம்" என்ற எளிமையான சூத்திரங்களைக் கடந்து புலிகளை மதிப்பிட முனைகிறது. பேரினவாத அரசுடன் பேசுவதையே தமது ஒரே செயலாகக் கொண்டுள்ள 'முன்னாள்' போராளிகளது நடவடிக்கைகளையும், இக் கட்டுரை கேள்விக் குள்ளாக்குகிறது. இந்த விதத்தில் இக்கட்டுரையானது தவிர்க்க முடியாதவாறு புலிகளது 'சாதனைகள்' பற்றிய விமர்சனமாகவும் அமைகிறது.

புலிகள் இன்று எவ்வளவுதான் மோசமான பாசிச சக்தியாக இருப்பினும் அவர்கள் தம்முள் தேசியவாதக் கூறுகளை கொண்டிருப்பதையும் சுட்டிக் காட்டி மாற்று பற்றிய தேடலுடன் இருப்பவர்களை நோக்கி இக்கட்டுரை அறை கூவுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் உயிர்ப்பு
வெளிவருகிறது.
உயிர்ப்பின் வளர்ச்சியில் உங்கள் பங்களிப்பை
- நிதி உட்பட -
எதிர்பார்க்கின்றோம்.

**UYIRPPU**
BM BOX 4002
LONDON
WC 1N 3XX

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்